வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 70 பக்கங்கள் : 20





07
நரேந்திர மோடியின் கொழும்பு வருகை இலங்கையின் நெருக்கடி தீர உதவுமா?


08
ஓர் இனிய பாடல் என்றும் முடிவதில்லை


09
பிரதமரைப் பார்க்க டில்லி சென்றவர்கள் அவரை சந்திக்காமலே திரும்பினார்கள்


10
அன்பைப் பரிமாறும் தினம் காதலர்களுக்கு மட்டும்தானா?


# பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு வேண்டும்!

## கட்சித் தலைவர்கள் கூட்டாக கோரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 13

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக நிரந்தர தீர்வை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் விசேட கூட்டறிக்கையொன்று நேற்று வெளியிடப்பட்டுள்ளது.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரச பங்காளிக்கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் கூட்டறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

மேலும் சில எம்.பிக்களும் அதில் கைச்சாத்திட்டுள்ளனர். கூட்டறிக்கையின்

19

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பொய்த்துவிட்டது!

## அருட்தந்தை மா.சக்திவேல்

கொழும்பு, பெப். 13

பயங்கரவாத திருத்த சட்டத்தை தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது என அரசியல் கைதிகளை விடுதலை செய் வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிடப்பட்டுள்ள அற்க்கையில்,

பயங்கரவாத திருத்த சட்டத்தை தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கோ அதனால் மீறப்படும் மனித உரிமைகளை

19

# அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் வேலைநிறுத்தத்திலிருந்து விலகல்!

கொழும்பு, பெப். 13

18 தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இருந்து அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் விலக தீர்

19

# சுகாதாரத்துறை ஊழியர்கள் போராட்டம் தொடர்கின்றது

கொழும்பு, பெப். 13

வைத்தியசாலை சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப் படுத்தப் பட்டுள்ள நிலையில், சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

இதன் காரணமாக, வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைகளுக்காக சென்ற நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்

19

# பயங்கரவாதச் சட்டத்துக்கு எதிராக கொழும்பிலும் கையெழுத்து வேட்டை!

கொழும்பு, பெப். 13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்திக் கொழும்பிலும் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கவுள்ளது.

இதன்படி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு, கோட்டை ரயில்நிலையத்துக்கு முன்பாகக் கையெழுத்துத் திரட்டப்

19

# ஜெனிவாவில் போராட்டத்தை கைவிடுகிறது கோட்டாபய அரசு

கொழும்பு, பெப். 13

எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள ஜெனிவா மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் போராட்டத்தை கைவிட்டு, பாதுகாப்பு

19

# சுகாதார ஊழியர்களை மக்கள் தாக்கவேண்டும்

## ஆளும் கட்சி உறுப்பினர் கருத்து

கொழும்பு, பெப். 13

சுகாதார சேவை ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டத்தை விமர்சித்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சி, அதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக மக்கள் பொல்லுகளை

19

# பஸில் நன்றி மறந்தவர்!

## முருத்தெட்டுவே ஆனந்ததேரர்

கொழும்பு, பெப். 13

ராஜபக்ஷ குடும்பத்தில் நன்றியை மறக்காத ஒரே நபர் மஹிந்த ராஜபக்ஷ எனவும் பஸில் ராஜபக்ஷ செய் நன்றி மறந்தவர் என்பதால், அவரை பற்றி பேசுவதற்கு கூட விரும்பவில்லை என நாராஹென்பிட்டி அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

19

# எரிபொருள் பாவனையை குறைக்க கூப்பன் திட்டம் அறிமுகப்படுத்துக!

## வாசுதேவ நாணயக்கார கோரிக்கை

கொழும்பு, பெப். 13

நாட்டில் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் கூப்பன் திட்டத்தை அறிமுகப் படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்படும் போது இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளதாக அவர் மேலும் கூறினார். பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எரிபொருள் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு காண முடி யும் எனவும் அவர் சுட்டிக்

19

# பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சவால்கள் பொருட்டல்ல!

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் போது எதிர்கொள்ளும் சவால்களின் தன்மை மற்றும் அளவு என்பன ஒரு பொருட்டல்ல என்று, ஜனாதிபதி

19



# எரிபொருள்களின் விலையை உயர்த்த மீண்டும் கோரிக்கை

கொழும்பு, பெப். 13

எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், அரசிடம் மீளவும் யோசனை முன்வைத்துள்ளது.

விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு இந்த யோசனையை அனுப்பி வைத்துள்ளதாக, கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும், குறித்த யோசனை தொடர்பில் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ள நிலையில்,

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

சமூக வலைத்தளங்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற விவாத ஒத்திவைப்பு விவகாரம்தான் கடந்த சில நாட்களாக பேசுபொருளாகியிருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்த இந்திய வெளியுறவுச் செயலர், இலங்கைத் தமிழர்களின் நன்மை கருதி இந்தியா ஏற்பாடுசெய்து தந்த பதின்மூன்றாவது திருத்தத்தை தமிழ் தரப்பு ஏற்றுக்கொள்ளாதபோது, நாங்கள் எப்படி அதனை அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கமுடியும் என்ற பாணியில் கருத்துச் சொன்னதோடு, தமிழர் தரப்பிலிருந்து ஒற்றுமையாக ஒரு கோரிக்கை வைக்கப்படுவது நல்லது என்று பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்.

அதன் அர்த்தம், பதின்மூன்றைத்தான் எமது தீர்வாக நாம் முன்வைக்கவேண்டும் என்பதல்ல. அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கின்ற ஒரு விடயத்தை அமுல்படுத்த நீங்கள் கோருங்கள் என்றுதான் அவர் கோரிக்கை விடுத்தார்.

உடனே அந்த விவகாரத்தை கையில் எடுத்தது ரெலோ.

அண்மையில் சில காலமாக தமிழரசு சுமந்திரன் எவ்வாறு தனி ஆவர்த்தனம் செய்துகொண்டு அரசியல் செய்கிறாரோ, அதற்கு போட்டியாக ரொலோவும் சில முன்னெடுப்புக்களை செய்துவருவதை அவதானிக்கலாம். சுமந்திரன் மேற்குலகின் தூதரகங்களுக்கு சென்று வந்தால், தாமும் தனியாக துதரகங்களுக்கு போவதை ரெலோ அண்மைக்காலமாக தொடர்ந்து செய்து வருகின்றது. இந்நிலையிலேயே இந்தியாவின் கோரிக்கைக்கு செயல்வடிவம் கொடுக்க தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்க முன்வந்ததும், அதன் பலனாக ஆறு கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியதும் பழைய சங்கதி.

அப்போது, துள்ளிக்குதித்த முன்னணி, இந்த ஆறு கட்சிகளையும் பார்த்து இந்திய அடிவருடிகள் என்று பகிரங்கமாக குற்றம் சாட்டியதோடு நின்று விடவில்லை. கூடவே, யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்றையும் நடத்தி முடித்தது.

இந்தியாவின் விருப்பத்தை நிறைவுசெய்பவர்கள் இந்திய அடிவருடிகள் என்பதே முன்னணியின் கோசமாக இருந்தது.

இதே முன்னணி, இப்போது இந்தியாவின் விருப்பத்தை நிறைவேற்றியிருப்பதே சமூக வலைத்தளங்களில் கண்டனக் கணைகளை கிளப்பிவிட்டிருக்கின்றது.

ஆனால் இந்த ஊர்க்குருவி அதனைக் கண்டிக்கப் போவதில்லை. அவர்கள் பாஷையிலேயே சொல்வதென்றால், அவர்களும் இந்த பாழாய்ப்போன பூகோள அரசியலை இப்போதாவது புரிந்துகொள்ள முன்வந்திருப்பதை நினைத்து அவர்களைப் பாராட்டவே ஊர்க்குருவி விரும்புகின்றது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக இலங்கை கடற்படை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இலங்கை அரசு கண்டும் காணாமலும் இருப்பதாகவும் கூறியே பாராளுமன்றில் விவாதம் ஒன்றிற்கு முன்னணி கோரிக்கை விடுத்திருந்தது.

அதன் நோக்கம் முற்றுமுழுதாக இலங்கை அரசை குறை கூறுவதும், அதுவிடயத்தில் நடவடிக்கை எடுக்கக் கோருவதுமே.

பின்னர், இந்திய தூதரக அதிகாரி ஒருவர் விடுத்த கோரிக்கையின் பேரில் தமது பாராளுமன்ற விவாதத்தை ஒத்திவைத்திருக்கின்றது முன்னணி.

இந்தப் பிரச்னையை தீர்த்துவைப்பதாக அவர்கள் வழங்கிய உறுதிமொழியை ஏற்று அதனை தவிர்த்திருக்கின்றதாம்.

இது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை மகிழ்ச்சிக்குரியதே.

ஒன்று, இந்தியாவின் உறுதிமொழியை ஏற்றுக்கொள் பவர்களை இனி இந்திய அடிவடிகள் என்று அவர்கள் சொல்லப் போவதில்லை.

மற்றையது, இந்திய தூதரகத்துடன், அல்லது தூதரக அதிகாரிகளுடன் தொடர்பில் இருப்பவர்கள் இந்திய அடிவருடிகள் என்ற இவர்களின் சூத்திரம் இனி செல்லுபடியற்றதாகிவிட்டது.

இதுவே ஊர்க்குருவியின் சந்தோஷத்திற்கு காரணம்!

முன்னணியின் செயலாளர் கஜேந்திரன், பாராளுமன்றத்தில் பின்னர் உரையாற்றும்போது ஒரு முக்கியமான தகவலை பதிவுசெய்திருக்கிறார்.

“வட பகுதியில் இருக்கும் எங்களின் மீனவர்களை கடற்றொழிலில் இருந்து வெளியேறச் செய்து, அந்த கரையோர பிரசேத்தை சிங்கள, பௌத்த பிரதேசங்களாக மாற்ற அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகின்றது” என்பது அவரது குற்றச்சாட்டு. அதாவது இந்திய மீனவர்களை அனுமதிப்பது இதற்காகத்தான் என்பதையே அவர் சொல்ல வருகின்றார்.

தமிழக மீனவர்கள் மடிவலைகளைப் பாவித்து எமது மீன் வளங்களையே முற்றாக அழித்துவிடுகின்றனர் என்பதுதான் நமது மீனவர்கள் முன்வைக்கும் பிரதான குற்றச்சாட்டு. இப்படி அனுமதித்துவிட்டு, மீன்வளம் முற்றாக அழிந்துபோன கடலை நம்பி தனது தெற்கு மீனவர்களை குறியேற்ற அரசு நினைப்பதாக அவர் சொல்ல வருகிறார் போலும். இது, அவர் பாராளுமன்றில் முன்னர் ஒருதடவை திருவாய்மலர்ந்த தீர்க்கதரிசனம் மிக்க வார்த்தை ஒன்றையே மீண்டும் நினைவுபடுத்துகின்றதோ?

- ஊர்க்குருவி.

## அரச சொத்தை துஷ்பிரயோகம் செய்யும் அமைச்சர்கள், எம்.பிக்கள் பதவி இழப்பர்

கொழும்பு, பெப்.

அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்களின் மகன்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் வாகனங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியிருப்பதும், அல்லது சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுத்தியிருப்பதும் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது எம்.பி பதவியை உடனடியாக நீக்க அரசாங்கம் முடிவு எடுத்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களின் மகன்கள் அல்லது உறவினர்கள் அரச வாகனங்கள் அல்லது பிற அரசு சொத்துக்களை தவறாக பயன்படுத்தியதாக 34 வழக்குகள் பதிவாகியுள்ள தாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச வாகனங்கள் அல்லது பிற சொத்துக்களை தவறாக பயன்படுத்தும் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களின் மகன்கள், மனைவிகள் அல்லது உறவினர்கள் குறித்து உடனடியாக தகவல் கேட்டு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என அரசாங்க உளவுத் துறைக்கு ஏற்கனவே அறிவித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்க வாகனங்கள் அல்லது ஏனைய சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் உறவினர்கள் 16 பேர் தொடர்பில் அரசாங்கத்துக்கு ஏற்கனவே தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (அ)

## அரசியல் பழிவாங்கல்கள் குறித்து விசேட விசாரணைகள் விரைவில்!

கொழும்பு, பெப். 13

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து அமுல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகள் இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் நீதிபதி சஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்னவினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு 1,971 முறைப்பாடுகளை ஆராய்ந்து, மூன்று தொகுதிகள் மற்றும் 2,043 பக்கங்களைக் கொண்ட இறுதி அறிக்கையை வெளியிட்டது. (அ)

## அந்நிய செலாவணிக்கு நிலவும் தட்டுப்பாடு தற்காலிகமானது!

கொழும்பு, பெப். 13

நாட்டில் அந்நியச் செலாவணிக்கு நிலவும் தட்டுப்பாடு தற்காலிகமானது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின் போதே நிதி அமைச்சர் இந்த விடயத்தை கூறினார்.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு விநியோகிப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு, முதல் தடவையாக நிதி அமைச்சில் நேற்று முன்தினம் கூடியது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் ஆடைகள் மற்றும் உணவுப்பொருட்களை எவ்வித தட்டுப்பாடும் இன்றி மக்களுக்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பில்இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

பால் மா, எரிவாயு, கோதுமை மற்றும் சிமெந்துக்கு ஓரளவு தட்டுப்பாடு காணப்பட்டாலும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் போதுமானளவு இருப்பதாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணங்கள், நுகர்வோருக்கு உரிய முறையில் கிடைக்காமை தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

சில வர்த்தகர்கள் அரசாங்கத்திடமிருந்து சலுகை விலையில் பொருட்களை கொள்வனவு செய்து, அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமையும் கூட்டத்தின்போது வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களை உரிய முறையில் நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்கும் பொறிமுறையை வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுத்துவது குறித்தும் இந்தக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டது. (அ)

## மேலும் 390 பேர் குணமடைவு!

கொழும்பு, பெப். 13

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 390 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 594,738 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 625,804 ஆக அதிகரித்துள்ளது.

## வட்டுக்கோட்டை விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, அராலி செட்டியார்மடம் சந்தியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அவருடன் பயணித்த மற்றைய இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்தில் உடையார்கட்டு - விசுவமடு பகுதியைச் சொந்த இடமாகக்கொண்டு, வட்டு. மேற்கு, வட்டுக் கோட்டைப் பகுதியில் வசித்துவந்த கந்தசாமி நிரோஜன் (வயது 22) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

வட்டு மேற்கு - வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த அல்பினோ வசந்த் (வயது 20) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டுப்படுத்த முடியாத அதிவேகம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
13.02.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## அரசாங்கத்துடனிருக்கும் தமிழ் கட்சிகள்?

காணிகள் அபகரிக்கப்படுவது, தமிழர்களின் வரலாற்று வாழ்விடத்தில் புத்தர் சிலை வைப்பது, தொல்பொருள் ஆய்வென்னும் பெயரிலான தலையீடுகள் - என அடிக்கடி பல்வேறு பிரச்னைகளுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுக்கின்றனர். கொக்கிளாய் பகுதியில் காணிகள் அபகரிக்கப்பபடுவதாக அப்பகுதி மக்கள் வீதியில் நிற்கின்றனர். இவ்வாறான பிரச்சினைகளின் போது, வழமைபோல், தமிழ் தேசிய கட்சிகளும், சிவில் சமூகக் குழுக்களும் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். ஆனால் இந்த இடத்தில் பிறிதொரு தரப்பை நோக்கி கேள்வி கேட்க வேண்டியிருக்கின்றது. அதாவது, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே - இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

ஜனாதிபதித் தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின் போதும் பொதுஜன பெரமுனவை சில தமிழ் கட்சிகள் ஆதரித்திருந்தன. அரசாங்கத்துடன் இணைந்து பிரச்னைகளை தீர்க்கலாம் என்பதுதான் அவர்களது நிலைப்பாடாக இருந்தது. அவ்வாறான வாக்குறுதிகளையே அவர்கள் மக்களுக்கு வழங்கியிருந்தனர். ஒரு கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பதும் அல்லது எதிர்ப்பதும் அவர்களது நிலைப்பாடு. ஆனால் அரசாங்கத்துடன் இணைந்திருப்பவர்கள், அரசாங்கத்துடன் வாதிட்டு, தேவையான அழுத்தங்களை கொடுத்து, மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முயற்சிக்கின்றனரா? அவ்வாறு முயற்சித்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் தொடர் கதையாக இருக்கின்றனவா?

அரசாங்கத்தில் தங்களுக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி இவ்வாறான பிரச்னைகளை அரச ஆதரவு கட்சிகள் தீர்த்திருக்க வேண்டும் அல்லது, தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அவ்வாறான சான்றுகள் எதனையும் எம்மால் காண முடியவில்லை. அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ் கட்சிகளை நம்பி வாக்களித்த மக்கள் கூட்டமொன்றும் இருக்கின்றது. அரசாங்கத்துடன் இருப்பவர்கள் ஆகக் குறைந்தது தங்களுக்கு வாக்களித்த மக்களுக்காகவாவது சில விடயங்களில் முன்னேற்றங்களை காண்பித்திருக்க வேண்டும். வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் வாக்குகளில் நாடாளுமன்றம் சென்ற அரசாங்க - ஆதரவு தமிழ் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்காக அழுத்தம் கொடுக்க வேண்டும். அரசாங்கத்தின் தவறான கொள்கைகளை தடுக்க முன்வர வேண்டும்.

முஸ்லிம் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கும், தமிழ் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுண்டு. முஸ்லிம் கட்சிகள் தங்களுக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி, அரசாங்கத்திற்குள் தங்களுடைய சமூகத்திற்கான அழுத்த சக்தியாக தொழிற்படுகின்றனர். இதன் மூலம் அவர்களது சமூகம் தொடர்பான ஏற்க முடியாத நவடிக்கைகளை முளையிலேயே கருக்கிவிடுகின்றனர். ஆனால் அரசாங்க - ஆதரவு தமிழ் கட்சிகளால் அவ்வாறு செயல்பட முடியவில்லையே! முஸ்லிம் கட்சிகள் எங்கிருந்தாலும், அவர்களது தனித்துவத்தை இழக்காமலேயே இருக்கின்றனர். இதுதான் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையிலுள்ள அடிப்படையான வேறுபாடு.

# உக்ரைன் மீது தாக்குதல் தொடுக்க தயாராகிவிட்டதா ரஷ்யா?

உக்ரைன் மீது ரஷ்யா எப்போது வேண்டுமானாலும் படையெடுக்கலாம் என்றும் அமெரிக்க குடிமக்கள் உடனடியாக உக்ரேனைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

வேறு சில நாடுகளும் தங்கள் நாட்டினர் உக்ரேனில் இருந்து வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளன. அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையால், பிற நாடுகளும் உக்ரேனில் உள்ள தங்களின் குடிமக்களுக்கு புதிய எச்சரிக்கைகளை விடுத்துள்ளன.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள், தங்கள் குடிமக்கள் விரைவில் உக்ரைனில் இருந்து வெளியேறுமாறு வலியுறுத்தியுள்ளன.

ரஷ்யாவும் அமெரிக்காவும் உக்ரைன் தலைநகர் கீவில் இருந்து தங்கள் தூதரக ஊழியர்களை அழைத்து கொள்கின்றன. அமெரிக்க தூதரக ஊழியர்கள் போலந்து எல்லைக்கு அருகில் உள்ள நாட்டின் மேற்குப் பகுதிக்கு இடம் பெயர்வார்கள் என்று அசோசியேட்டட் பிரஸ் தெரிவிக்கிறது.

அதே நேரத்தில் ரஷ்ய அரசு செய்தி நிறுவனமான RIA நோவோஸ்டி, ரஷ்ய தூதரக அதிகாரிகள் உக்ரைனில் உள்ள தங்கள் தூதரகத்தை விட்டு வெளியேறுவதாகத் தெரிவிக்கிறது. ஆனால் இந்த செய்தி குறித்து இரு நாடுகளும் உறுதிப்படுத்தவில்லை.

எவ்வாறாயினும், உக்ரைனுக்கான பிரிட்டன் தூதர் மெலிண்டா சிம்மன்ஸ், தானும், ஒரு முக்கிய குழுவும் கீவில் தங்கியிருப்பதாக ட்வீட் செய்துள்ளார். உக்ரைன் எல்லைப் பகுதிகளில் ரஷ்ய ராணுவ நடவடிக்கையின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. ஒரு வேளை உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் அங்குள்ள அமெரிக்கர்களை மீட்க தாயக படைகளை அனுப்ப இயலாது என்று பைடன் கூறியிருக்கிறார். அந்த பிராந்தியத்தில் 'நிலைமை விரைவாக மோசமாகக் கூடும்' என்றும் அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

எல்லைக்கு அருகே ஒரு லட்சம் படையினரை குவித்துள்ள போதிலும், உக்ரைன் மீது படையெடுப்பதற்கான எந்தவொரு திட்டமும் தன்னிடம் இல்லை என்று ரஷ்யா திரும்பத்திரும்ப மறுத்து வருகிறது. ஆனால் தமது அண்டை நாடான பெலாரஸுடன் மிகப் பெரிய அளவிலான இராணுவ பயிற்சியை தொடங்கியிருக்கிறது.

இதற்கிடையில், உலக தலைவர்கள் பலரும் உக்ரேன் மீதான தற்போதைய நெருக்கடியைத் தணிக்க தங்களுடைய ராஜீய முயற்சிகளை மிக தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு உக்ரைனில் பிரிவினைவாத மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் தலைவர்களுடன் நடந்த ஒன்பது மணி நேர பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியவில்லை என்று ரஷ்யாவும் உக்ரைனும் கடந்த வியாழன் தாமதமாக அறிவித்தன.

தற்போது ரஷ்யாவின் கடற்படை, போர் ஒத்திகைக்கு தயாராகி வரும் நிலையில், தமது படையினர் கடலுக்கு செல்வதை ரஷ்யா தடுத்து வருவதாக உக்ரைன் குற்றம்சாட்டியது.

இது குறித்து உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா கூறுகையில், "அசோஃப் கடல் முற்றிலும் முடக்கப்பட்டு விட்டது. கருங்கடல் பாதையை ரஷ்ய படையினர் கிட்டத்தட்ட முழுமையாக துண்டித்து விட்டனர்" என்று கூறினார்.

உக்ரைனின் தெற்கே உள்ள கருங்கடல், அசோஃப் கடல் ஆகிய இரு கடல்களில் அடுத்த வாரம் ரஷ்யாவின் கடற்படை போர் ஒத்திகை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், அசோஃப் கடலை முடக்கும் முடிவை ரஷ்யா திரும்பப் பெற்றுக் கொண்டதாக உக்ரைனிய ஊடக தகவல்கள் கூறுகின்றன. அதே சமயம், கருங்கடலின் இரண்டு பகுதிகள் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆறு நாட்களுக்கு மூடப்படும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை கிரிமியாவில் ரஷ்ய கடற்படை கப்பல்கள் ஏற்கனவே பயிற்சியை தொடங்கி விட்டன. உக்ரைனின் வடக்கே பெலாரூஸிலும் 10 நாட்களுக்கான இராணுவ பயிற்சிகள் தொடர்ந்தன.

ரஷ்யா உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு படையெடுப்பை முயற்சித்தால், தற்போது பயிற்சியில் ஈடுபட்டு வரும் ரஷ்ய படையினரை விரைவாக உக்ரைன் தலைநகரான கீஃபுக்கு அனுப்பி வைத்து அந்நாட்டின் மீதான தாக்குதலை ரஷ்யா எளிதாக்கும் என்ற அச்சம் உள்ளது. ஆனால், எல்லையில் நடக்கும் போர் ஒத்திகை முடிந்த பிறகு அந்த படையினர் நிரந்தர தளங்களுக்குத் திரும்பும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.


தங்களுடன் ஆழ்ந்த சமூக மற்றும் கலாசார உறவுகளைக் கொண்ட முன்னாள் சோவியத் குடியரசான உக்ரைன், ஒரு நாள் மேற்கத்திய பாதுகாப்புக் கூட்டணியான நேட்டோவில் இணையலாம் என்பதை ரஷ்யா ஏற்கவில்லை. அத்தகைய யோசனையை கூட நிராகரிக்க வேண்டும் என்கிறது ரஷ்யா.

2014ஆம் ஆண்டு முதல் உக்ரைனின் கிழக்கு டான்பாஸ் பகுதியில் மிகவும் கொடூரமான முறையில் நடந்த ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு ரஷ்யா ஆதரவளித்து வருகிறது. அப்போது முதல் எல்லையில் நடந்த மோதல்களில் 14,000 பேர் இறந்தனர். அதில் பலரும் பொதுமக்கள்.

கிழக்கு உக்ரைனில் மோதலை முடிவுக்குக் கொண்டுவர மின்ஸ்க் ஒப்பந்தங்கள் என்று அழைக்கப்படும் உடன்படிக்கை மீது புதுப்பிக்கப்பட்ட கவனம் செலுத்தப்பட்டால், அது நெருக்கடியைத் தணிக்க ஒரு அடிப்படையாகப் பயன்படுத்தப்படலாம் என்று சில கருத்துக்கள் உள்ளன.

பி.பி.சி.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்

## 13.02.2022 – 19.02.2022

பெப்ரவரி. 13 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - மாசி - 01
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : துவாதசி

### மேஷம்

[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நோய் பாதிப்புகள் நீங்கும். தொற்று வராமல் பார்த்துக் கொள்வீர்கள். மருத்துவ செலவு குறையும்.வெற்றிகள் தேடி வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குழந்தைகளின் செயல்பாடுகளால் சந்தோஷம் உண்டு. வண்டி வாகன வசதி ஏற்படும். குடும்பம் குதூகலமாக இருக்கும். புதிய நண்பர்களால் நன்மை உண்டாகும்.பேச்சில் கடுமை வராதபடி கவனமாக இருக்கவும். அப்பாவின் ஆரோக்கியத்தில் முன்பிருந்த பிரச்னைகள் மாறி ஆரோக்கியம் மீளும். பணபிரச்னை தீரும்.

### ரிஷபம்

[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

வேலை விஷயமாக எடுக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும், சந்தோஷமும் ஏற்படும். எந்த பிரச்னை வந்தாலும் சமாளிப்பீர்கள். வேலையில் கவனம் தேவை. பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்து படிப்படியாக நன்மை காண்பீர்கள். மருத்துவச் செலவுகள் முடிவுக்கு வரும். வேலை செய்யும் இடத்தில் பொறுமை தேவை. மறதி ஏற்பட வாய்ப்பிருப்பதால் எந்தச் செயலிலும் கவனமாக இருங்கள். தங்க நகைகளை பாதுகாப்பாக வைத்திருங்கள்.

### மிதுனம்

[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

ஆரோக்கியமும் வசீகரமும் அதிகரிக்கும். பதவி உயர்வு கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும் கவலைகள் நீங்கும். நிறைய உழைத்து அதன் மூலம் நல்ல பலன் அடைவீர்கள். முன்கோபத்தை குறைத்துக்கொண்டு நிம்மதி காண்பீர்கள். உங்களுக்கு பண வரவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் நிம்மதி உண்டு. சவால்களில் ஜெயித்து காட்டுவீர்கள். எதையும் சமாளிக்கும் தைரியம் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டு. கணவன் மனைவிக்கு இடையே இருந்த பிரச்சினைகள் நீங்கும். லாபம் கிடைக்கும்.

### கடகம்

[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். பழைய நண்பர்களின் உதவி கிடைக்கும். வீண் விரயங்கள் ஏற்படாதபடி திட்டமிட்டுச் செலவு செய்யுங்கள். உடல்நலனில் அலட்சியம் வேண்டாம். உணவுக்கட்டுப்பாடு அவசியம். நேரம் தவறிக் கடமைகளைச் செய்யாதபடி முன்னரே திட்டமிடுங்கள். சோம்பலும் சோர்வும் அண்டாமல் சுறுசுறுப்புடன் செயல்படுங்கள். கணவன், தான் என்ற அகங்காரம் தலைதூக்காதபடி கவனமாக இருங்கள். வியாபாரம் உங்கள் கவனக்குவிப்புக்கு ஏற்ற பலன் தரும்.

### சிம்மம்

[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இரவு நேரப் பயணங்களை தவிர்க்கப் பாருங்கள். வேலை செய்யும் இடத்தில் சவால்கள் வந்தாலும் அவற்றை சமாளிப்பீர்கள். பிள்ளைகளால் செலவுகள் வரலாம். வளர்ச்சி அதிகரிக்கும். மனதில் நினைப்பது நடக்கும். திடீர் லாபங்கள் வரும். உழைப்பினால் மட்டுமன்றி அதிர்ஷ்டத்தாலும் நன்மை, லாபத்தை எதிர்பார்க்கலாம். சமூகத்தில் கவுரவம் அதிகரிக்கும். அதிகாரமுள்ள பதவி கிடைக்கும். வீடு, மனை வாங்கலாம். பிள்ளைகளின் கல்விக்கான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டாகும்.

### கன்னி

[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உங்களின் மீது அக்கறை மிக்கவர்களின் ஆதரவு கிடைக்கும். எடுத்த முயற்சி நிதானமாகவும் படிப்படியாகவும் வெற்றி பெறும். சேமிக்கும் எண்ணம் உருவாகும். சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தெய்வப் பற்றும் ஆன்மிக சிந்தனையும் மேலோங்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். கூட்டுத் தொழிலில் லாபம் சுமாராக உண்டு. தாய்வழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் சிறிய அளவில் கிடைக்கலாம்.சிந்தித்து நிதானமாகச் செயல்படுவோருக்கு பிரச்னை வராது.

### துலாம்

[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

லாபம் அதிகரிக்கும். பெற்றோரின் உடல்நலனில் அக்கறை கூடுதலாகும். பேச்சு வார்த்தையில் உற்சாகம் அதிகரிக்கும். வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். சவால்களை ஜெயித்து காட்டுவீர்கள். வீடு இடமாற்றம் ஏற்படும். வண்டி வாகனம் வாங்கலாம். முனைப்புடன் செய்யும் செயல்கள் நற்பலன்களைத் தரும். கவலை ஒன்று விடாமுயற்சியால் முயற்சியால் முடிவுக்கு வரும். வாகனங்களை செப்பனிட்டுக் கொள்வீர்கள். உழைப்பால் நன்மைகளை அடைவீர்கள். தந்தையின் தேவையறிந்து உதவுவீர்கள்.

### விருச்சிகம்

[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தொழில், பணி விஷயமாக வெளியூர் செல்ல வேண்டியிருக்கும். பாக்ய ஸ்தானத்தில் சுக்கிரன் சாதமாக பயணம் செய்கிறார். வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பழைய கடன்களை அடைப்பீர்கள். வீடு, நிலம் வாங்கி விற்கும் முயற்சி சிறப்பான பலனை அளிக்கும். கணவர், மனைவியின் எல்லா செயல்களும் விடாமுயற்சியின்பேரில் சிறப்படையும். எதிர்பாலினத்தினரால் நன்மை உண்டாகும். கவரும் தன்மை அதிகரிக்கும். குடும்பத்தில் உற்சாகம் நிலவும். பணியிடத்தில் இருந்த சூழ்நிலை மாறி நிம்மதி பெருகும்.

### தனுசு

[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பிள்ளைகளால் சந்தோஷம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. பெற்றோர் நலனில் அக்கறை காட்டுங்கள். வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். பேச்சில் கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். செல்வாக்கு கூடுதலாகும். உடன் பணிபுரிவோர் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். தொழிலில் லாபம் பெருகும். சகோதரர்கள் வாழ்க்கையில் உயர்வர். பிறருக்கு உதவி செய்து ஆசி பெறுவீர்கள்.

### மகரம்

[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பணியிடத்தில் அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நியாயத்துக்குப் புறம்பாக செயல்படும்படி யார் தூண்டினாலும் புறக்கணியுங்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நன்மையளிக்கும். நண்பர் வட்டம் விரிவடையும். உறவினரின் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில் அக்கறை செலுத்தினால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். பணியிடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். நண்பர்களால் உதவி கிடைக்கும். எந்த விஷயத்தையும் இப்போது செய்வோமா பிறகு செய்வோமா என்று யோசிப்பீர்கள்.

### கும்பம்

[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தொழிலில் லாபம் மிதமாக இருக்கும். பேச்சில் அகங்காரம் தலைதூக்காமல் கவனமாக இருங்கள். நண்பர்கள் மீது நம்பகத்தன்மை அதிகரிக்கும். திருமண பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடியும். சிலருக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும். நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். பொதுவாழ்வில் புகழ் கூடும்.செலவுகள் அதிகரித்தாலும் சமாளிப்பீர்கள். தந்தையின் வாழ்வில் சந்தோஷம் கூடும். திடீர் அதிர்ஷ்டம் கைகொடுக்கும். எதிர்பாராத நன்மைகள் சேரும்.

### மீனம்

[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

வீடு, மனை வாங்க இந்த வார கிரகநிலை சாதகமாக உள்ளது. பணியிடத்தில் அக்கறை தேவை. அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை மட்டுமே நம்புவது நல்லது. பூர்வீகச் சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொல்லை தந்த நபர்களின் பலம் குறையும். தொலைபேசி மூலம் தித்திக்கும் செய்தி வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் ஆதரவோடு தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள். சமூகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய தொழில் சம்பந்தமான பேச்சில் நல்ல முடிவு கிடைக்கும்.

# நியாயப் பகிர்வு

பகிர்வு -16

**கணபதி சர்வானந்தா**

*மீண்டும் ஒரு முறை முகம் பார்த்துப் பேச வேண்டி இருக்கும் என்ற ஒரேயொரு காரணத்திற்காகவே எம்மிடத்தில் இருந்து பிறக்கும் கோபங்கள் பல தற்கொலை செய்து கொள்ளுகின்றன என்று ஒரு குறிப்பை முகநூலில் கண்டேன்.*

*தற்கால சமூக நடைமுறைகளைப் பார்க்கும் தோறும் கோபங்கள் மட்டுமல்ல தர்மங்களும் தற்கொலை செய்துவிடுவதாகவேதான் எண்ணத் தோன்றுகிறது. மீண்டும் அவர்களைச் சந்திக்க வேண்டிவரும் என்ற காரணத்துக்காகக் கருத்துச் சொல்வதற்குக் கூடத் தயங்குகிறோம். உண்மைகளைப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுகிறோம்.*

*ஒரு தனிமனிதன் தனிப்பட்ட தன் வாழ்க்கையில் இப்படி நடந்து கொள்வதில் தவறில்லை என்று எடுத்துக் கொள்வோம். பொது வெளியில், பொது வாழ்க்கையில். சமூக நிறுவனங்களில் உள்ளவர்கள் இது போன்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளுவதென்பதை “குற்றம்” என்றே எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.*

*பொது வெளி என்பது நூறு வீதம் நியாயத்துக்குட்படுத்த வேண்டியது. தர்மம் மட்டுமே தலையோங்கி நிற்க வேண்டும். அங்கே சுய நலனுக்கோ, பக்கச் சார்புக்கோ இடமளிக்கலாகாது. அதுவும் பொது என்று வந்துவிட்டால் எமது அனைத்து நடவடிக்கைகளும் தராசுக்கொப்பானதாக துல்லியமாக எடைபோட வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகிவிடும்.*

*எமது ஊரில் ஒரு கோயில் உண்டு. அதன் நிர்வாகத்தில் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கோயில் நடவடிக்கைகளில் தர்மத்தைக் கடைப்பிடிப்பதில்லை. நியாயம் எது வென்று தெரிந்தும் அதனைப் பேச மாட்டார்கள். அதனை வலியுறுத்துவதும் இல்லை. அவர்களிடம் இது பற்றிக் கேட்டால் “நாளை சபை சந்தியில் அவரை நாம் சந்திக்க வேண்டிவரும். எப்படி அவருக்கு எதிராகக் கருத்தைச் சொல்லி முகத்தை முறிப்பது.” என்றொரு கேள்வியின் மூலம் நிறுத்திவிடுவார்கள். இந்த நடைமுறை அவர்களுக்கிடையே தர்மத்தை அஸ்தமிக்கச் செய்துவிடுவதைப் பல முறை அவதானித்திருக்கிறோம். இப்படிப் பல பொது நிறுவனங்கள் ஒழுக்கம் தவறி இருப்பதைக் காணலாம்.*

*முன்பு சொன்னதைப்போல பொது வெளியில் உள்ளவர்களுக்கு விசேட தகமைகள் இருக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதும் மக்கள் நலன்களைப் பற்றி மட்டும் சிந்திப்பவராகவும் தர்மத்தை நேசிப்பவராகவும் இருக்க வேண்டும். எந்தக் காரண காரியத்துக்காகவும் நடுநிலை தவறாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியம்.*

*‘சான்றவர் சான்றாண்மை குன்றின் - இருநிலந்தான் தாங்காது மன்னோ பொறை’ - என்ற குறளின் மூலம் சான்றோர்களின் நேர்மை, சத்தியத்தியம் என்பனவற்றால்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது, அவர்கள் பண்பு தவறினால் இந்த உலகம் தாங்காது என்கிறார் திருவள்ளுவர்.*

*ஒருவர் பெரும் பதவி வகுத்தும் நேர்மை தவறாது பணி செய்ததற்குச் சான்றாக ஒரு கதை உண்டு.*

*இந்தியப் பிரதமராகப் பணி யாற்றியவர் மொரார்ஜி தேசாய். 1896- பிப்ரவரி 29-ம் தேதி குஜராத்தில் பிறந்தவர். அவர் தந்தை ஒரு பள்ளி ஆசிரியர். உள்ளூரில் பள்ளிப்படிப்பை முடித்து கொண்டவர் பின்னர் பம்பாய் சென்று கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். ஐசிஎஸ் முடித்து பதில் வருவாய்த்துறை அதிகாரியாகச் சிறிது காலம் பணியாற்றியிருக்கிறார். விடுதலைப் போராட்டத்தின்போது காந்தி அணியில் சேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார். 1934- 37 இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வென்று பம்பாய் மாகாணத்தின் நிதியமைச்சராகவும் உள்துறை அமைச்சராகவும் பணியாற்றியிருக்கிறார்.*

*இந்திய குடிமகனுக்கு வழங்கப்படும் உயரிய விருதான பாரத ரத்னாவையும் பாகிஸ்தான் குடிமகனுக்கு வழங்கப்படும் உயரிய விருதான நிசான்-இ-பாகிஸ்தானையும் பெற்ற ஒரே இந்தியர் இவரே. 1977இல் காங்கிரஸ் அல்லாத கட்சியின் முதல் பிரதமராகத் தேர்வான மொரார்ஜி 79 -வரை பதவியில் இருந்தார்.*

*பிளவுபடாத பம்பாய் மாகாணத்தின் முதலமைச்சராக மொரார்ஜி தேசாய் இருந்தபோது அவரது மகள் இந்து மருத்துவக்கல்லூரி இறுதித் தேர்வு எழுதியிருந்தார். முதல் தரத்தில் தேர்ச்சி பெறுவேன் என்று அவர் தோழிகளிடம் சொல்லி இருந்தார். ஆனால் எதிர்பாராத விதமாகத் தோல்வி என்று முடிவு வந்தது. எப்படி இது நடந்தது என்று அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தோழிகளும் நம்பவில்லை. மறு கூட்டல் செய்தால் நிச்சயம் பாஸ் ஆகி விடுவார் என்று தோழிகள் ஆலோசனை கூறினர்.*

*இரண்டு நாள் தூக்கமில்லை. சரியாகச் சாப்பிடவில்லை. ‘ஏனம்மா இப்படி இருக்கிறாய்?’ என்று அவள் தந்தை மொரார்ஜி கேட்டார். ‘தேர்வு முடிவு தந்த அதிர்ச்சி இது’ என்று விளக்கினாள் அவள்.*

*“அம்மா! நான் முதல்வர் பதவியில் இருக்கிறேன். ஒரு வார்த்தை சொன்னால் மறுகூட்டல் போட்டுப் பார்த்து விடுவார்கள். நீ நிச்சயம் பாஸ் ஆகி விடுவாய். ஆனால் நான் அதைச் செய்ய முடியாது. ஊரும், உலகமும் மொரார்ஜி தன் செல்வாக்கைப் பயன்படுத்தி -தோல்வியடைந்த பெண்ணைத் தேர்ச்சி அடையச் செய்துவிட்டார் என்று பேசும். நான் அதைச் செய்ய மாட்டேன். நீ அடுத்த முறை கவனமாக எழுதிச் சித்தியடைவதுதான் நல்லது!” என்றார்.*

*உலகம் தெரியாத பெண். அறிவுரை சொல்லச் சரியான ஆள் இல்லை. ‘நம் வாழ்க்கை இப்படியாகி விட்டதே!’ என்ற சோகத்தில் அவள் தற்கொலை செய்துகொண்டாள்.*

*மகளைத் துடிக்கத் துடிக்கப் பறிகொடுத்த அந்தக் கணத்திலும், ‘நான் நேர்மையாக வாழ்வதற்கு என் மகளைப் பறிகொடுத்துத்தான் ஆக வேண்டும் என்றால் என் மகளை இழக்கத் தயங்க மாட்டேன்!” என்றார்.‘ஊழிக்காலம் வந்து கடல் பொங்கி பூமி முழுவதும் கடலுக்குள் மூழ்கினாலும் நேர்மை தவறாதவர்கள் அதர்மமான வழிகளில் செல்ல மாட்டார்கள்’. ‘ஊழி பெயரினும் தாம்பெயரார் - சான்றாண்மைக்கு ஆழி எனப்படுபவர்’ என்கிறார் வள்ளுவர்.*

# மின்சாரத்தில் சிக்கனம் பேணாவிட்டால் பெப்ரவரி, மார்ச், ஏப்ரலில் மின்வெட்டு!

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரிக்கை



கொழும்பு, பெப். 13

**"பொதுமக்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன் படுத்தாவிட்டால் மூன்று மாதங்களுக்கு மின்வெட்டு தொடரும்." _ என்று பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மின்வெட்டை அமுல்படுத்து வதற்கு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

எனவே, பொதுமக்கள் சிக்கனமாக மின்சாரத்தை உபயோகித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மின்வெட் டுக்கு அனுமதி வழங்கப்படும்.

எனவே, மாலை 6 மணி முதல் 10 மணிவரை மின் அடுப்பு, சலவை இயந்திரம், குளிரூட்டி, அயன்பொக்ஸ் ஆகியவற்றை பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

வர்த்தக நிலையங்களின் பெயர் பலகை இரவுவரை காட்சிப்படுத்தப்படுகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும்- என்றார். (அ)

# அல்லைப்பிட்டியில் நேற்று கஞ்சாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 13

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப் பிட்டிப் பகுதியில், 42 வயது டைய சந்தேகநபர் ஒருவர் 102 கிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் கஞ் சாவுடன் மோட்டார் சைக்கி ளில் பயணித்தவேளை கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசி யத் தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வுப் பிரி வினரும் ஊர்காவற்றுறை பொலிஸாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.



மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற் றுறை நீதிமன்றில் முற்படுத்த வுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-03)

# தொல்புரத்தில் இளைஞர் ஹெரோயினுடன் கைது!

யாழ்ப்பாணம், பெப். 13

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில், 32 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 100 மில்லிக் கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலி ஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது குறித்த நபர் அவரது வீட்டிலிருந்து இவ்வாறு கைதுசெய்யப்பட் டார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை, மேலதிக விசாரணை களின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ள தாக வட்டுக்கோட்டை பொலி ஸார் தெரிவித்தனர். (அ)

# பஸிலின் திட்டத்துக்கு அமைச்சர்கள் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 13

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி யம் என்பவற்றிலிருந்து 25 வீத வரியை அறவிட நிதி அமைச்சு எடுத்துள்ள தீர்மானம் தொடர் பில் நாளை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதன்போது நிதி அமைச்ச ரின் இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட அமைச் சர்களான வாசுதேவ நாண யக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தீர்மா னித்துள்ளனர். அத்துடன், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமர வீர ஆகியோரும் எதிர்ப்பை வெளியிடவுள்ளனர்.

இதனால் அமைச்சரவையில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறக்கூடும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# போதைப்பொருள், துப்பாக்கிகளுடன் ஆறு பேர் சிக்கினர்!

கொழும்பு, பெப். 13

வெவ்வேறு இடங்களில் பொலிஸார் நேற்று மேற் கொண்ட சுற்றிவளைப்புகளின் போது போதைப்பொருட்கள் மற்றும் துப்பாக்கிகளுடன் அறுவர் கைதுசெய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட களனி பாலம், நவலோகபுர, சாதம்மாவத்தை ஆகிய பிரதேசங்களில் பொலி ஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது ஹெரோயினுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

மாத்தளை, சேதுவத்த, வெல்லம்பிட்டிய ஆகிய பிர தேசங்களைச் சேர்ந்த 27, 36, 40 வயதுகளையுடைய மூவரே கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, கண்டி ஹசலக்க பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பட்டுமல்ல பிரதேசத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப் படும் துப்பாக்கியுடன் துங் கொல்ல பட்டுமுல்ல பிர தேசத்தை சேர்ந்த 39 வயது நபர் கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை, அம்பாறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கராங்காவ பிரதேசத்தில் வெளி நாட்டுத் துப்பாக்கியுடன் இருவர் கைதுசெய்யப்பட்ட னர்.

கரங்காவ, அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31, 55 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்ட னர்.

இது தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மன்னார் மீனவர்களின் பிரச்னைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு!

மன்னார், பெப். 13

மன்னார் மாவட்ட கடற் தொழிலாளர்களை வலுப் படுத்தும் நோக்குடன் கடற் றொழிலாளர் அமைப்புக்களை புனரமைத்து சீர்ப்படுத்தும் வகையிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தலைமையில் நேற்று சனிக்கிழமை காலை 9 மணிய ளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெலின் ஒருங் கமைப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரை யாடலில் மன்னார் நகர பிர தேச செயலாளர் எம்.பிரதீப், கடற்றொழில் உதவி பணிப்பா ளர், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்ட னர்.

மேலும் மாவட்டத்தில் உள்ள கிராமிய கடற்தொழிலா ளர் சங்கம் மற்றும்,மீனவர் கூட்டுறவு சங்கங்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராமிய கடற்றொழி லாளர் சங்கம் மற்றும் கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங் கம் ஆகியவற்றின் நிர்வாகங் களை சீர்ப்படுத்தி, தேவையான பதிவுகளை மேற்கொண்டு கடற்றொழிலாளர் நலன்சார் செயற்பாடுகளை வலுப்படுத்து வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர் கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சரின் கவ னத்துக்கு கொண்டு வந்தனர்.

குறிப்பாக மன்னார் பள்ளி முனை கிராம மீனவர்கள் உள்ளடங்களாக மாவட்டத்தில் சில பகுதிகளில் மீனவர்கள் கடலுக்கு தொழிலுக்குச் செல்லும்போது கடற்படையி னரின் சோதனை நடவடிக்கைக ளினால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக மீனவர்கள் தெரி வித்தனர்.

கடற்கரையில் மீனவர்களை சோதனை மற்றும் பதிவுகளை மேற்கொள்ள கடற்படையினர் நீண்ட நேரத்தை செலவிடுவ தால் தாமதித்தே தாங்கள் தொழிலுக்குச் செல்வதாலும், இதனால் தமது தொழில் நடவடிக்கை தாமதிப்பதாகவும், எனவே உரிய நடவடிக்கை களை மேற்கொண்டு தாமதம் இன்றி தொழிலுக்குச் செல்ல கடற்படையினர் துரித நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கையை முன் வைத்தனர்.

மேலும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்களத்துக்கு பாஸ் மற்றும் ஏனைய பதிவுகள் மற் றும் அனுமதியை பெற்றுக் கொள்ளச் செல்லும் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

சில அனுமதிகளை பெற்றுக் கொள்ள சென்றால் 5 முதல் 6 நாள்கள் வரை குறித்த அலுவ லகத்துக்கு சென்று வரவேண் டிய நிலை உள்ளதாகவும், எனவே குறித்த திணைக்களத் தில் மக்களுக்கான பணி மற் றும் தேவைகள் உரிய நேரத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தனர்.

மேலும் மீனவர்கள் மாவட் டம் விட்டு வேறு மாவட்ட கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் நிலையில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும், குறிப் பாக வேறு மாவட்ட மீனவர் கள் மன்னாரில் இருந்து மீன் பிடி நடவடிக்கைகளை மேற் கொள்வதால் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச் னைகள் குறித்தும் ஆராயப்பட் டது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராமிய கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகங்களை சீர்படுத்தி, தேவையான பதிவுகளை மேற் கொண்டு கடற்றொழிலாளர் நலன்சார் செயற்பாடுகளை வலுப்படுத்தி மீனவர்களின் பிரச்னைகளுக்கு வெகு விரை வில் உரிய தீர்வை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

# மொபைலில் சஹ்ரானின் படம் 9 பேர் பொலிஸாரினால் கைது!

கொழும்பு, பெப். 13

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சஹ்ரானின் படங்களை வைத்தி ருந்த ஒருவரும், அவருடன் வாகனத்தில் பயணித்த மேலும் 8 பேரும் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியிலுள்ள ரிதிதென்னை பொலிஸ் சோதனைச் சாவடி யில் , கண்டி, அக்குறணையில் இருந்து, காத்தான்குடி நோக் கிப் பயணித்த வாகனமொன்றை இராணுவத்தினர் சோதனை யிட்டனர்.

இதன்போதே, முகமட் பாரூக் முகமட் ஆசாத் என்பவர் தனது கையடக்கத் தொலை பேசியில் தடுப்பூசி ஏற்றியதற் கான அட்டையின் படத்தை காட்ட முற்பட்டபோது, சஹ் ரான் ஹாசீமின், படங்களும் தொலைபேசியில் இருந்துள் ளது.

இதனையடுத்து, குறித்த வாகனத்தில் பயணித்த 9 பேரை யும் கைது செய்துள்ளதுடன், விசாரணைக்காக அவர்கள் வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ முகாமுக்கு அழைத் துச் செல்லப்பட்டனர். (அ)

# அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க இணக்கம்!

கொழும்பு, பெப். 13

**கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள, அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை நாளை திங்கட்கிழமை விடுவிக்க முடியும் என அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ஆயிரத்து 500 கொள் கலன்கள் துறை முகத்தில் தேங்கி யுள்ளதாக அந்த சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற நிதியமைச்சருட னான கலந்துரையாடலின் போதே, குறித்த கொள்கலன் களை விடுவிப்பதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் நிதியமைச் சின் தலையீட்டில் துறைமுகத் தில் தேங்கியிருந்த 500 கொள் கலன்கள் விடுவிக்கப்பட்டிருந் தன என்பது குறிப்பிடத்தக்கது.

# புதையல் தோண்டுவதற்கு முயற்சித்த இருவர் கைது!

கொழும்பு, பெப். 13

பதுளை, ஊவாபரணகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம் வெல்ஹேன பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த இரு வரை நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.

புஹூல்பொல பிரதேசத் தைச் சேர்ந்த 23, 24 வயது களையுடைய இருவரே நேற்று முன் தினம் இரவு இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத் தப்பட்ட பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இது தொடர்பில் பொலிஸ ார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கௌரவிப்பு நிகழ்வு இன்று

வடமராட்சி, பெப். 13

கரவெட்டி மத்தொனி மைந் தன் பேராசிரியர் சின்னத்துரை விஜயகுமாரின் கௌரவிப்பு நிகழ்வு மத்தொனி இளைஞர் விளையாட்டுக்கழக மைதா னத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஓய்வுநிலை அதிபர் இ.இராக வன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ சோ வைகுந்தவாசகக் குருக்களும் வரவேற்புரையை கரவெட்டி பிரதேச சபை உபத விசாளர் க.பொன்னம்பலமும் நிகழ்த்துவார்கள்.

கௌரவிப்பு உரைகளை யாழ்.பல்கலைக்கழக வணிக பீட முக முகாமைத்துவ கற்கை கள் பேராசிரியர் பா.நிமலதா சன், யாழ்.பல்கலைக்கழக கல்வி யியல்துறை சிரேஷ்ட விரிவு ரையாளர் ஆ.நித்தியவர்மன், யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வட மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் அம்பலவாணர், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் செல்வராசா, யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத் திய நிபுணர் மருத்துவர் சிவராமன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

அமரர் வீரகத்தி மணி மாறன் நினைவாக நடத்தப் பட்ட கிரிக்கெட் போட்டியில பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறும். (அ-02)

# பெப்ரவரி மாதத்தின் முதல் 10 நாள்களில் 31,343 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு!

கொழும்பு, பெப். 13

பெப்ரவரி மாதத்தின் முதல் 10 நாட்களில் இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் வருகை 30 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவி ருத்தி அதிகார சபையின் தற் காலிகத் தரவுகளின்படி, பெப் ரவரி முதலாம் திகதி முதல் 10ஆம் திகதி வரை 31 ஆயி ரத்து 343 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, பெப்ரவரி மாதத் துக்கான வருகை விகிதம் நாளாந்தம் 3 ஆயிரத்து 134 ஆகக் காணப்படுவதாகவும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யாவில் இருந்தே 4 ஆயி ரத்து 566 பார்வையாளர்கள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ள னர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், 3 ஆயிரத்து 799 பயணிகளின் வருகையுடன் இங்கிலாந்து இரண்டாவது இடத்திலும் 3 ஆயிரத்து 575 பயணிகளுடன் இந்தியா மூன் றாவது இடத்திலும் உள்ளதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# 19ஆம், 20ஆம், 21 ஆம் திகதிகளில் வடக்குக்கு கன மழை எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், பெப். 13

வடகிழக்கு பருவகாற்றின் தாக்கம் காரணமாக தற்போது நிலவும் மழையுடனான நிலை தொடரும் அதேவேளை எதிர் வரும் 19ஆம், 20ஆம், 21 ஆம் திகதிகளில் கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக எச்சரிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் விடுக்கப் பட்டுள்ள வானிலை அவதான அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

தற்போது நிலவுகின்ற மழை யுடன் கூடிய காலநிலை வடக்கு மாகாணத்தில் தொடரும்.

அதன் பின்னர் எதிர்வரும் 19ஆம், 20ஆம், 21 ஆம் திகதி களிலும் கூடுதலாக வடக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களி லும் மழை பெய்யக் கூடிய சாத் தியப்பாடுகள் காணப்படுகின்றன.

வடகிழக்கு பருவகாற்றின் தாக்கத்தால் இந்த மழைவீழ்ச்சி கிடைக்கின்றது.

எனவே விவசாயிகள் மற் றும் ஏனையவர்கள் இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டப்படுகின் றனர் - என்றுள்ளது. (அ)

# இந்திய சுற்றுலா பயணிகளுக்கு வருகையின் பின்னரான விசா!

கொழும்பு, பெப். 13

இந்திய சுற்றுலாப் பயணி களுக்கு, 'வருகையின் பின்ன ரான விசா' (On arrival visa) அனு மதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா தொற்றுப் பர வல் குறைவடைந்து வருகின்ற நிலையில், இலங்கையின் சுற்று லாத் துறையை மீளக் கட்டி யெழுப்பும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இலங்கையின் மிகப்பெரிய சுற்றுலா சந்தையாக இந்தியா உள்ளதென்றும் கடந்த ஆண்டு இலங்கைக்கு சுற்றுலா மேற் கொண்டவர்களுள் 42 சதவீத மானோர் இந்திய சுற்றுலாப் பயணிளே என்றும் கூறப்படு கிறது.

இந்த நிலையில், இந்திய சுற்றுலாப் பயணிகள், இலங் கைக்கு வந்ததன் பின்னர், தங் களது விசா அனுமதியைப்பெற் றுக்கொள்வதற்கான சந்தர்ப் பம் வழங்கப்படவுள்ளது. (அ)

# வைத்திய சேவைகள், மின் விநியோகம் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

கொழும்பு, பெப். 13

மின்சார விநியோகம், வைத் தியசாலை உள்ளிட்ட மேலும் சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத் தும் அதிவிசேட வர்த்தமானி ஜனாதிபதியினால் வெளியி டப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரத்துக்கு அமைய இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மின்சார விநி யோகம், வைத்தியசாலை, முதி யோர் இல்லங்கள், மருந்தகங் கள், நோயாளர் பராமரிப்பு சேவைகள் மற்றும் சிகிச்சை ஆகியவை தொடர்பிலான அனைத்து அவசியமான சேவை கள் மற்றும் தொழில்கள் அத்தி யாவசிய சேவைகளாக பிரகட னப்படுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மன்னார் பெரிய பாலம் அருகே பாரவூர்தி-டிப்பர் மோதி விபத்து!

மன்னார், பெப். 13

மன்னார் பெரிய பாலத்துக்கு அருகில் பாரவூர்தி - டிப்பர் வாகனங்கள் மோதி விபத்துக் குள்ளாகின.

மன்னார் பெரிய பாலம் பிர தான சோதனைச் சாவடி அரு கில் நேற்று சனிக்கிழமை காலை 6 மணியளவில் குளிர்பானப் பொருட்களை மன்னாருக்கு ஏற்றிச்சென்று நிறுத்தி வைக்கப் பட்டிருந்த லொறி மீது மாந்தை மேற்குப் பிரதேசத்தில் உள்ள கூராய் ஆற்றுப் பகுதியில் இருந்து மணல் ஏற்றி வந்த டிப்பர் மோதி விபத்துக்கு உள் ளாகியுள்ளது.

இந்த விபத்தில் இரண்டு வாகனங்களும் சேதமடைந் துள்ளதுடன் வாகனத்தில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் போக்குவரத்து பிரிவுப் பொலிஸார் விபத்து தொடர் பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி இரண்டு பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 13

இரத்தினபுரி, பெல்மதுளை - பட்டலந்தைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என பொலி ஸார் தெரிவித்தனர்.

பயிர்ச்செய்கை நிலமொன் றில், அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத மின் இணைப் பில் சிக்கி இவ்விருவரும் பலி யாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

மேற்படி இருவரும், சட்ட விரோத அகழ்வுப் பணியில் ஈடுபடுவதற்காக சென்றபோது, இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் பட்டலந் தைப் பகுதியைச் சேர்ந்த 28 மற் றும் 38 வயதுடையவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.(அ)

# வாகனங்கள் இறக்குமதி இப்போதைக்கு இல்லை

கொழும்பு, பெப். 13

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட்டதன் பின்னர் வாகனங்களை மீள இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் செயற்பாடு கடந்த 2020 மார்ச் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தடையை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் இலங்கைக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சதொச தலைவர் இடைநிறுத்தம்!

கொழும்பு, பெப். 13

பல நிதி முறைகேடுகள் தொடர்பில் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் சதொச நிறுவ னத்தின் தலைவர் மற்றும் பல அதிகாரிகளை பணி இடைநிறுத்துமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

சதொச நிறுவனத்தில் இடம் பெற்ற சட்ட விரோத கொடுக் கல் வாங்கல்கள் விசாரணைக்கு வழிவகுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சதொச நிறுவனத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை இடம்பெற்றதா கக் கூறப் படும் அனைத்து நிதி முறைகேடுகள் மற்றும் முறை கேடுகள் குறித்து விசாரணை நடத்து மாறும், மூன்று அரச அதிகாரிகள் அடங்கிய குழு வொன்றை நியமித்து விசா ரணை நடத்து மாறும் அமைச் சின் செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். (அ)

# நரேந்திர மோடியின் கொழும்பு வருகை இலங்கையின் நெருக்கடி தீர உதவுமா?

ரஞ்சன் அருண் பிரசாத்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு எதிர்வரும் மார்ச் மாதம் அதிகாரபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சம் தெரிவிக்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கடந்த 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை, இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில், இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய பிரதமர், இலங்கைக்கு விஜயம் செய்வார் என்றும் அவரது வருகையை இலங்கை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, ஏற்கெனவே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த இரு தலைவர்களின் சந்திப்பு சமீபத்தில் புதுடில்லியில் நடந்த பிறகு பீரிஸ், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாலையும் சந்தித்துப் பேசினார். இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவும் பீரிஸை சந்தித்துப் பேசினார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு, பரிவர்த்தனை உறவில் இருந்து கேந்திர கூட்டாளி உறவாக பரிணமித்துள்ளமையை சுட்டிக்காட்டிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இலங்கை எப்பொழுதும் நம்பியிருக்கக்கூடிய உண்மையான நண்பன் இந்தியாவாகும் என்பதை இலங்கை மக்கள் அதிகளவில் அங்கீகரித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான தருணத்தில் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ள 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை அமைச்சர் பீரிஸ் வரவேற்றுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு எப்போதும் இலங்கைக்கு ஆதரவானதாக இருக்கும் என அமைச்சர் ஜெய்சங்கர் இதன்போது உறுதியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

பொருளாதார ஒத்துழைப்பு, வலு மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பு, இணைப்பு, மக்களுக்கு இடையிலான தொடர்பு போன்றவை உள்ளிட்ட பரஸ்பர நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் இருதரப்புப் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட திருகோணமலை எண்ணெய்த் தாங்கி பண்ணை ஒப்பந்தம் குறித்தும் விசேட கவனம் செலுத்திய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒருங்கிணைப்பை எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக இரு நாடுகளுக்கும் வெற்றிகரமான சூழ்நிலையில் கணிசமான நன்மைகளை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக காற்றாலை மற்றும் சூரிய ஆற்றல் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளிலான ஒத்துழைப்பிற்கான வாய்ப்புக்கள் குறித்தும் இந்த பேச்சுவார்த்தையின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்திய இக்கலந்துரையாடலில், மருந்துகள், உணவு பதப்படுத்துதல் மற்றும் உற்பத்தி போன்ற முன்னுரிமைத் துறைகளில் இந்திய முதலீடுகளுக்கான சாத்தியக்கூறுகளை மையப்படுத்தி அமைச்சர் பீரிஸ் இந்திய முதலீடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கையில் சுற்றுலாத்துறையை புத்துயிர் பெறச் செய்வதற்காக அபிவிருத்தியடைந்து வரும் இந்திய வெளிப்புற சுற்றுலாவை பயன்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்திய - இலங்கை உறவின் வேகத்தைத் தக்க வைக்கும் நோக்கில், பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே நிலுவையில் உள்ள பல ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை முன்கூட்டியே இறுதி செய்வதற்கு அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, கடற்றொழில் சார்ந்த பிரச்னை குறித்தும் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடினார்.

இதனை ஒரு முக்கியப் புள்ளியாகக் குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சர், ஒரு வித்தியாசமான தோற்றத்தைக் கொண்டு மீண்டும் மீண்டும் எழும் பிரச்னையாக இது மாறியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அனைத்து இரு தரப்புப் பொறிமுறைகளையும் ஒன்று கூட்ட வேண்டிய அவசரத் தேவை குறித்து இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மோடி வருகையின் முக்கியத்துவம்**

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் அமையும் என கொழும்பு பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் கலாநிதி கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் தெரிவிக்கின்றார்.

“பெரும்பாலும் வடக்கில அதானிட திட்டத்தை அமல்படுத்துவது, இன்னும் கூடுதலாக இந்திய முதலீடுகளை இங்கு செய்றதுக்குரிய ஒப்பந்தங்கள் செய்றதுக்கு வாய்ப்பிருக்கின்றது. அரசியல், தமிழர் பிரச்னை பற்றி வெளிப்படையாக கதைப்துர்கள். ஆனால் உள்ள பொருளாதார ரீதியான ஒப்பந்தங்கள், முதலீடுகள்,



இலங்கையை சீனாவுடன் கூடுதலாக நகர்த்தாமல் பார்த்துக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைள் நிறைய இருக்கும்.” என அவர் கூறுகின்றார்.

**சீனாவை விட்டு இலங்கை பிரிந்து விட்டதா?**

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடனான உறவை, இலங்கை சமப்படுத்திக் கொண்டே, முன்னோக்கி நக ரும் என கொழும்பு பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் கலாநிதி கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் தெரிவிக்கின்றார்.

“இந்தியாவையும் சீனாவையும் தனக்கு சாதகமாக இலங்கை அழகாக கையாளும். அது கையாண்டு கொண்டு இருக்கிறது. தனக்கு எப்போது சீனா வேண்டுமோ, அப்போது சீனாவை

**இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு, பரிவர்த்தனை உறவில் இருந்து கேந்திர கூட்டாளி உறவாக பரிணமித்துள்ளமையை சுட்டிக்காட்டிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இலங்கை எப்பொழுதும் நம்பியிருக்கக்கூடிய உண்மையான நண்பன் இந்தியாவாகும் என்பதை இலங்கை மக்கள் அதிகளவில் அங்கீகரித்திருப்பதாகத் தெரிவித்தார்.**

நோக்கி இலங்கை போகும். எப்போது தனக்கு இந்தியா வேண்டுமோ அப்போது இந்தியாவை நோக்கி போகும். வர்த்தகம் என பார்த்தால், முன்னர் இந்தியா இருந்த போதிலும், இப்போது சீனா முதல் இடத்தில் உள்ளது.

இலங்கையிலுள்ள முழு பொருட்களும் சீன பொருட்கள் தான் உள்ளன. இலங்கையில் சீன பொருட்கள் ஆக்கிரமித்துள்ளன. இந்தியாவை தள்ளி வைக்க முடியாது என்ற நிலையில் தான், திருகோணமலை எண்ணெய் குதங்கள், யாழ்ப்பாணம் தீவுகள், கொழும்பு முனையம், ஆகியவற்றை கொடுத்து சமப்படுத்திக் கொண்டு செல்வதாகவே நான் பார்க்கின்றேன்” என அவர் குறிப்பிட்டார்.

சீனாவிற்கு அதிக வாய்ப்புக்களை வழங்கியோ அல்லது இந்தியாவிற்கு அதிக வாய்ப்புக்களை வழங்கியோ இலங்கை ஒருபோதும் செயற்படாது என அவர் குறிப்பிடுகின்றார்.

இரண்டு நாடுகளையும் தங்களுக்கு ஏற்ற வகையில் சமப்படுத்திக் கொண்டு, இலங்கை முன்னோக்கி நகரும் என கொழும்பு பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் கலாநிதி கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் கூறுகின்றார்.

# லதா மங்கேஷ்கர்: ஓர் இனிய பாடல் என்றும் முடிவதில்லை





**பசியை வெல்வதற்காகக் கலையிடம் தஞ்சமடைந்த குடும்பத்துக்கு, மூத்த மகளாகத் தனது பங்களிப்பைச் செலுத்த, 13 வயது முதல் பாடவும் நாடகங்களில் நடிக்கவும் தொடங்கினார் லதா. ஒரு கட்டத்தில் தந்தையின் மறைவு, குடும்பத்தைக் காக்க வேண்டிய தலைமகளாக அவரது கலை வாழ்க்கையைப் புரட்டிப்போட்டது. அப்போது ஒரு பிறவிக் கலைஞராக இன்னும் தீவிரமாக வெளிப்பட்டு நின்றார்.**

ஜெயந்தன்

கலையாளுமையின் வழியாகத் தென்னிந்திய மனங்களில் குடிகொண்ட பல பாலிவுட் நட்சத்திரங்களை அறிவோம். அவர்களை மீறிய நீடித்த செல்வாக்கு, சில இந்தி இசையமைப்பாளர்களுக்கும் பின்னணிப் பாடகர்களுக்கும் உண்டு. மொழியைக் கடந்து, அவதாரங்களைப் போல் பாடகர்கள் கொண்டாடப்படுவது, திரைப்படக் கலையின் வீச்சும் அதன் ஒலிப்பதிவுத் தொழில்நுட்ப வளர்ச்சியும் கொண்டுவந்து சேர்த்த மரியாதை. அதற்கு முன்பு, நாற்பதுகள் வரையிலும் நாடக மேடைகள், தெருக் கச்சேரிகளில் பாடிக்கொண்டிருந்தவர்களை வடஇந்திய மக்கள் ‘கானா வாலா’ எனக் கொச்சையாக அழைத்தார்கள். அதே காலகட்டத்தில், நாடகக் கலைஞர்களை நாம் ‘கூத்தாடி’ என அலட்சியப்படுத்தியதைப் போல.

‘கானக் குயில்’, ‘குயின் ஆஃப் மெலடி’, ‘இந்தியாவின் நைட்டிங்கேல்’ என இன்று நாடு கொண்டாடும் லதா மங்கேஷ்கர், ஓர் எளிய, மராட்டிய ‘கானா வாலா’ குடும்பத்தில் பிறந்தவர். தந்தை பண்டிட் தீனாநாத், தாய் ஷிவந்தி இருவரும் இசையையும் நாடகத்தையும் நேசித்தவர்கள். பசியை வெல்வதற்காகக் கலையிடம் தஞ்சமடைந்த குடும்பத்துக்கு, மூத்த மகளாகத் தனது பங்களிப்பைச் செலுத்த, 13 வயது முதல் பாடவும் நாடகங்களில் நடிக்கவும் தொடங்கினார் லதா. ஒரு கட்டத்தில் தந்தையின் மறைவு, குடும்பத்தைக் காக்க வேண்டிய தலைமகளாக அவரது கலை வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. அப்போது ஒரு பிறவிக் கலைஞராக இன்னும் தீவிரமாக வெளிப்பட்டு நின்றார்.

தன்னுடைய பதின்ம வயதில், மராட்டிய சினிமாவில் முதல் பின்னணிப் பாடலைப் பாடித் திரையுலகுக்கு அறிமுகமான காலத்தில் அவர் எப்படிப் பாடினாரோ, அதேபோல்தான் கடைசி வரை லதா மங்கேஷ்கர் பாடினார். தொடக்கத்தில் சில மராத்திப் படங்களில் பாடியிருந்தாலும் 1949-ல் வெளியான ‘மஹல்’ இந்திப் படத்தில் ‘ஆயஹா.. ஆனே வாலா’ என்கிற பாடலில் தொடங்கியது லதாவின் உண்மையான திரையிசைப் பயணம்.

‘வர வேண்டியவர் ஒருபோதும் வராமல் போக மாட்டார்’ என்கிற அந்தப் பாடலின் பொருளும்கூட லதாவின் வருகையைச் சொல்லி விட்டது. இந்தித் திரையிசையில் அவரது குரல் அறிமுகமான பிறகு, இந்தியாவின் எட்டாவது அட்டவணையில் இருக்கும் இந்தி உள்ளிட்ட மொழிகளைக் கடந்து, பல மொழிகளில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடிக் குவித்திருப்பது முறியடிக்க முடியாத கின்னஸ் சாதனையாக இருக்கிறது. வயதுக்குரிய தடம் காலம்தோறும் அவரது குரலில் சிறிதுசிறிதாகத் தென்பட்ட போதும், பாடும் முறை என்பது அவருக்கே உரித்தான பிறவி வரமாகவே தொடர்ந்தது.

**ஓர் உலக அதிசயம்!**

“லதா மங்கேஷ்கர் தானாக நிகழ்ந்த ஓர் உலக அதிசயம்! அவர் போன்ற ஒரு பாடகியை உலக வெகுஜன இசையில் வேறு எங்கேயுமே நாம் பார்க்க முடியாது. பாடும் முறையில் அவர் வெளிப்படுத்தும் ஆழம், நூலளவுக்குக்கூட உணர்வுகளை மிகைப்படுத்தாத தன்மை இரண்டும் அவரது தனித்த அடையாளங்கள். ஒரு பாடலின் மெட்டுக்கு, வரிகள் காட்டும் உண்மைக்கு என்ன உணர்வு தேவையோ அதைக் கச்சிதமாகத் தன்னுடைய குரலில் கொண்டு வந்துவிடும் ஆற்றல், இறைவன் அவருக்கு வழங்கிய கொடை.

வாழ்க்கையின் இயல்பான அத்தனை உணர்வுகளும் அவரது குரல்வழியே துல்லியமாக வெளிப்பட்டிருக்கின்றன. பாடகிகளுக்குப் பொதுவான குரல் பிரச்சினை ஒன்று உண்டு. அது உச்ச ஸ்தாயியில் பாடினால் கீச்சுத் தன்மையும் கீழ் ஸ்தாயியில் பாடும்போது கட்டைக் குரலும் வந்துவிடும். ஆனால், எப்படிப் பாடினாலும் துல்லியமான குரல் லதா மங்கேஷ்கருடையது. இது அவர் கற்றுக்கொண்டு வந்ததல்ல் இதைக் கற்றுக் கொள்ளவும் முடியாது. கடந்த 45 ஆண்டுகளில் அவர் பாடிய ஒரு பாடலையாவது கேட்காமல் என்னுடைய நாட்கள் கடந்து சென்றதில்லை” என்று வியந்து போகிறார் வெகுஜன இசை விமர்சகர் ஷாஜி.

**இனிய குரலின் கடவுள்**

எந்தவொரு திரையிசைப் பாடகரையும் அவர் பாடத் தொடங்கிய மூன்றாவது படத்திலிருந்து அவரை ‘இனிய குரலின் கடவுள்’ எனக் கொண்டாடியிருப்பார்களா என்று தெரியவில்லை. லதா மங்கேஷ்கருக்கு அது நடந்தது. ‘மஜ்பூர்’, ‘அந்தாஸ்’, ‘பர்ஸாத்’ தொடங்கி ‘அனார்கலி’, ‘முகல்- ஏ-ஆஸம்’ எனக் காதலின் அமரத்துவம் இசையின் வடிவமாக வெளிப்பட்ட அத்தனை படங்களிலும் காவியக் குரலாக ரசிகர்களின் மனதை ஊடுருவிப் பாய்ந்தார் லதா. அத்தகைய பாடல்கள் மெலடியாகத் தாலாட்டியதுடன் ரசிகர்களின் மனக் காயங்களுக்கு மருந்தாகவும் அமைந்துபோயின.

50 முதல் 70-கள் வரையிலான இந்தித் திரையிசையின் பொற்காலத்தில், ஆணுலகில் மிதிபட்டு நசுங்கும் குடும்பப் பெண்களின் கண்ணீரையும் மீட்சியையும் ஒலித்த குரலும் லதாவுடையதாக மாறியிருந்தது. அவர் வந்து பாடிக்கொடுக்க வேண்டும் என்பதற்காக மூன்று மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை காத்திருந்த இசை ஜாம்பவான்கள் பாலிவுட்டில் இருந்தார்கள். ‘லதாவின் குரலுக்காக ஐந்து மாதங்கள் காத்திருந்தேன்’ என்று இசையமைப் பாளர் சலீல் சௌத்ரி சொல்லியிருக்கிறார். அன்று, புகழின் உச்சத்தில் விளங்கிய பாடகர்களான முகமது ரஃபியும் கிஷோர் குமாரும் லதா மங்கேஷ்கரின் கால்ஷீட்டுக்கு ஏற்ப விட்டுக்கொடுத்துப் பாடித் தந்ததெல்லாம் திரையிசை வரலாறு.

**சிவாஜி கணேசனின் தங்கை**

இந்தியிலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட ஒருசில கறுப்பு - வெள்ளைப் படங்களுக்கு 60-களில் சில பாடல்களைத் தமிழ் தெரியாமலேயே பாடியிருக்கிறார் லதா. அதன் பின்னர், தமிழ் சினிமாவில் அவரது குரலை நேரடியாக ஒலிக்க வைத்தவர் இளையராஜா. 1987-ல் பிரபு நடித்து, ராஜா இசையில் வெளியான ‘ஆனந்த்’ படத்தில் இடம்பெற்ற ‘ஆராரோ.. ஆராரோ…’ பாடலில் வந்து தமிழகத்தைத் தாலாட்டினார்.

இளையராஜாவின் இசையில் ‘சத்யா’ படத்துக்காக அவர் பாடிய ‘வளையோசை கலகலவென’ பாடல் தலைமுறைகள் தோறும் கடத்தப்பட்டுவரும் அதிசயமாகிவிட்டது. அவருடைய லட்சக்கணக்கான தமிழக ரசிகர்களின் கைபேசிகளில் ரிங்டோனாக இன்னும் அப்பாடல் வசீகரம் குறையாமல் ஒலித்துக்கொண்டிருகிறது. ஏ.ஆர்.ரஹ்மான் இசையிலும் இந்தியில் பல பாடல்களை லதா பாடியிருக்கிறார்.



திலீப்குமார் போன்ற பாலிவுட்டின் நட்சத்திரங்கள் தமிழ்த் திரையுலக ஆளுமைகளுடன் நெருக்கமான நட்பைக் கொண்டிருந்ததுபோல், சிவாஜி கணேசனைத் தன்னுடைய சொந்த சகோதரனாகக் கருதி அன்பு செலுத்தியவர் லதா மங்கேஷ்கர். சென்னை வரும்போதெல்லாம், ‘அன்னை இல்லம்’தான் அவரது இல்லம். “நமது இந்தியக் கலாச்சாரத்தில் ரக்ஷா பந்தன் என்பது சகோதர - சகோதரி இடையிலான பாசப் பிணைப்பை எடுத்துக்காட்டும் பண்டிகை. ரக்ஷா பந்தன் சமயத்தில் லதாஜி சென்னையில் இருந்தால், அப்பாவுக்கு ராக்கி கட்டுவதற்கு ஓடோடி வந்துவிடுவார்.

அவரது வருகைக்காக அன்னை இல்லம் விழாக்கோலம் பூண்டுவிடும். அப்பாவின் மறைவுக்குப் பிறகு எங்கள் குடும்பத்தின் மீது துளி பாசமும் குறையாதவர். அவர் மறைவு எங்கள் குடும்பத்துக்கும் இந்தியத் திரையுலகத்துக்கும் பேரிழப்பு” என லதா மங்கேஷ்கருடனான நினைவுகளை, உடைந்த குரலுடன் பகிர்ந்துகொள்கிறார் பிரபு. சிவாஜியின் குடும்பத்தினர் மட்டுமல்ல் இந்தியாவே தங்கள் குடும்பத்தில் ஒருவரை இழந்துவிட்டதாகத்தான் கண்ணீர் வடிக்கிறது. ■






# பிரதமரைப் பார்க்க டில்லி சென்றவர்கள் அவரை சந்திக்காமலே திரும்பினார்கள்

## இந்தியத் தலையீட்டை விரும்பாத தமிழரசுக் கட்சி -05-

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

புதுடில்லியில் எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானியைப் பார்க்க நேரம் கேட்டுத் தொலைநகல் ஒன்றை 14.09.2006 அன்று தயாரித்துக் கொடுத்தேன். மாவை சேனாதிராசா அதை உடனேயே அனுப்பி வைத்தார்.

அன்று மாலை பொது நிகழ்ச்சி ஒன்றில் என்னைப் பார்த்த இல. கணேசன், என்னிடம் வந்து, ஈழத்தமிழர் பிரதிநிகள் வருகிறார்கள், சந்தியுங்கள் எனத் தானும் டில்லிக்குச் செய்தி அனுப்பியதாகக் கூறினார்.

15.09.2006 பகல் முழுவதும் அவரவர், அவரவர் பணியைப் பார்க்கப் போயினர். தமிழக முதலமைச்சரைச் சந்திக்க விரும்பி, முதலமைச்சரின் உதவியாளருடன் வழமைபோல அன்றும் மாவை சேனாதிராசா பேசினார்.

பத்மினி சிதம்பரநாதன் 16.9 கொழும்பு திரும்புவதற்காப் பயணச் சீட்டை உறுதிசெய்யப் போனார். பின்னர், மாலை கடைத்தெருவுக்குப் போனார்.

### நெடுமாறனுக்கு இரவுணவு

15.09.2006 இல் இரவுணவுக்காக மயிலாப்பூருக்கு நெடுமாறனை அழைத்துக் கொண்டு சென்றோம். இரா.சம்பந்தனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அங்கு வரவில்லை. கவிஞர் காசி ஆனந்தனை அழைத்திருந்தேன். வந்திருந்தார். மாவை சேனாதிராசா விருந்து வழங்கினார்.

16.09.2006 காலையில் பத்மினி சிதம்பரநாதனை விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்று கொழும்புக்கு அனுப்பினார் மாவை சேனாதிராசா.

### பிரதமருக்குக் கடித வரைவு

17.09.2006 இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் யாவரும் காலையில் எனதில்லத்துக்கு வந்தனர். மாவை சேனாதிராசாவும் நானும் சேர்ந்து கொண்டோம். பிரதமருக்குக் கொடுக்கவுள்ள கடித வரைவைத் தயாரித்தோம்.

கஜேந்திரகுமார் பென்னம்பலமும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஆக்கபூர்வமான கருத்துகளை அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

ஆட் கடத்தல்களின் வேகம் விரைவு எண்ணிக்கை பற்றிச் சுரேஷ் பிரேமச்சந்திரன் விளக்கமாகக் கூறினார். அவற்றையும் உள்ளடக்கியே கடித வரைவை இரா. சம்பந்தன் எழுதிக் கொண்டிருந்தார்.

இலங்கைக்கு ஆயுதங்களை இந்தியா வழங்கக் கூடாது எனக் கடிதத்தில் எழுதுங்கள் எனக் கேட்டேன். நேரில் சொல்லுவோம், கடிதத்தில் எழுத வேண்டாம் எனச் சம்பந்தன் மறுத்துவிட்டார். நேரில் சொல்வதே சரியாக இருக்கும் என மாவை சேனாதிராசாவும் கூறினார்.

போர்நிறுத்த உடன்பாட்டைக் கொழும்பு முழுமையாக நடைமுறைப் படுத்த டில்லி வலியுறுத்த வேண்டும் எனக் கடிதத்தில் எழுதுக எனக் கேட்டேன். விடுதலைப் புலிகள் தான் அதிகம் மீறியுள்ளார்கள். எனவே அதையும் கடிதத்தில் குறிப்பிட முடியாது என்றார் இரா. சம்பந்தன்.

தமிழர் எதிர்பார்ப்புகளை நோக்கிய அரசியல் தீர்வுக்கு உடன்படுமாறு கொழும்புக்குப் போதுமான தூதரக, பொருளாதார, அரசியல் அழுத்தம் கொடுக்காமாறு டில்லியைக் கேட்டுக் கடிதத்தில் எழுதுங்கள் என்றேன். இது முதல் சந்திப்பு இதில் அரசியல் தீர்வு விடயங்கள் வேண்டாம் என இரா. சம்பந்தன் கூறினார்.

அல்லலுற்று ஆற்றாது துயருரறும் ஈழத் தமிழ் மக்களுக்கு இந்தியா உடனடியாக உதவவேண்டும் எனவும், அவ்வாறு வழங்கும் உதவிகளை, இலங்கை அரசின் மூலமாக வழங்காது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி, தமிழர் அமைப்புகள் மூலம் வழங்குமாறு பிரதமருக்கு எழுதுங்கள் எனக் கோரினேன்.

பயனாளிகளுக்கு நேரடியாக இந்திய உதவி உடனடியாகக் கிடைக்கவேண்டும் என்றும் இலங்கை அரசில் தமிழருக்கு நம்பிக்கை இல்லை என்றும் எழுதுவதாகக் கூறினார் இரா. சம்பந்தன்.

மொத்தம் ஆறு பக்கங்கள் கொண்ட கடிதத்தின் இறுதி வடிவைத் தமிழில் பந்தி பந்தியாக வாயால் மொழிபெயர்த்துக் கூறினார், இரா. சம்பந்தன். அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தோம்.

ஒரே ஒரு பக்கத்தில் பெரிய எழுத்துகளில் கடிதச் சுருக்கத்தைப் புள்ளியிட்டுப் பிரதமருக்குக் கொடுப்பதன் அவசியத்தை நானும் மாவை சேனாதிராசாவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் வலியுறுத்த இரா. சம்பந்தன் ஒப்புக் கொண்டார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் இருவரும் எனதில்லம் வந்தனர். கடைசி நேரத் திருத்தங் களுடன் கடிதத்தின் அச்சுப் படியைத் தயாரித்தார் கஜேந்திரகுமார் பொன்னம் பலம். டில்லிப் பயணம் வெற்றியாக அமைவதாக என அவர்களிரு வரையும் வாழ்த்தி அனுப்பினேன்.

19.09.2006 காலை இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் டில்லிக்கு ஐவரும் புறப்படனர். இந்திய அரசு ஏற்பாடு செய்திருந்த விடுதியில் டில்லியில் தங்கியிருந்தனர்.

இரவு, இரா. சம்பந்தனின் அறையில், அவரைப் பார்த்ததாகவும் பின்னர் மாவை சேனாதிராசாவைப் பார்த்ததாகவும், தன்னையும் அந்தக் குழுவில் இணைத்துக் கொள்ள அவர் செய்த கடைசி முயற்சியும் வெற்றி பெறாமல் சோர்வுடன் டில்லியிலுள்ள தனது அறைக்குத் திரும்பியதாகவும் 27.9 அன்று சென்னையில் என்னிடம் சிவாஜிலிங்கம் கூறினார்.

18.9 புதன் மாலையே டில்லி போய் விட்டதாகவும் 22.9 மதிய விமானத்தில் சென்னை திரும்பியதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ஈவிரக்கமற்ற ஆயுதபாணிகளே விடுதலைப் புலிகள், என்ற துணைத் தலைப்புடன் இரா. சம்பந்தன் டில்லியில் பேசிய பேச்சின் சாரம் சென்னை இந்துவில் வெளிவந்திருந்தது.

தப்புத் தப்பாய் வெளியிடும் வழமை இந்துவுக்கு உண்டு என்பதால் மற்றொரு ஆங்கில இதழான தெக்கான் குரொனிக்கிள் பார்த்தேன். தலைப்பில் அந்த வரி இல்லை. உள்ளே செய்தியில் அதே வரிகள். நான் வியப்படையவில்லை.

22.9 பின்னிரவு மாவை சேனாதிராசா எனதில்லம் வந்தவேளை நான் உறக்கத்திலிருந்தேன். 23.9 காலை உணவுக்குப் பின் அவர் என்னிடம் பேசினார்.

பிரதமரைப் பார்க்கத் டில்லி சென்றவர்கள் பிரதமரைப் பார்க்கமலே திரும்பினார்கள். பிரதமர் அலுவலக, வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளையும் இணை அமைச்சர் ஒருவரையும் பொதுவுடைமைக் கட்சி யினரையும் பார்த்ததாக மாவை சேனாதிராசா என்னிடம் கூறினார். வேதனையுடன் இருந்தேன். நினைவுக்கு நிகழ்ச்சி ஒன்று வந்தது.



### துணைவேந்தர் குழந்தைசாமி

26.8அன்று தமிழ்க் கணினி வளர்ச்சி தொடர்பான தமிழக அரசின் உள்ளகக் கருத்தரங்கு ஒன்றிற்கு அழைத்திருந்தனர், போயிருந்தேன்.

புலமையாளரையும் பேராசிரியர்களையும் கணினித் தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுடைய என்னையும் அரசு அழைத்திருந்தது.

மாவை சேனாதிராசாவையும் அழைத்துச் சென்றேன்.

தேனீர் இடைவேளையின் பொழுது பேராசிரியர் முனைவர் வா.செ.குழந்தைசாமி என்னிடம் பேசினார். இந்தியாவில் மூன்று பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தரானவர் குழந்தைசாமி. கொழம்பு கட்டுபெத்தை பொறியியற் கல்லூரியில் சில காலம் பேராசிரியராகவும் இருந்தவர். எனக்கு நெருங்கிய அன்பர்.

சிங்களவரின் இராஜதந்திர முயற்சிகளால் 60 நாடுகள் வரை ஈழத் தமிழரின் விடுதலை முயற்சிகளுக்குத் தடையாக உள்ளன. போரில் ஈழத் தமிழர் காட்டும் அதே இறுக்கத்தையும் உத்வேகத்தையும் இராஜதந்திரத்தில் காட்டுவதில்லையே.

உலகம் முழுவதும் ஈழத் தமிழர் பரந்து வாழும் இந்தச் சமயத்தில் சிங்களவரின் இராஜதந்திர முயற்சிகளை முறியடிக்க ஈழத் தமிழரால் முடியவில்லையே சச்சிதானந்தம் என என்னிடம் உரிமையோடு மனம் நொந்து கூறினார்.

பின்னர் அவரிடம் மாவை சேனாதிராசாவை அழைத்துச் சென்றேன். முன்பு என்னிடம் கூறியைத மாவை சேனாதிராசாவிடமும் கூறுங்கள் என அவரிடம் கேட்டுக் கொண்டேன்.

அதையே அவர் திரும்பவும் மாவை சேனாதிராசாவிடமும் சொன்னார்.

**முற்றும்**

# மூளைக் காய்சலிலிருந்து பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்?

## மருத்துவர் வைகலை இராநாதன் நேர்காணல்

**கொரோனா பாதிப்புக்கு மத்தியில் மக்களை அதிகளவுக்குப் பாதிக்கும் மூளைக்காய்ச்சல் தொடர்பாக மருத்துவர் வைகலை இராநாதன் வழங்கிய நேர்காணல். அவர் திருகோணமலை, கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் பணிபுரிகின்றார்.**

பைஸல் இஸ்மாயில்



**மூளைக்காய்ச்சல் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

உலகளவில் இன்று பேசும் பொருளாக இருப்பது கொரோனா மற்றும் ஒமைக்ரோன் பிறழ்வாகும். இலங்கையில் டெங்குநோய் இடைக்கிடையே மக்களை அச்சுறுத்தி வருவதையும் காண்கிறோம். இவைபற்றி கூடியளவு கவனத்தைச் செலுத்தும் நாம், சில முக்கியமான நோய்களைப்பற்றிய விழிப்புணர்வுகளைத் தவறவிட்டு விடுகிறோம் என்பது உண்மையாகும். அந்தவகையில், மூளைக் காய்ச்சல் நோய் பெரியோர் முதல் குழந்தைகள் வரை பாதிப்புக்குள்ளாகின்றனர். விசேடமாக குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் மூளைக் காய்ச்சல் பற்றி சற்று பார்ப்போமானால் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 24 ஆம் திகதி மூளைக் காய்ச்சல் விழிப்புணர்வு தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நோய் ஜப்பானில் முதன் முதலில் 1871 ஆம் ஆண்டு பாரியளவில் இருந்ததை கண்டுபிடித்தனர். அதனால் ஜப்பானிய மூளையழற்சி (Japanese Encephalitis) காய்ச்சல் என்று பெயர் உருவானது. இலங்கையில் ஒரு வயது நிரம்பிய குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கான தடுப்பூசி வழங்கப்படுகிறது.

குறிப்பாக, வளர்ந்துவரும் ஏழை நாடுகளில் மூளைக் காய்ச்சலின் பாதிப்பு கொஞ்சம் அதிகமாக இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அதுமட்டுமல்லாது, மூளைக் காய்ச்சல் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. இரண்டு முதல் பதினைந்து நாட்கள் வரை அதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். குழந்தைகளுக்குச் சளி, இருமல் காரணமாக வருகின்ற காய்ச்சலையெல்லாம் மூளைக் காய்ச்சல் என நினைத்துப் பயந்து விடத் தேவையில்லை.

**காய்ச்சல் ஏன் ஏற்படுகிறது?**

ஏதாவது ஒரு கிருமி உடலுக்குள் செல்லும்போது, உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி அக்கிருமியை எதிர்த்துப் போராடும் போதுதான் காய்ச்சல் ஏற்படுகிறது. அதனால் ஏற்படும் காய்ச்சல் எமது உடலுக்கு ஒரு பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குகின்றது.

**மூளைக்காய்ச்சலை இரு பெயர்களால் அழைக்கின்றனர் இதுபற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம், முதலாவது வகை மூளை அழற்சிக் காய்ச்சலாகும் (Encephalitis) இது மூளைத்திசுக்கள் பாதிப்படைவதனால் ஏற்படுகிறது. அதாவது, மூளையைச் சுற்றிக் காணப்படுவது மூளையுறைகளாகும். இவை கிருமிகள் உட்புகாமலும் ஏதேனும் அதிர்ச்சியினால் மூளை பாதிப்படைவதையும் தடுக்கும் தொழிலைச் செய்கின்றது. இவ்வாறாக இயற்கையில் மூளையும், முதுகுத் தண்டுவடத்தையும் சுற்றியுள்ள மெல்லிய சவ்வுபோன்ற பாதுகாப்புப்படலம் நோய்க் கிருமித் தாக்கத்துக்குற்படும்போதே "மூளைக் காய்ச்சல்" ஏற்படுகிறது.

இரண்டாவது வகை, மூளை உறை அழற்சிக் காய்ச்சலாகும் (Meningitis) இது மூளை உறை பாதிக்கப்படுவதனால் ஏற்படுகிறது. மூளை அழற்ச்சிக் காய்ச்சல் (Encephalitis), மூளை உறை அழற்சிக் காய்ச்சல் (Meningitis) இந்த இரண்டு வகைக் காய்ச்சலும் "மூளைக்காய்ச்சல்" எனக் கூறப்படுகின்றது.

**இக்காய்ச்சலினால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் யார்?**

பொரும்பாலும் ஒரு வயத்திற்குட்பட்ட குழந்தைகளும், 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களும், 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், நாட்பட்ட நோயாளிகள், மதுப் பழக்கம் உடையவர்கள், இடநெருக்கடி அதிகமான இடங்களில் வாழ்வோர், தடுப்பூசிகளை முறைாயாக ஏற்றிக் கொள்ளாதவர்கள் போன்றோரை பெரும்பாலும் தாக்குகின்றது.

**குழந்தைகள் பொரும்பாலும் பாதிப்படையக் காரணம் என்ன?**

குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு பெரும்பாலும் நோய் எதிர்பார்ப்புச் சக்தி பூரணமாக விருத்தியடைந்திருக்காது. அத்துடன் மூளையும் வளரச் செய்கின்ற வயதாக இருப்பதனாலும் இத்தாக்கத்துக்குட்படுகிறார்கள்.

**மூளைக்காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணாங்கள் என்ன?**

சில நோய்களின் தொடர்ச்சியன தாங்கள் இருப்பின் இக்காய்ச்சல் ஏற்படலாம். அதாவது, தட்டம்மை, கக்குவான், இருமல், மலேரியா, கூகைக்கட்டு, காதுத் தொற்றுக்கள் போன்ற நோய்களைக் குறிப்பிடலாம். மேலும் காசநோய்கள், தொண்டைத்தாபிதங்கள், மண்டையோட்டில் ஏற்படும் கிருமித்தொற்றுக்கள், பூஞ்சை, இரசாயணங்களால் வரும் எரிச்சல் என்பவற்றாலும் ஏற்றபடக் கூடும். இவை தவிர பாதிப்படைந்தவருடன் தொடர்புகளைப் பேணல் (தனிநபர் சுகாதாரம் பேணாமை), வீட்டைச் சுற்றியுள்ள கழிவுநீர் தேங்குதலை முறைப்படி அகற்றாமை போன்ற காரணங்களாலும் ஏற்படுகின்றது.

**மூளைக்காய்ச்சலின் அறிகுறிகள் எவை?**

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தையெனின் எந்நேரமும் அழுகை, சிணுங்கிச் சிணுங்கி அழுதல், காய்ச்சல் மற்றும் வலிப்பு, திடீர் அசைவுகள் போன்ற அறிகுறிகள் காணப்படும். பெரும்பாலும் நினைவிழக்கும் வரை நிலமை மோசடையலாம்.

ஏனையோருக்கு திடீரென கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, குமட்டல், வாந்தி, மனக்குழப்பம், வலிப்பு, பசியின்மை, கழுத்துப்பிடிப்பு, தூக்கம், சோம்பல், ஒளியைப் பார்க்க முடியாமை, சுயநினைவை இழக்கச் செய்து கோமா நிலைக்கு ஆளாதல் போன்ற அறிகுறிகளைக் குறிப்பிடலாம்.

இருப்பினும், அறிகுறிகளை மட்டும் வைத்துக் கொண்டு முடிவு எடுப்பதை விட உடனடியாக வைத்தியரை அணுகி முறையான பரிசோதனைகளை செய்து சிகிச்சை எடுப்பது நல்லது.

**மூளைக்காய்ச்சலின் காரணிகள் என்ன?**

அறிகுறிகள் பெரும்பாலும் ஒரே தன்மையானதாக இருப்பினும், ஏற்படுத்தும் காரணியைப் பொறுத்தும் அதன் தீவிரத் தன்மையைப் பொறுத்தும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றது. ஆனால் மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைகளே அக்காரணியை உறுதிப்படுகிறது.

அதாவது, வைரஸ் முளைக்காய்ச்சல் (Virus meningitis), பக்றீரியா முளைக் காய்ச்சல் (Bacterial meningitis), பூஞ்சை மூளைக்காய்ச்சல் (Fingal meningitis), ஒட்டுண்ணி மூளைக்காய்ச்சல் (Parasitic meningitis), தொற்று அல்லாத மூளைக்காய்ச்சல் (Non infectious meningitis) போன்ற மூளைக்காய்ச்சல் வகைகளைக் கொண்டும் அறியலாம்.

**நீங்கள் குறிப்பிட்ட 5 வகைக் காரணிகளைப் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

**வைரஸ் மூளைக்காய்ச்சல்:-** இது பொதுவாக ஏற்படும் ஒருவகை Entro Virus என அழைக்கப்படும். Herpes, mumps தன்மை கொண்டது. மூளைக் காய்ச்சலினதும், பக்றீரியா முளைக் காய்ச்சலினதும் அறிகுறிகள் மிகவும் கடுமையானது. இது வயதைப் பொருத்தே அறிகுறிகளும் மாறுபடும்.

பக்றீரியா மூளைக்காய்ச்சல்: - இது Neisseriraia meningitis, streptococcus போன்ற நுண்ணுயிர்கள் காதுவழித் தொற்று மூலமும், அறுவைச் சிகிச்சை மூலமும் உடலினுள் சென்று இரத்த சுற்றோட்டத்தில் கலந்து மூளை மென்சவ்வுக்குள் பரவி விடும். இதனால், உயிருக்கு தீவிர ஆபாத்தை விளைவித்து விடும்.

**பூஞ்சை மூளைக்காய்ச்சல்:-** இது பெரும்பாலும் ஏற்படுவது குறைவு. அரிதானது ஒப்பீட்டளவில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தோருக்கே ஏற்படுகிறது. Cryptococcus, coccidiosis's போன்ற காரணிகளால் இரத்தச் சுற்றோட்டத்தில் கலந்து மூளை, முதுகெலும்புக்கு பயணிக்கிறது. எனினும் ஆரம்பத்தில் இதை கண்டு பிடித்தால் குணப்படுத்தலாம்.

**ஒட்டுண்ணி மூளைக்காய்ச்சல்:-** அழுக்கு, மலம், இறந்த மீன், அழுகிய கோழி போன்றவற்றில் இருக்கும் ஒட்டுண்ணி காரணமாக ஏற்படுகிறது. இதுவும் மற்றையவைகளைவிட ஒப்பீட்டளவில் ஏற்படுவது குறைவாகும்.

**தொற்றல்லாத மூளைக்காய்ச்சல்:-** தொற்று நோயல்லாத காரணத்தின் விளைவுகளால் கூட மூளைக்காய்ச்சல் ஏற்படலாம். Lupus, Sarcoidosis போன்ற நோய்களைக் குறிப்பிடலாம்.

**இந்த நோய்த்தாக்கத்தின் மூலம் பக்கவிளைவுகள் ஏதும் ஏற்பட வாய்ப்புள்ளதா?**

ஆம், ஆரம்பத்திலேயே விழிப்புணர்வுடன் இருந்துகொண்டு காய்ச்சல் ஏற்படும்போது அலட்சியம் செய்யாது வைத்தியரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் சில வகையான நினைவகச் சிக்கல்கள், அதிர்ச்சி, கற்றல் குறைபாடுகள், மூளைப் பாதிப்பு, மூளை நீர்க்கோவை, கீல் வாதம், காது கேளாமை, நடைப் பிரச்னைகள் போன்றவைகள் ஏற்படலாம். இறுதியில் இறப்புக்கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

**இந்நோய் தொற்றும் அபாயம் உள்ளதா?**

சிலவகையான பக்றீரியாக்களினால் மூளைக்காய்ச்சல் நோய் தொற்றிக்கொள்ளும் தன்மையடையது. அதாவது, தொற்று நோயுள்ள ஒருவரின் வாய் அல்லது மூக்கிலிருந்து வெளிவரும் சளி மூலமாக மற்றவருக்குப் பரவலாம். இருமுதல், முத்தமிடுதல், தொற்றுள்ளவரின் கைக்குட்டையை பயன்படுத்தல் போன்றவற்றாலும் ஏற்படலாம். சாதாரண தடிமன், காய்ச்சல் உள்ளவர்களின் மூலம் பரவிவிடும் என அச்சப்படத் தேவையில்லை. நெருங்கிய தொடர்பிலிருப்போர் சற்று எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

**இந்த நோய் தொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்பட்டாலோ அல்லது குழந்தைகள் திடீரென நினைவிழந்தாலோ, வலிப்பு வந்தாலோ உடனே பிள்ளைகளை வைத்தியரிடம் காண்பித்து சிகிச்சையளிக்க வேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியை பலமாக வைத்திருந்தால் எந்த நோய்களும் அணுகாது. குழந்தைப் பருவத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் சேர்ந்து மூளை விருத்தியும் நடக்கிறது. அதனால் குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்துக்களையும், முறையான சுகாதகரப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் இந்த நோயிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

விட்டுக்குள்ளும், வெளியேயும் சுகாதாரத்தைப் பின்பற்றவேண்டும். திண்மக்கழிவுகளை முறையாக அகற்றுதல், தண்ணீர் தேங்காமலும், கொசுக்கள் நுளம்புகள் பெருகாமலும், நுளம்புக்கடிக்கு உள்ளாமாகலும், வீட்டிலுள்ளோர் பாதுகாப்பாக இருத்தல். குறிப்பாக மழைக் காலங்களில் கவனமாக இருக்கவேண்டும். சுகாதாரமாக இருப்பதை நாம் உறுதி செய்யும்போது இந்த நோய் மாட்டுமின்றி பெரும்பாலான நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

விசேடமாக, தடுப்பூசிகளை முறையாக ஏற்றிக்கொள்ளல் வேண்டும். இவற்றை முறையாக அந்தந்த காலத்திற்குகெற்ப ஏற்றிக்கொள்வதன் மூலம் குழந்தைகள் மட்டுமல்ல பெரியோர்களும் பாதுகாப்பாக இருப்பதற்கு வழிவகுக்கும். இதைத்தவிர தொற்று ஏற்பட்டபவர்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தாது இருத்தல் அவசியமாகும்.



**ஆங்கிலத்தில் ‘லவ்’ என்று சொன்னால் அது அன்பைக் குறிக்கும். யாரைப் பார்த்தும் ‘லவ்யூ’ சொல்ல முடியும், தவறாக எடுக்க மாட்டார்கள். ஆனால் தமிழில் அப்படி அல்ல, அன்பு என்ற சொல்லை இன்னும் விளக்கமாக, தெளிவாகப் பிரித்திருக்கிறார்கள். அன்பு, பாசம், காதல், நேயம், பக்தி என்று அன்புக்குத் தனித்தனியாக விளக்கம் தந்திருக்கிறார்கள்.**

# அன்பைப் பரிமாறும் தினம் காதலர்களுக்கு மட்டும்தானா?

**குரு அரவிந்தன்**

வெலன்ரைன் தினம் என்பது உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் பலராலும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாகும். பொதுவாக அன்பைப் பரிமாறும் தினமாக இதை எடுத்துக் கொள்வதால், ‘அன்பைப் பரிமாறும் நாள்’ என்றும் குறிப்பிடுவர். இத்தினத்தில் வேறுபாடு காட்டாமல் யாரும் யாரிடமும் தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்வதால், மனதால் பண்பட்ட யாரும் அதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

அதே சமயம் காதலர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்த, அல்லது பரிமாறிக்கொள்ள இந்த நாள் உகந்ததாகவும் இருப்பதால், ‘காதலர்கள் தினம்’ என்றும் குறிப்பிடுவர். சில நாடுகளில் 9 நாட்கள் இதைக் கொண்டாடுவர். காதலைக் கொண்டாடாத நாடுகளே இல்லை என்பதால், தொடக்கத்தில் அன்பைப் பரிமாற காதலர்கள் இயற்கை தந்த மலர்களையும், அவர்களுக்குப் பிடித்தமான இனிப்பு போன்றவற்றையும் பரிமாறினர். அதன் பின் கையால் எழுதிய வாழ்த்து மடல்களையும், தொடர்ந்து அச்சு யந்திரங்கள் வந்ததால் அச்சிட்ட வாழ்த்து மடல்களைப் பரிமாறும் வழக்கமும் அறிமுகமானது.

வெலன்ரைன் தினம் எப்படி அறிமுகமானது என்பதைப் பார்ப்போம். மூன்றாம் நூற்றாண்டில் ரோமானிய அரசனான இரண்டாம் கிளாடியஸ் பேரரசர் இரண்டு பேருக்குத் தண்டனை கொடுத்து அவர்களை பெப்ரவரி 14 ஆம் திகதி தூக்கிலிட்டார். வெவ்வேறு ஆண்டுகளில் அவர்கள் தூக்கிலிடப் பட்டாலும் அவர்களைப் போன்ற தியாகிகளுக்கு வெலன்ரைன் என்று பெயரிட்டார்கள். பெப்ரவரி 14 ஆம் திகதி அன்று நடந்ததால், அவர்கள் செய்த தியாகம் புனித காதலர் தினமாகப் 14 ஆம் நூற்றாண்டில் இருந்து கொண்டாடப்படுகின்றது. இதைப்பற்றி, ‘செயிண்ட் வெலன்ரைன் தினத்திற்கானது இது, ஒவ்வொரு பறவையும் தன்னுடைய இணையைத் தேடி வரும்போது’ என்று ஜெப்ரி சாஸர் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆங்கிலத்தில் ‘லவ்’ என்று சொன்னால் அது அன்பைக் குறிக்கும். யாரைப் பார்த்தும் ‘லவ்யூ’ சொல்ல முடியும், தவறாக எடுக்க மாட்டார்கள். ஆனால் தமிழில் அப்படி அல்ல, அன்பு என்ற சொல்லை இன்னும் விளக்கமாக, தெளிவாகப் பிரித்திருக்கிறார்கள். அன்பு, பாசம், காதல், நேயம், பக்தி என்று அன்புக்குத் தனித்தனியாக விளக்கம் தந்திருக்கிறார்கள். 8 ஆம், 9 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நாயன்மார்களின் பாடல்களில் இருந்து ஓரளவு இதைப் புரிந்து கொள்ள முடியும். அளவுகடந்த பக்தி எப்படித் தெய்வீகக் காதலாகிறது என்பதைப் பாருங்கள். காதலர்கள் கிளியை, அன்னத்தை, புறாவை எல்லாம் தூது விடுவார்கள். ‘சிறையாரும் மடக்கிளியே இங்கே வா, துறையாரும் கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம் பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயோ..? என்று திரு ஞானசம்பந்தர் பாடுகின்றார். ‘முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே’ என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார். ‘மலர்ச்சோலைப் பசுங்கிளியே சொல்லுங் குருநாதர் மாலைதனை நீ வாங்கி வா’ என்று காங்கேசந்துறை இறங்கணியவளை பெண்ணொருத்தி அழகன் முருகனுக்குத் தூது விடுவதாக 17 ஆம் நூற்றாண்டில் வரத பண்டிதர் பாடுகின்றார்.

உலகெல்லாம் காதலர்கள் இருப்பதால், அன்பைப்பரிமாற வயதெல்லை இல்லை என்பதால் உலகெங்கும் இப்போது கொண்டாடப் படுகின்றது. சொல்லாத காதலைச் சொல்வதற்குச் சிறந்த நாள் மட்டுமல்ல, ஒருதலைக்காதல் உடைந்து போவதும் இந்த நாளில்தான். சில சமூக மக்களிடையே காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே, சிலருக்குக் கசப்பதும் உண்டு. மேலை நாட்டுப் பண்பாடுகளை எங்களிடம் திணிக்கிறார்கள் என்று அரசியல் செய்பவர்களும் உண்டு. இதய வடிவலான உருவம், இரட்டைப்புறாக்கள், புறாக்கள் தூதுபோவது போன்ற ஓவியம், சிறகுகளுள்ள தேவதையின் உருவம், மன்மத அம்புகள் போன்றவற்றைக் காதலர் தின குறியீடுகளாகச் சிலர் பாவிப்பர். பொதுவாக சிகப்பு ரோஜா மலர்கள்தான் கொடுப்பார்கள். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்த்து மடல்களை இங்கிலாந்தில் எஸ்தர் ஹாவிலண்ட் என்பவர்தான் கையால் வரைந்து விற்பனை செய்யத் தொடங்கினார். நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களுக்கு அடுத்ததாக அதிகம் விற்பனையாகும் மடல்கள் காதல்தின வாழ்த்து மடல்கள்தான். இங்கே வடஅமெரிக்காவில் பெண்களைவிட ஆண்கள்தான் வெலன்ரைன் தினத்திற்காக அதிகம் செலவிடுவதாகக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கட்டுரையை எழுதும் போது, வெலன்ரைன் தினத்திற்கும் எனக்கும் என்ன தொடர்பு என்று பின்நோக்கிச் சென்று பார்த்தேன். ஒரு எழுத்தாளன் என்ற வகையில் அதிகம் வாசிக்கப்படும் கதையும் காதலர்தினக் கதைதான் என்பதை எனது எழுத்து அனுபவத்தில் புரிந்து கொண்டேன். விகடனில் வெளிவந்த எனது முதற்கதை ‘காதல் என்பது.’ காதல் திருமணம் செய்த இருவரின் புரிந்துணர்வு பற்றிய கதை. ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையில் காதலர்தினக் கதை எழுதிவந்தேன். தொடர்ந்து 16 வருடங்கள் காதலர்தினக் கதை எழுத முடிந்த தால் அதுவே ஒரு சாதனையாகி விட்டது. ‘என்காதலி ஒரு கண்ணகி’ என்ற சிறுகதைத் தொகுப்பாக அவற்றை வெளிட்டிருந்தேன். ஆனந்தவிகடன் ஆசிரியர் காதலர்தின மலரில் வெளியிட காதலர்தினக் கதை ஒன்று கேட்டிருந்தார். ‘அவளுக்கு ஒரு கடிதம்’ என்ற கதையை அனுப்பி வைத்தேன். அந்த மலரில் அதிக வாகர்கள் வாசித்த, விமர்சித்த கதை அது என்று ஆசிரியர் பின்பு குறிப்பிட்டிருந்தார். அவர் தந்த விமர்சன கடிதங்களை வாசித்த போது அதிக வாசகர்கள் தமிழ்நாட்டுப் பல் கலைக்கழக மாணவிகள் என்பது தெரிய வந்தது. இந்தியாவைவிட இலங்கை, லண்டன், ஜெர்மனி, கனடா ஆகிய ஐந்து நாடுகளிலும் அதே வருடம், அதே மாதம் எனது காதலர்தினக் கதைகள் வெளிவந்து சாதனை படைத்திருந்தது. வேறு எந்த மொழியிலும் இப்படியான ‘காதலர்தின’ சாதனை இதுவரை இடம் பெறவில்லை.




பிரான்ஸ் நாட்டில் காதலர் தினத்தை ‘செயிண்ட் வெலன்ரைன்’ என்றும், போத்துக்கல் நாட்டில் ‘ஆண்கள்-பெண்கள் தினம்’ என்றும், சுவீடன் நாட்டில் ‘அனைத்து இதயங்களின் நாள்’ என்றும், பின்லாந்தில் ‘நண்பர்கள் தினம்’ என்றும், துருக்கியில் ‘இனிய இதயங்களின் தினம்’ என்றும், கௌதமாலாவில் ‘காதல்-நட்பு பாரட்டுத் தினம்’ என்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில் ‘இதயங்களின் தினம்’ என்றும் இப்படி ஒவ்வொரு நாட்டவர்களும், அன்பைப் பரிமாறுவதற்கு ஏதோ ஒரு பொருத்தமான பெயரைச் சூடியுள்ளார்கள். யப்பான் நாட்டில் பெண்கள்தான் இத்தினத்தில் ஆண்களுக்கு இனிப்புக் கொடுக்க வேண்டுமாம். யார் அதிக இனிப்பு சேகரிக்கிறார் என்பதில் இருந்து அவரது பிரபலம் வெளிப்படுமாம். இதோ யப்பானியக் கவிதையில் இருந்து சில வரிகள்.

“என் காதலனே, ஆடை ஒருபுறம் மாறிட கனவு வரும்
உண்மையாக உன்னையே நேரில் கண்டது போல!
சேராவிடினும் நான் துன்புறமாட்டேன், இந்த தலையணையை
நான் என்று எண்ணிடுவாய் அணைத்து உறங்கிடுவாய்!”

சங்க இலக்கியத்தை எடுத்துப் பார்த்தால், காதலர்கள் ஊடலும் கூடலும் பிரிதலும் நோதலும் இரங்கலுமாகத் தம்முள் கொள்ளும் காதலுணர்வுகள் சொல்லிப் புரிய வைக்க முடியாதவை. இப்போது ஆறாம்நிலத்திணையான கனடா பனிப்புலத்தின் ‘உருகுதலும்’ இந்த ஐந்துடன் சேர்ந்து கொள்கிறது. காதலர் தினத்தைத்தான் அன்று தமிழர்கள் ‘காமன் பண்டிகை’ அல்லது ‘இந்திர விழா’ என்று 28 நாட்கள் கொண்டாடினார்கள். அந்த நாளில் தமிழர் கொடுத்த காதலர் தினப் பரிசு என்வென்று பாருங்கள், ‘மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே..’ என்று வார்த்தைகளால் காதலிக்குப் புகழாரம் சூட்டினார்கள். அப்படிப் பெண்களை வர்ணிக்கும்போது, வேறு எந்த ஒரு பரிசும் அதற்கு நிகராகாது என்பதையும் ஆண்கள் தெரிந்து வைத்திருந்தனர்.

1999 ஆம் ஆண்டு காதலர்தினம் என்ற பெயரில் தமிழ் திரைப்படம் ஒன்று வெளிவந்தது. குணால், சோனாலி ஆகியோர் நடித்திருந்தனர். இந்தக் கட்டுரையை வாசிக்கும்போது, ஒவ்வொருவர் மனதிலும் தங்கள் அனுபவம் என்ற சின்னதான ஒரு குறும்படம் ஓடலாம். தோல்விகளைக் கண்டு மனம் தளராதீர்கள், வாழ்ந்து காட்டுங்கள். நீங்கள் நினைப்பது போல, ‘வெற்றிகள் எல்லாம் வெற்றிகளுமில்லை, தோல்விகள் எல்லாம் தோல்விகளுமில்லை! காதல் வலிகளும் ஒரு நாள் கடந்து செல்லும்.’

‘காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்
கானமுண்டாம், சிற்ப முதற் கலைகளுண்டாம்
ஆதலினாற் காதல் செய்வீர், உலகத்தீரே!’
என்று புதுமைக்கவி பாரதியும் பாடியிருக்கின்றான். ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே!



## வெற்றி யாருக்கு?

தமிழ் திரையுலகில் விஜய் அளவுக்கு தெலுங்கில் ரசிகர்களை கொண்டிருப்பவர் மகேஷ் பாபு. இவர் நடித்த படங்களின் மீளுருவாக்கத்தில் விஜய் நடித்து வெற்றி பெற்றதால் இரு நடிகர்களையும் ரசிகர்கள் அடிக்கடி ஒப்பிடுவது வழமை.

இந்த நிலையில் விஜய் நடித்துள்ள பீஸ்ட் படத்தின் முதல் சிங்கிளும், மகேஷ் பாபு நடித்துள்ள சர்க்காரு வாரி பாட்டா படத்தின் முதல் சிங்கிளும் நாளை வெளியாகிறது. இதில், யாரின் பாடல் யூ - ரியூப்பில் அதிக பார்வைகளை பெறும் என்பதில் ரசிகர்களிடையே மோதல் இப்போதே தொடங்கி விட்டது.

எனினும், விஜயின் பாடல்கள், டீசர்கள், முதல்பார்வைகள் யூ ரியூப்பில் சாதனை படைத்த அளவுக்கு மகேஷ் பாபுவின் சாதனைகள் குறைவு என்பதும் குறிப்பிடத்தக்கது.



## மோனிகாவின் தேனிலவு

அட்லி இயக்கத்தில் விஜய் நடித்த பிகில் படத்தில் விளையாட்டு வீராங்கனையாக நடித்தவர்களில் மலையாள நடிகை ரெபா மோனிகா ஜோன் முக்கியமானவர். இவர் கடந்த ஜனவரி 9இல் தனது நீண்டநாள் காதலரான ஜோமோன் ஜோசப் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் தங்கள் தேனிலவு மற்றும் காதலர் தின கொண்டாட்டத்திற்காக மாலைதீவு சென்றுள்ள ரெபா மோனிகா ஜோன் கணவருடன் கடற்கரையில் எடுத்த படங்களை தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

# திரை விமர்சனம்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | கடைசி விவசாயி |
| இயக்கம் | : | மணிகண்டன் |
| இசை | : | சந்தோஷ் நாராயணன், ரிச்சர்ட் ஹார்வி |
| நடிப்பு | : | நல்லாண்டி, விஜய் சேதுபதி, யோகி பாபு |




இயக்குநர் மணிகண்டன் மீண்டும் ஒரு யதார்த்த வாழ்வியலை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார். விஜய் சேதுபதி, யோகி பாபு தவிர படத்தில் நடித்துள்ள மற்றவர்கள் இதற்கு முன்பு சினிமாவில் நடித்திருப்பார்களா என்பது சந்தேகம் தான். அந்த அளவிற்கு அவரவர் கதாபாத்திரங்களாகவே திரையில் தெரிகிறார்கள்.

கிராமத்தில் பல வருட மரம் ஒன்றின் மீது இடி விழுந்து அழிந்து போகிறது. குல தெய்வத்துக்கு திருவிழா நடத்தாதே இதற்குக் காரணம் என ஊர் பஞ்சாயத்து கூடிப் பேசி திருவிழா நடத்த திட்டமிடுகிறார்கள். குல தெய்வப் படையலுக்காக ஊரின் வயதான விவசாயி நல்லாண்டியிடம் நெல்லைப் பயிரிட்டு தரச் சொல்கிறார்கள். அவரும் தனது நிலத்தில் பயிரிட ஆரம்பிக்கிறார். ஒருநாள் நிலத்தின் அருகே மயில்கள் இறந்து கிடக்க அதை எடுத்து புதைக்கிறார். ஆனால், மயில்களைக் கொன்று புதைத்ததாக அவர் மீது பொய் வழக்கு தொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார். ஊர் திருவிழாவுக்காகப் பயிரிடப்பட்ட நெல் வயலைப் பராமரிப்பதில் சிக்கல் வருகிறது. சிறையிலிருந்து விடுதலையாகி நல்லாண்டி வெளியில் வந்தாரா, எந்த பாதிப்பும் இல்லாமல் நெல் அறுவடையானதா, ஊர் திருவிழா நடந்ததா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

கிராமம், அங்குள்ள இயல்பான மனிதர்கள், ஊர்த் திருவிழா, எழுந்து அடங்கும் சாதிப் பிரச்னை, பொலிஸாரின் பொய் வழக்கு, நேர்மையாக விசாரிக்கும் நீதிபதி என ஒரு விவசாய கதைக்குள் திரைக்கதையிலிருந்து விலகாமல் என்னென்ன பிரச்னைகளைப் பேச முடியுமோ அவற்றை உள்ளது உள்ளபடி சொல்லியிருக்கிறார் இயக்குநர்.

மாயாண்டி என்ற வயதான விவசாயி ஆக நல்லாண்டி. படம் வெளியாகும் போது அவர் இந்த உலகத்திலேயே இல்லை என்பது வருத்தமே. எந்த ஒரு காட்சியிலும் அவர் நடித்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. நிலம், நெல், விவசாயம், ஊர் திருவிழா, மாடு, கோழி என அனைத்தின் மீதும் பாசமான ஒரு மனிதரை இந்தக் காலத்தில் இந்தத் தலைமுறை பார்த்திருக்குமா என்பது சந்தேகம்தான். எப்போதுமே ஒரு தீர்க்கமான பார்வை, அத்தனை வயதிலும் தள்ளாத நடை, தளர்வில்லாத உழைப்பு, சிறைக்குச் சென்றாலும் நெல்லுக்கு என்ன ஆச்சோ என்ற பதைபதைப்பு என மாயாண்டி கதாபாத்திரத்தில் நல்லாண்டி அவராகவே வாழ்ந்திருக்கிறார்.

தனது முறைப் பெண் அகால மரணமடைந்ததால் கொஞ்சம் மனநிலை தடுமாறி ஊர் ஊராக சுற்றிக் கொண்டிருப்பவராக விஜய் சேதுபதி. முருகன் மீது அளவு கடந்த பக்தி கொண்ட பக்தர். படத்தில் இந்தக் கதாபாத்திரம் இருந்தாலும் இல்லையென்றாலும் படத்திற்கு பாதகமும் இல்லை, சாதகமும் இல்லை. ஒரு நல்ல படத்தில் நாமும் இருக்க வேண்டும் என விஜய் சேதுபதி நினைத்து நடித்திருக்கலாம். அதே எண்ணத்தில் யோகி பாபுவும்கூட நடித்திருக்கலாம். அவரும் சில காட்சிகளே வந்துபோகிறார்.

படத்தில் இருக்கும் முக்கியமான ஒரே பெண் கதாபாத்திரம் நீதிபதி. பெண் நீதிபதியாக ரெய்ச்சல் ரெபேகா. இப்படி ஓர் எளிமையான நீதிபதியை திரையில் பார்ப்பதும் ஆச்சரியம்தான். மண்மீதும், மனிதர்கள்மீதும் பாசமான ஒரு நீதிபதியாக ரெய்ச்சல் இயல்பாக நடித்திருக்கிறார்.

சந்தோஷ் நாராயணன், ரிச்சர்ட் ஹார்வி இருவரின் இசையும் தேவையான இடங்களில் மட்டும் ஒலிக்கிறது. சில இடங்களில் இசை இல்லாத நிசப்தமே இருக்கிறது. உணர்வுகளை இசை வழியே கடத்தும் இசை இன்னும் இருந்திருக்கலாமோ என்ற ஏக்கமும் வருகிறது.

ஒரு சில இடங்களில் ஆவணப்படமோ என்ற எண்ணம் எழுகிறது. வசனங்களும் சில இடங்களில் தடுமாறுகிறது. ஆனாலும் தமிழ் திரையுலகில் ஆழமாக தடம் பதித்துள்ளது கடைசி விவசாயி.



## ரஜினியை இயக்கும் நெல்சன்!

அண்ணாத்த படத்திற்கு பின் பல இயக்குநர்களிடம் கதை கேட்டு வந்தார் நடிகர் ரஜினிகாந்த். பல இயக்குநர்களின் பெயர்கள் அடிபட்ட நிலையில், ரஜினியின் 169ஆவது படத்தை நெல்சன் திலீப்குமார் இயக்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அனிருத் இசையமைக்கிறார். ஏப்ரல் படத்தின் பூஜையும், மேயில் படப்பிடிப்பும் தொடங்குகிறது.

கோலமாவு கோகிலா படம் மூலம் இயக்குநராக அறிமுகமான நெல்சன் அடுத்து சிவகார்த்திகேயனை வைத்து டாக்டர் படத்தை இயக்கி வெற்றி பெற்றார். இப்போது விஜயின் பீஸ்ட் படத்தை இயக்கி உள்ளார். ஏப்ரலில் பீஸ்ட் வெளியாக உள்ள நிலையில் அடுத்தப்படியாக ரஜினி பட வாய்ப்பை பெற்றுள்ளார்.

## முக்கோண காதல்

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் உருவாகி உள்ள படம் 'காத்துவாக்குல ரெண்டு காதல்'. இதனை நயன்தாராவு டன் இணைந்து அவரே தயாரிக்கிறார். நயன்தாரா, விஜய் சேதுபதி, சமந்தா, பிரபு, கலா மாஸ்டர், ரெடின் கிங்ஸ்லி உட்பட பலர் நடிக்கிறார்கள். அனிருத் இசை.

முக்கோண காதல் கதையான இந்தப் படத்தின் டீசர் வெளியாகியது. இதில், கண்மணி எனும் நயன்தாரா, கதிஜா எனும் சமந்தா ஆகிய இரண்டு பேரையும் காதலிப்பவராக விஜய் சேதுபதி நடித்துள்ளார். இவர்க ளுக்கு இடையேயான பயணத்தை உணர்வுகளுடன் நகைச்சுவை, காதல் கலந்து இயக்கி உள்ளார் விக்னேஷ் சிவன்.



# சகாப்தம் முடிகிறதா?




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியில் மூத்த வீரர்கள் ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்ருவர்ட் பிரோட் ஆகியோர் சேர்க்கப்படாதது ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி அடுத்த மாதம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. ஆஷஷ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 0-4 என படுதோல்வி அடைந்ததையடுத்து, தலைமைப் பயிற்றுவிப்பாளர் பொறுப்பிலிருந்து கிறிஸ் சில்வர்வூட் நீக்கப்பட்டார்.

துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் கிரஹாம் தோர்ப் பதவி விலகினார். இங்கிலாந்து ஆடவர் கிரிக்கெட் அணியின் இயக்குநர் பொறுப்பிலிருந்து ஆஷ்லே கைல்ஸ் நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, இடைக்கால இயக்குநராக ஆண்ட்ரூ ஸ்டிராஸ் பொறுப்பேற்றார். இங்கிலாந்து கிரிக்கெட்டில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்ததால், அணித் தேர்விலும் பெரிய மாற்றங்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எவரும் எதிர்பாராத வகையிலான பெரிய மாற்றங்கள் இங்கிலாந்து அணியில் நிகழ்ந்துள்ளன.

இங்கிலாந்தின் மூத்த பந்துவீச்சாளர்கள் ஜேம்ஸ் அண்டர்சன் மற்றும் ஸ்டுவர்ட் பிரோட் ஆகியோர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் இடம்பெறவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்களை வீழ்த்தியவர்கள் வரிசையில் 640 விக்கெட்களுடன் 3-வது இடத்தில் உள்ளார் அண்டர்சன். ஸ்ருவர்ட் பிரோட் 537 டெஸ்ட் விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

ஆஷஷ் டெஸ்ட் தொடரிலும் அண்டர்சன் 3 போட்டிகளில் 8 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். அவரின் பந்துவீச்சு சராசரி 23.37. ஆஷஷில் ஸ்ருவர்ட் பிரோட்டும் சிறப்பாகவே பந்துவீசியுள்ளார். அவர் 13 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். சராசரி 26.30.

ஆஷஷ் தொடரில் இங்கிலாந்துக்குப் பெரும் பின்னடைவாக அமைந்தது துடுப்பாட்டம். எனினும், பந்துவீச்சில் இந்தத் துணிச்சலான மாற்றத்தை இங்கிலாந்து கிரிக்கெட் செய்துள்ளது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அண்டர்சன், பிரோட் தவிர்த்து ஆஷஷ் தொடரில் விளையாடிய மேலும் 6 வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மூத்த வீரர்களான அண்டர்சன், பிரோட்டின் வருங்கால செயல்பாடுகளை பொறுத்தே அணியில் மீண்டும் இடைபெறுவர் என்று ஸ்டிராஸ் கூறியிருக்கிறார். இதிலிருந்து இருவரும் மீண்டும் எழுவார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# நடாலின் சம்பாத்தியம்!



ரபேல் நடால் - ஸ்பெயின் நாட்டின் ரென்னிஸ் வீரரான இவர் தனது நான்கு வயதிலிருந்தே ரென்னிஸ் விளையாடத் தொடங்கியவர். 'Association of Tennis Professionals' என்ற சங்கத்தின் உலக ரென்னிஸ் வீரர்களின் தரவரிசை பட்டியலில் ஐந்தாவது இடத்தைப் பெற்றிருப்பவர். இவர் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 21 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

இதுவரை 90 பட்டங்களை வென்றிருக்கும் நடால், ஒற்றையர் பிரிவில் களிமண் ஆடுகளங்களில் மட்டும் 62 பட்டங்களை வென்றுள்ளார், அவர் பெற்ற 13 பிரெஞ்சு ஓப்பன் பட்டங்களும் இதில் அடங்கும். களிமண் ஆடுகளங்களில் தொடர்ச்சியாக அவர் பெற்ற 81 வெற்றிகளே, ஒரே பரப்பில் ஒரு வீரர் தொடர்ச்சியாகப் பெற்ற வெற்றிகளாக இருக்கின்றன.

இவர், கடந்த ஜனவரி 30 அன்று ரபேல் நடால் அவுஸ்திரேலிய ஓப்பன் கிராண்ட் ஸ்லம் இறுதிப் போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த டானில் மெட்வெடேவை தோற்கடித்து தனது 21ஆவது கிராண்ட் ஸ்லாமை வென்றார். இத்துடன் 21 கிராண்ட் ஸ்லம் பட்டங்களை வென்ற முதல் ரென்னிஸ் வீரர் என்னும் சாதனையையும் படைத்தார். 35 வயதான ரபேல் நடால் அவரின் வாழ்க்கை முழுவதும் தனிப்பட்ட முறையில் (ஒற்றையர்) 89 பட்டங்களையும், இரட்டையர்கள் பிரிவில் 11 பட்டங்களையும் குவித்துள்ளார்.

மொத்தத்தில் அவர் பரிசுத் தொகையாக ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆட்டத்தைச் சேர்த்து ரென்னிஸ் விளையாட்டின் மூலம் சம்பாதித்தது 127 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (இலங்கை மதிப்பில் சுமாராக 2ஆயிரத்து 565 கோடி ரூபாய்). இந்த அவுஸ்திரேலிய ஓப்பனில் வெற்றி பெற்றதன் மூலம் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை (இலங்கை மதிப்பில் 40 கோடி ரூபாய்) பரிசுத் தொகையாக பெற்றிருக்கிறார் நடால். இந்த எண்ணிக்கையில் வணிக ஒப்பந் தங்கள் மற்றும் விளம்பரம் தொடர் பான நடாலின் கூடுதல் வருமா னங்கள் சேர்க்கப்படவில்லை.

# இலங்கையின் எதிர்காலம்!




மேற்கிந்தியத் தீவுகளில் நடை பெற்று முடிந்த 14ஆவது 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை கிரிக்கெட் அணித் தலைவராக செயல்பட்ட துனித் வெல்லாலகே அதிக விக்கெட்களை வீழ்த்தியவர் என்ற சிறப்பைப் பெற்றார்.

பந்துவீச்சு மாத்திரமின்றி துடுப்பாட்டத்திலும் சிறப்பாக பிரகாசித்த துனித் வெல்லாலகே, தான் ஒரு முழுமை பெற்ற சகலதுறை வீரர் என முழு உலகுக்கும் காட்டினார்.

கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி மாணவனான துனித் வெல்லாலகேயின் தலைமைத்துவப் பண்பும் பாராட்டத்தக்க ஒரு விடயமாக அமைந்தது. இவர் 6 போட்டிகளில் விளையாடி இரு முறை 5 விக்கெட்களை வீழ்த்தியதுடன் மொத்தமாக 17 விக்கெட்களை வீழ்த்தி, 13.58 என்ற பந்துவீச்சு சராசரியை கொண்டுள்ளார்.

ஸ்கொட்லாந்து அணிக்கு எதிரான லீக் போட்டியில் 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை கைப்பற்றியமை இவரின் சிறந்த பந்துவீச்சு பெறுதியாகும். பந்துவீச்சில் அசத்தியிருந்த துனித் வெல்லாலகே, துடுப்பாட்ட நுணுக்கங்களுடன் திறமையாக துடுப்பெடுத்தாடி அணயின் வெற்றிக்கு பங்காற்றியமையும் குறிப்பிடத்தக்கது.


6 போட்டிகளில் ஒரு சதம் மற்றும் ஓர் அரைச் சதம் அடங்கலாக 264 ஓட்டங்களைப் பெற்று அதிக ஓட்டங்களை அடித்த வீரர்கள் வரிசையில் ஏழாவது இடத்தை பெற்றார். இந்தத் தொடரில் இலங்கை சார்பாக விளாசப்பட்ட ஒரு சதம் இவரால் அடிக்கப்பட்டதாகும். வேறு எந்த இலங்கை வீரரும் சதம் அடிக்கவில்லை. துனித் வெல்லாலகேயை தவிர, பந்துவீச்சில் டிரெவின் மெத்தியூ, மத்தீஷ பத்திரண, வினூஜ ரன்புல், ரவீன் டி சில்வா உள்ளிட்டோர் சிறப்பாக பந்துவீசியிருந்தனர்.

இருந்தபோதிலும் பகுதி நேரப் பந்துவீச்சாளர்களாக சிறப்பாக திறன்களை வெளிக்காட்டிய அளவுக்கு இந்த தொடர் முழுவதும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறியிருந்தனர். எனினும், இந்தப் போட்டித் தொடரில் அதிக ஓட்டங்களை எடுத்த துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் முதல் 50 வீரர்கள் வரிசையில் இலங்கை சார்பாக மூவர் மாத்திரமே இடம்பெற்றிருந்தனர்.

துனித் வெல்லாலகே 264 ஓட்டங்களுடன் 7 ஆவது இடத்திலும், 129 ஓட்டங்களுடன் சதீஷ ராஜபக்ஷ 46 ஆவது இடத்தையும் , 126 ஓட்டங்களுடன் ரனூத சோமரட்ண 48 ஆவது இடத்தையும் வகித்தனர். முன்வரிசை வீரர்களால் போதியளவு ஒத்துழைப்பு துடுப்பாட்டத் துறைக்கு கிடைக்கவில்லை.

துனித் வெல்லாலகே இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்காலம். இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ. பி. எல். தொடரில் ஏலத்தில் அவரின் பெயரும் இடம்பெற்றுள்ளது. எனினும், இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் துனித் வெல்லாலகேக்கு வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.






# கவிஞர் சிவசேகரத்தின் மொத்த கவிதைகளின் முழுத் தொகுப்பின் முக்கியத்துவம்!

எம். பௌசர்

பல ஆண்டுகளுக்கு முன்பே, செய்ய வேண்டிய சில பணிகள் என திட்டமிற்றவற்றில், கவிஞர் சிவசேகரத்தின் முழுக்கவிதைகளையும் தொகுத்து நூலுருவாக்க வேண்டும் என்பதும் ஒன்று.... இப்போது இந்த முக்கிய பணி கைகூடி வந்துள்ளது மகிழ்ச்சிதான். நமது கலை, இலக்கிய, அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் பல்லாண்டுகளாக எழுதப்பட்டு, முறையாக தொகுக்கப்படாத பெருமளவிலான எழுத்துக்கள் இன்னமும் உள்ளன. இவற்றை தொகுத்து ஆவணமாக்குவது காலத்தின் தேவையும் நமது கடமையும் என்ற வகையிலேயே இலண்டனை தளமாகக் கொண்ட "சமூக இயல் பதிப்பகம் " தனது பணியைத் தொடங்கி உள்ளது .

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது முதல் வெளியீடாக, கவிஞர், கலை இலக்கியம் சார்ந்த எழுத்தாளர், கல்வியலாளர், அரசியல் செயற்பாட்டாளர், விமர்சகர், என பல்வேறு துறைகளில் தனது பங்களிப்பினை தொடர்ச்சியாக ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆற்றிவரும் சிவசேகரம் அவர்களின் அனைத்து கவிதைகளையும் உள்ளடக்கிய முழுத் தொகுப்பினை கொண்டு வருவதில், மிக முக்கியமான ஒரு பணியை செய்த நிறைவை நாம் உணர்கிறோம் .

சிவசேகரம் இடதுசாரி கருத்து நிலை கொண்ட நமது முக்கிய பங்களிப்பாளர் 1970களிலேயே இலக்கிய, அரசியல் தளத்தில் தனது எழுத்துக்கள் வழியாக கால் பதித்தவர். கிட்டத்தட்ட 50 வருடங்களாக இவர் எழுதிய 272 கவிதைகளை உள்ளடக்கிய பெருந்தொகுப்பாக ( சிவசேகரம் கவிதைகள் 1970-2020) இத் தொகுதி உள்ளது. ஐம்பது வருடங்கள் - இது அவருடைய எழுத்தின் காலம் மட்டுமல்ல, கடந்த அரை நூற்றாண்டில் இலங்கைக்குள் நடந்த அரசியல், சமூக நிலமைகளையும் போக்குகளையும், உலகெல்லாம் ஒடுக்கப்படும் மக்களின் துயரங்களையும் அரசியல் அர்த்தத்துடனும், கவித்துவ செழுமையுடனும் தமிழில் பதிவு செய்த முக்கிய ஒரு கவிஞரின் முழுத் தொகுப்பு இது என துணிந்து சொல்ல முடியும்.

இனம், மதம், சாதியம், பால் நிலை, பொருளாதாரம், அரசியல், பிராந்திய மேலாதிக்கம். என பல்வகைகளிலும் பல்தளங்களிலும் அரசுகளாலும், அமைப்புகளாலும், நிறுவனங்களாலும் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அனைத்துவகை ஒடுக்குதலையும், ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றுத் துயருடனும், அடக்குதலுக்கு எதிரான நியாமான எதிர்ப்புணர்வுடனும் இத் தொகுதியின் முழு உள்ளடக்கமும் பதிவு பெற்றுள்ளது முக்கியமானது.

பெருமளவிலான இவரது கவிதைகள் அரசியல் சார்ந்த உள்ளடக்கம் கொண்டவைதான். இலங்கை அரசியல், சமூக வாழ்வு தொடக்கம், சர்வதேச அரசியல் வரை இவரது கவிதை உள்ளடக்கம் மிகப் பரந்தது. துணிவானது. சமரசம் அற்றது. சிவசேகரத்தின் கவிதைகளில் ஒடுக்கப்படும் மக்களுக்கான குரல் என்பதே அடிப்படை உள்ளீடாகும். அதே நேரம் இவரது கவிதைகளின் வழியாக வெளிப்படும் கவித்துவமும் இவரை இலக்கிய உலகில், தவிர்க்க முடியாத ஒரு கவிஞனாக நிலை நிறுத்தி உள்ளது. எனினும் இவரது கவிதைகளைப் பற்றி இதுவரை எழுதியவர்களும் விமர்சித்தவர்களும் சிவசேகரத்தின் அரசியல் கருத்து நிலை பற்றியே பெருமளவு கவனம் செலுத்தியிருக்கிறார்களே தவிர அவரது கவிதையியல் பற்றியோ அல்லது அரசியலை நுண்ணிய கவிதா உணர்வுடன் அவர் வெளிப்படுத்திய பாங்கைப் பற்றியோ விரிவான எழுத்துக்கள் இன்னும் வரவில்லை.

**சிவசேகரம் இடதுசாரி கருத்து நிலை கொண்ட நமது முக்கிய பங்களிப்பாளர் .1970களிலேயே இலக்கிய, அரசியல் தளத்தில் தனது எழுத்துக்கள் வழியாக கால் பதித்தவர். கிட்டத்தட்ட 50 வருடங்களாக இவர் எழுதிய 272 கவிதைகளை உள்ளடக்கிய பெருந்தொகுப்பாக ( சிவசேகரம் கவிதைகள் 1970-2020) இத் தொகுதி உள்ளது.**

அங்கதம், கேலி, துயரில் மிதக்கும் சொற்கள், ஆற்றுகைத் தன்மை வாய்ந்த மொழி, இயற்கையோடு இணைந்து வரும் நளினம், அறிவால் நெறிப்படுத்தப்பட்டு வரும் கோபம் என அவரது கவிதையியல் பல்வேறு அழகியல் பரிமாணங்கள் கொண்டன. இப்பொழுது இந்த பெருந்தொகை வழியாக அவரது முழுக் கவிதைகளையும் வாசிக்கும் போது அவரது கவித்துவ ஆற்றலும், முக்கியத்துவமும் மேலும் வெளிச்சம் பெறுவது நிகழும். எதிர்காலத்தில் இவரது "கவிதையியல் பற்றிய" விரிவான பார்வை கள் வெளிவரும் போது, ஈழத் தமிழ் இலக்கியத்தின் உள்ளீடு மேலும் ஆழப்படும் என்பது எமது நம்பிக்கையாகும்.

சிவசேகரம், இலங்கை, தமிழகம், புகலிட நாடுகளில் வெளிவந்த பல்வேறு மாற்றுஃ சிறு சஞ்சிகைகளில் அதிகம் எழுதியவர். நவீன தமிழ்க் கவிதை வரலாற்றுடனும், ஈழத் தமிழ் இலக்கிய வாழ்வுடனும்,கலந்தும் பிணைந்ததுமான, தவிர்க்க முடியாத ஆளுமை. இவர் இலண்டனில் வாழ்ந்த, 1984 தொடக்கம் 1997 ஆம் ஆண்டுக் காலம் புகலிட தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான காலகட்டமாகும். புகலிட தமிழ் இலக்கியம் எனும், தமிழின் வீச்சு நிரம்பிய இன்னுமொரு புதிய அத்தியாயம் கால் கொண்டது. இந்த தொடக்க காலத்தில் புகலிட நாடுகளில் இருந்து வந்த மிக முக்கியமான சஞ்சிகைகளுக்கு அதிகம் பங்களித்துள்ளார். புகலிட தமிழ் வாழ்வில், அதன் அரசியலில், அதன் உள்ளடக்கத்தில் ஜனநாயக அடிப்படைகளையும், சமூக சமத்துவத்தினையும் மனித உரிமைகளையும் மதிப்பதற்கும், பேணுவதற்குமான அடிப்படைகளை உறுதியாக வலியுறுத்தியவர். இதற்காக தனது சிந்தனையையும், உழைப்பையும் வழங்கியவர் என்பதை, புகலிட தமிழ் இலக்கிய, அரசியல் வரலாற்றை ஆய்வு செய்ய முன்வருவோர் கண்டு கொள்வர். எம்மைப் பொறுத்தவரையில், ஈழத் தமிழ் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கு குறைவில்லாத வகையில் சிவசேகரம் புகலிட தமிழ் இலக்கியத்திற்கும், அதன் விரிந்த பார்வைக்கும் முக்கிய பங்களிப்பினை செய்துள்ளார். அதன் உள்ளடக்கம் சார்ந்து மட்டுமல்ல, அதற்கு ஒரு ஜன நாயக, மனித உரிமைகளை மதிக்கின்ற, உலகில் ஒடுக்கப்படுகின்ற மக்களின் துயரங்கள், பாடுகளுடன் தம்மை அடையாளப்படுத்தக் கூடிய ஒரு முகத்தினை வழங்க, அவர் படாதபாடு பட்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

இந்த தொகுப்புக்கு முன்னுரை எழுதியுள்ள பேராசிரியர் நுஃமான், சிவசேகரம் அவர்களின் அரை நூற்றாண்டுக்கும் மேலான இலக்கிய, அரசியல், எழுத்துக்களையும், அவரது வகிபாகத்தினையும் நேர்மையாகவே மதிப்பிட்டுள்ளார். இறுதியாக, எமது தொடர்ச்சியான இத்தகைய பதிப்பு பணிக்கு இந்த நோக்கத்திற்கு நீங்கள் இரண்டு வகையில் ஆதரவு வழங்க முடியும். ஒன்று, பதிப்பகத்தின் ஒரு பங்காளராக நீங்கள் வர முடியும்இரண்டு , எம்மால் பதிப்பிக்கப்படும் நூல்களை வாங்கி ஆதரவு தர முடியும்.

தனது கல்வித் தொழில்துறைக்கு வெளியே , கடந்த ஐம்பது வருடத்திற்கு மேலாக நமது கலை இலக்கியத்துறையில் தன்னை முன்னிலைப்படுத்தாது, எந்தவித பிரதிபலனையோ, விருதுகளையோ கிஞ்சித்தும் கருத்திற் கொள்ளாது "இவை நமது பொறுப்பு " என்ற உணர்வில் சதா செயற்பட்டுக் கொண்டிருக்கும் நம் காலத்தின் ஒரு முக்கிய பங்களிப்பாளனுக்கு, நாம் சொல்லும் நன்றியே இத்தொகுப்பு !



# மலராத் துடிக்கும் அரும்பொன்று

சி.ரஞ்சிதா

“இதுதா டீச்சர் எங்க ‘ஏரியா’ - நா ‘ஸ்கூலு’க்கு எந்த நாளு இந்த ரோட்டாலதா வருவே..” கண்ணன் மிகவும் ஆர்வமாக தன்னுடன் வந்த தேஜா ஆசிரியரிடம் கூறிக்கொண்டு புத்தகப்பையை சுமந்தவாறு ஆமை போல அசைந்தான். எங்கு திரும்பினாலும் கழிவு நீரோடையின் துர்நாற்றம் மூக்கை துளைத்தெடுத்தது. ஆங்காங்கு துருப்பிடித்துபோன தகரங்கள் அங்குள்ள வீடுகளுக்கு கூரைகளாகவும், மதில்களாகவும் அரண் செய்தன. விளையாடுவதற்கு முற்றமோ அல்லது மகிழ்ச்சியாக அமர்ந்து தனிமையில் எவரும் பேசிக் கொள்ளவோ இடைவெளியில்லாத இடநெருக்கடி. மக்கள் நடமாடித்திரியும் பாதையிலேயே குளியலுக்கான மறைப்புளூ துணிகள் காயப்போடும் கொடிளூ அமர்வதற்கான முற்றம் எல்லாம். பாதையை ஊடறுத்து செல்லும் பிரதான சந்தியில் ஒரு பிள்ளையார் கோயில். கோயிலின் அருகில் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ‘ஜயந்தி மாவத்த’ என்னும் கிராமத்தின் பெயரை தாங்கிய ‘போர்ட்’ ஒன்றும் செங்குத்தாக நின்றது. அந்த கிராமத்தின் முகப்பில் வந்தாரை வரவேற்று வியாபாரம் நடத்தும் சிறிய செலவு கடையொன்று நான்கு பக்கமும் தகரங்களால் மறைக்கப்பட்டு இயங்கிகொண்டிருந்தது. நாற்சந்தியின் அருகிலிருந்த வீடொன்றில் காதின் செவிப்பறைகளை கிழித்துக்கொண்டு சினிமாப்பாடல்கள் ஒலித்த வண்ணம் அமைதியை நிலைகுழையச் செய்தது. ஒரு சில சிறார்கள் காற்சட்டையுடன் ஊளை மூக்கு வடிய பழைய டயர்களை வாகனங்களாக்கி உருட்டி விளையாடிக்கொண்டிருந்தனர். சில பெண்கள் வெற்றிலையை வாயில் நிறைத்து அதன் எச்சிலை அகிலிருந்த கழிவுநீரோடைகளில் உமிழ்ந்துவிட்டு சம்பாசணைகளில் ஈடுபட்டனர். இன்னுமொரு பக்கம் காதில் கேட்கமுடியாத ஊத்தை பேச்சுகளை தேள்கொட்டுவதுபோல தன்னுடைய மனைவியுடன் ஏற்பட்ட பூசலில் கொட்டினார் வயதான ஒருவர். அதனை அங்குள்ள பலரும் வேடிக்கை பார்த்தவாறு சிரித்துக் கொண்டிருந்தனர். பாடசாலையில் சில ஆசிரியர்கள் இப்பிரதேசத்தை பற்றியும், இங்கு வாழும் மக்கள் குப்பை கூட்டுபவர்கள் என்றும், பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைக்கு வந்து கல்வி கற்பதில்லை என்றும் பல முறைபாடுகளை முன்வைத்தமையை தேஜா ஆசிரியர் அறிந்திருக்கிறாள். அதன் உண்மையை இன்று நேரிலே தரிசித்துக்கொண்டிருந்தாள். கண்ணனுடன் அவனது இல்லத்தை நோக்கி நகர்ந்த தேஜா ஆசிரியர் அவனுடைய இருப்பிடத்தின் ஒவ்வொரு பகுதிகளையும் அதன் அசைவியக்கங்களையும் கண்காணித்த வண்ணம் கண்ணன் அழைத்து சென்ற ஒரு இடிந்துபோன தகர வீட்டின் முன் வந்து நின்றாள்.

“பெரியம்மா எங்க டீச்சர் வந்துருக்காங்க…” என்று கண்ணன் கூறியதும் ஒரு நடுத்தர வயது பெண் வாயில் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு மரியாதையை தெரிவிக்கும் வண்ணம் ஆசிரியரை உள்ளே அழைத்துச் சென்று அமர்வதற்கு கிழிந்துபோன பாய்த் துண்டை விரித்தாள். வீட்டின் உள்ளே ஒரே இருள். புகை மண்டலமாக, உடைபட்ட சுவர்களாக, ‘சிமெண்ட்’ தரை குன்றும் குழியுமாக இருந்தது. தேஜா ஆசிரியருக்கு இன்று காலை பாடசாலையில் நடந்த சம்பவங்கள் நினைவிற்கு வந்தன.

“டேய் டீச்சருக்கும் சாப்பாடு குடுப்போ. எடுத்துட்டு வாங்க.. ரதி நீ என்னடி கொண்டு வந்த.. எங்க அம்மா இண்டைக்கு சமபோஷா செஞ்சு தந்தாங்க.. உங்க அம்மா..?”

“எங்க அம்மா இட்லி அவிச்சு, சட்டினி செஞ் சிருக்காங்க.. குமுதினி நீ என்னடி பாற்சோறு கொண்டு வந்திருக்க..” தரம் நான்கில் இருந்த மாணவர்கள் அனைவரும் தாங்கள் இன்று கொண்டு வந்த உணவுகளை தனது நண்பர்களுடன் பரிமாறி சுவைத்துக்கொண்டு சுவாரஷ்யமாக கலந்துரையாடி காலை உணவை உட்கொண்டனர். இதனை வேடிக்கைப்பார்த்துக் கொண்டே அவர்களுடன் ஒருத்தியாக கையில் தானும் ஒரு உணவு பொட்டலத்துடன் அமர்ந்திருந்த தேஜா ஆசிரியர் கண்ணன் தன்னிடம் தயங்கி தயங்கி நீட்டிய குழைந்து போன பச்சயரிசி சோற்றையும் சோயா மீட்டையும் பார்த்துவிட்டு “கண்ணா.. யார் சமைச்சது..?” என அன்பாக வினவியபோது, “நான்தான் டீச்சர் விடிய அஞ்சு மணிக்கு எழும்பி சமைச்சே..” என்று ஒரே பதிலில் கூறிவிட்டு மறுபதிலுக்காக காத்திருக்காமல் உணவை அள்ளி அள்ளி விழுங்கினான். அதிர்ச்சியுடன் கண்கலங்கிய நிலையில் தேஜா ஆசிரியர் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது பக்கத்திலிருந்த திவ்யா “ஏன் டீச்சர் கண்கலங்குறீங்க.. கண்ணே எப்பவும் சோறும் சோயா கறியுந்தான் கொண்டு வருவான்.. அவேந்தா எந்தநாளு சமைப்பா..அவனுக்கு யாரும் இல்ல..” என்று கூறியது அவளுக்கு பேரிடியை இறக்கியது. இச்சிறிய வயதில் கண்ணனுக்கு இப்படியொரு தண்டணையா? அவளால் எள்ளவும் பொறுத்து கொள்ளமுடியவில்லை. தேஜா ஐந்து வருடங்கள் ஆரம்ப பிரிவில் கல்வி கற்பித்து வருகின்றாள்.

மாணவர்களுக்கு ஏற்பட்ட பல சிக்கல்களை கண்டிருக்கிறாள். சிலவேளை பாடசாலைக்கு உணவின்றிகூட பிள்ளைகள் வருவதுண்டு. இல்லையெனில் உறவினர் யாராவது உணவை வழங்கி அனுப்புவர். ஆனால் ஒரு ஆண்பிள்ளை.. பக்குவமடையாத சிறுவன் தானே உணவு சமைத்து எடுத்து வருவது முதல் அனுபவமாக இருந்தது. கண்ணன் பற்றியோ அல்லது அங்குள்ள இருபத்தைந்து பிள்ளைகளை பற்றியோ தேஜாவிற்கு எதுவும் தெரியாது. அவள் கடந்த வாரமே கெக்கிராவ பெப்டிஸ் மிஷன் தமிழ் பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்று வந்திருந்தாள். ஒரு பாடசாலையின் வகுப்பறையில் கடமையாற்றும் வகுப்பாசிரியர் அனைத்து மாணவர்களின் தனிப்பட்ட விபரங்கள் குறித்து தெளிவடைந்திருத்தல் வேண்டும். ஆனால் அவற்றை அறிவதற்கு தேஜாவிற்கு சில காலம் தேவைப்பட்டது. அதனாலேயே கண்ணன் பற்றி எதுவும் அறியாதிருந்தாள். ஆனால் தினமும் அழுக்குபடிந்த ஆடையுடன், பிய்ந்த சப்பாத்துக்களுடன், தலையில் எண்ணெய் வடியும் முகத்துடன், வீட்டு பாடங்கள் செய்யாமல் வரும் கண்ணனை கண்டித்து வீட்டில் யாரையாவது அழைத்துவர வேண்டும் என உத்தரவிட்டிருக்கிறாள். அவன் அதை பொருட்படுத்தாமலேயே வகுப்பறையை சுற்றிவருவான்.

காலையில் வகுப்பறையில் நடந்த அந்த நிகழ்வு தேஜாவின் மனதை வெகுவாக பாதித்தமையே அவளை இப்பொழுது கண்ணனுடைய வீட்டிற்குள் அமரவைத்துள்ளது. சிந்தனையில் ஆழ்ந்திருந்த ஆசிரியரை கண்ணனின் பெரியம்மா தேநீரை நீட்டி சுயநினைவிற்கு கொண்டு வந்தாள். அவளும் மரியாதைக்காக தேனீர் கோப்பையை வாங்கிக் கொண்டு,

“என்ட பேர் தேஜா ..நா கண்ணன்ட வகுப்பு டீச்சர். கண்ணன் நல்ல பொடியன். குழப்படி ஒண்டும் செய்ய மாட்டான். ஆனா சரியா வீட்டுப்பாடம் செய்யிறதில்ல. யூனிபோம் எல்லாம் அழுக்கா போட்டுட்டு வாறான்… அதுதான் ஒங்ககிட்ட இதபத்தி சொல்லி பாக்கலாம்னு வந்தே..” என்று அமைதியாக, நிதானமாக, தளதளத்த குரலில் சொல்லி முடித்தாள். அந்த பெண்மணியும் பதில் பூக்களை மாலையாக கோர்க்க ஆரம்பித்தாள்.

“கண்ணன நாங்கதா பாத்துக்கிறோ டீச்சர். அவேந்தா வீட்டுல கடைசி புள்ள. என்ட தங்கச்சி பேரு சரசம்மா… ஏழு புள்ளைங்க அவளுக்கு.. புருசே பேரு சுப்பு. எப்பவு குடிச்சிட்டு வந்து அடிப்பா.. சித்திரவத தாங்கமுடியாம ஏழு புள்ளைங்களயு தவிக்கவிட்டுட்டு ஒருத்தனோட ஓடிபோயிருச்சி. கண்ணவுட்டு அப்பா குடிச்சாலு புள்ளைங்களுக்கு ஏது சாப்புட வாங்கி குடுக்கு…அவரு திடீருனு வெசத்த குடிச்சி செத்து போயிட்டாரு… ரெண்டாவது பொம்பள புள்ள வீடு வீடா வேல செஞ்சி ஒருத்தங்கிட்ட கெட்டுபோயி.. வயித்துல ஒரு புள்ளயோட இன்னொருத்தன கல்யாணம் செஞ்சிகிட்டு போயிருச்சி.. இவன்ட பெரிய அக்கா வெளிநாட்டுல.. காசு எதுவும் அனுப்புறதில்ல… அண்ணேமாருகளு கஞ்சா, களவு, குடினு திரியுறானுக டீச்சர்… எனக்கு புள்ளைங்க மூனு இருக்கு.. நானு வீட்ட பாக்கனு…கண்ணன பாக்குறதுக்கு நேரோ இல்ல.. நானு ரோட்டு கூட்டி, குப்ப அள்ளிதா புள்ளைங்கள கவனிக்கிறே.. இங்க இருக்க பாதிபேரு இந்த வேலதா செய்யிறாங்க.. நம்ம கண்ணே லீவு நாளுகளில்ல கூலிவேலைக்கி போவா..இதுக்குமுன்ன ஒரு ‘சேர்’ இப்பிடிதா கண்ணன்ட நெலமைய தெரிஞ்சிகிட்டு வீட்டுக்கு வந்தாரு..கொப்பி, புஸ்தவம் வாங்கி குடுத்தாறு.. போன கெழம பக்கத்துல இருக்குற வேத பள்ளியில ‘சிஸ்டர்’ ஒராளு இங்க இருக்குற புள்ளைங்களுக்கு படிக்கிறத்துக்கு பேனா, பென்சில், கொப்பி குடுத்தாங்க.. கண்ணனு போயி வாங்குனா.. ஏங்கிட்டயு காசு இருந்தா ஏது வாங்கி குடுக்குறதுதா..என்ன செய்யிறது டீச்சர்.. ” ஒழிவு மறைவின்றி தேஜா விடம் கண்ணனின் பெரியம்மா கூறிய வார்த்தை கள் அவளை தலைசுற்ற வைத்துவிட்டது. இது உண்மை கதையா? அல்லது சினிமாவில் வரும் கதையா? அல் லது இந்த அம்மா கற்பனையாக கதை ஜோடித்து கூறு கின்றாரா? எதுவும் புரியவில்லை. (16 ஆம் பக்கம் பார்க்க...)

# மலையக தமிழர் குடியுரிமை பறித்தது குறித்தே முதலில் சர்வதேச நீதி விசாரணை வேண்டும்

## மலைகளைப் பேசவிடுங்கள் நூலின் அடிப்படை அங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது என்கிறார் மல்லியப்பு சந்தி திலகர்





ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் தமிழர் தரப்பு முன்வைத்துள்ள முறைப்பாட்டுக்கு தீர்வு தேடி சர்வதேச நீதி விசாரணைக்கு எவ்வாறான பொறிமுறை ஒன்றை உருவாக்கலாம் என கட்சிச் செயலாளர்களை அழைத்து சர்வகட்சி கூட்டம் ஒன்றை நடாத்தினார் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன.

2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் எனும் பெயரில் ஒர் இன அழிப்பே இடம்பெற்றது. எனவே சர்வதேச நீதி விசாரணை வேண்டுமென்றன இலங்கைத் தமிழர் தரப்பு கட்சிகள். முஸ்லிம் கட்சிகளோ 1990 ஆம் ஆண்டு வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப் பட்டதில் இருந்து விசாரணை வேண்டும் என்றார்கள். சிங்களத்தரப்புகள் சர்வதேச விசாரணை வேண்டாம் உள்ளகப்பொறி முறையில் பேசலாம் என்றார்கள்.

அப்போது நான் புதிதாகத் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர், கட்சியின் பொதுச் செயலாளர் என்றவகையில் அந்தக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தேன். தமிழர் தரப்பு 2009 இல் இருந்தும் முஸ்லிம் தரப்பு 1990 இல் இருந்தும் நீதி விசாரணை கோருமாக இருந்தால் மலையகத்தமிழருக்கு தேசிய அநீதி இழைக்கப்பட்ட 1948 இல் இருந்தே இடம்பெற்ற உரிமை மீறல்களுக்காக சர்வதேச விசாரணை வேண்டும் என கோரிக்கை வைத்தேன்.அந்தக் கூட்டம் அமைதியானது. அதேநேரம், குறைந்தபட்சம் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைத்து மலையகத் தமிழரின் உள்ளக் குமுறல்கள் பதிவு செய்யப்பட்டு ஆவணமாக்கப்படல் வேண்டும் என்றேன்.

அப்போது அதற்கு சம்மதித்த மைத்திரிபால சிரிசேன தனது பதவிக்காலம் முழுவதும் அமைதியாகவே இருந்து நழுவிச் சென்றார்.ஆனால் அத்தகைய ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டு இருந்தால் அதிலே மலையகத் தமிழ் மக்கள் வழங்கியிருக்க்கூடிய சாட்சியங்களே "மலைகளைப் பேசவிடுங்கள்" நூலின் உள்ளடக்கமாக அமைந்தது என நூலாசிரியரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மல்லியப்புசந்தி திலகர் தெரிவித்தார்.

மல்லியப்புசந்தி திலகர் எழுதிய "மலைகளைப் பேசவிடுங்கள்" நூலின் அறிமுக விழா சுழிபுரம், கே.ஏ.சுப்பிரமணியம் நினைவு நூலகத்தில் கலாநிதி ந.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது. நூலாய்வுரைகளை நிவேதா சிவலிங்கம், சட்டத்தரணி ஜேசுநேசன் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் ஏற்புரை ஆற்றும்போதே மல்லியப்புசந்தி திலகர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,



இந்த நூலில் இடம்பெறும் கட்டுரைகளை எழுதத் தூண்டியவர் ஊடகவியலாளர் நண்பர் சீவகன் பூபாலரட்னம். அவரது அரங்கம் இதழில் எழுதப்பட்ட கட்டுரைகளுடன், அதனை நூலுருவாக்கும் போது தினக்குரலில் எழுதப்பட்ட கட்டுரைகள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. அதிலே பிரதேச சபைச் சட்டத்தில் இருந்து ஏன், எவ்வாறு விலக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கான விரிவான விளக்கம் அடங்கியுள்ளது. அந்த விரிவான பார்வைக்கு வித்திட்டவர் கலாநிதி ந. ரவீந்திரன். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 'மலையகமும் மறுவாழ்வும்' நூல் ஆய்வுரையின்போது அவர் ஆற்றிய உரை அதற்கான திறப்பைத் தந்தது. அதுவே அந்தச் சட்டத்திருத்தத்தை பாராளுமன்றப் பிரேரணையாக முன்வைத்த எனக்கு அடிப்படைக் காரணங்களை தெளிவுபடுத்தியது. அதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவே அவரது தலைமையிலேயே இந்த நூலறிமுகம் செய்ய யாழ்வந்தேன்.



மலையகத்தவர்களான கல்வியாளர்களோ, ஆய்வாளர்களோ இத்தகைய ஆய்வுப் பொருளை முன்வைக்காத நிலையில் மலையகத் தளத்தளத்தில் செயற்பட்ட மார்க்சிய அறிஞரான கலாநிதி ரவீந்திரனின் இந்தப் பங்களிப்பு வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டும் எனும் எனது அவா யாழ் மண்ணில் நிறைவு பெறுகிறது.

குடியுரிமைப் பறிப்புக்குப் பின்னர் மலையகத் தமிழரை நாடு கடத்துவதற்காக சிறிமா பண்டாரநாயக்க அப்போதைய பிரித்தானிய ஆளுநருக்கு சமர்ப்பித்த ஆவணத்தை பாராளுமன்ற நூலகத்தில் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆங்கிலத்தில் அமைந்த அந்த அறிக்கை தமிழாக்கம் செய்து அர்த்தப்படுத்தலுடன் அத்தியாயம், அத்தியாயமாக தொகுத்துத் தந்துள்ளேன்.அந்த அறிக்கையை வாசித்தால் இலங்கை அரசு எந்தளவு தூரம் மலையகத் தமிழர் மீது வன்மம் கொண்டிருக்கிறது என்பது தெரியவரும்.

இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே பொதிகளைப் போன்று பகிர்ந்துகொள்ளப்பட்ட துரோக வரலாறு பதிவு பெறுகிறது. இறுதிப்பகுதியில் இலங்கையில் அந்த மக்களின் அபிவிருத்தியை முன்னெடுக்கக்கூடிய பொறிமுறையாக உருவாக்கப்பட்ட 'மலையக அதிகார சபை' குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே மலையக மக்களுக்கான அதிகாரப் பகிர்வு குறித்த புரிதலை முன்வைப்பதாகவே "மலைகளைப் பேசவிடுங்கள்" நூல் வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

மலையகத் தமிழர் நாடுகடத்தப்பட்ட சோக வரலாற்றைப் பதிவு செய்யும் அரு.சிவானந்தன் எழுதிய "சென்று வருகிறேன் ஜென்ம பூமியே" கவிதை நூலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அந்த நூல் குறித்து கவிஞர் அழ.பகீரதன் உரையாற்றினார்.சட்டத்தரணி சோ. தேவராஜா உள்ளிட்ட பலர் தமது கருத்துக்களை உரையாடல் பகுதியிலே பகிர்ந்து கொண்டனர்.

**- தொகுப்பு: சண்.ரவி**



(15 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

# மலரத் துடிக்கும் அரும்பொன்று

சூதுவாது தெரியாத, படிப்பறிவற்ற சனம் வாழும் இப்பகுதியில் கற்பனை கதைகளை கூற இவருக்கு எண்ண தேவை இருக்கிறது என்ற தேறுதல் சிந்தனையை உள்ளத்தில் நிறுத்திக்கொண்டு கண்ணனின் துன்பகரமான நிலையை எண்ணி தவித்தாள். கண்ணன் இவ்வளவு சிக்கல்களையும் எதிர்கொண்டு பாடசாலைக்கு வருகின்றான் என்றால் அது படிப்பதற்காக அல்ல. இலங்கை அரசு நடைமுறையில் வைத்திருக்கும் ஐந்து வயது தொடக்கம் பதினாறு வயது வரையான கட்டாயக் கல்விச் சட்டமே ஆகும். கண்ணன் போன்ற பல சிறுவர்கள் முறையான கல்விச்சூழல் இன்மையால் தமது எதிர்காலத்தை சூனியமாக்கி கொள்கின்றனர். ஒரு பிள்ளை ஒரு நாளைக்கி பாடசாலையில் ஆறு மணி நேரத்தை ஆசிரியருடன் செலவளிக்கின்றான். அவனது அதிகமான நேரத்தை வீட்டுச்சூழலே கட்டமைக்கின்றது. கற்றலுக்கான அதிக நேரம் அங்கேயே ஒதுக்கப்பட வேண்டும். பாடசாலையில் வழங்கப்படும் பாடங்களை மீட்டல், நாளைய பாடங்களிற்கான தயார்நிலை, பரீட்சைக்கு தயாராகுதல் என பல நடவடிக்கைகளை வீட்டு சூழல் தீர்மானிக்கின்றன. பொதுவாக கல்வி உளவியலாளர்கள் கூறும் பௌதீக சூழல், உளவியல் சூழல் இரண்டும் கண்ணனுக்கு சரியாக அமையவில்லை. அவனுடைய பௌதீக சூழலில் போதிய இடவசதியோ அமைதியோ சுகாதாரமோ கற்றல் உபகரணங்களோ கற்றலை வளப்படுத்துவதற்கு இல்லை. உளவியல் சூழலும் அவனுக்கு எதிராக நின்று சதி செய்து அன்பின்மை, அரவணைப் பின்மை, பெற்றோர் இன்மை, வறுமை .. பரிசாக வழங்கியுள்ளது. ஆனால் ஒன்று கண்ணன் போராட்டம் நிறைந்த இவ்வுலகில் மலரத்துடிக்கும் அரும்பாகியுள்ளான். கண்ணன் என்னும் அரும்பு தன்னுடைய குடும்ப சூழலையும் எதிர்கொண்டு மலரத்துடிக்கின்றது. இம் மாணவனை பொறுப்பேற்று ஆரோக்கியமான கல்வியை வழங்குவதற்கான வசதி தேஜா ஆசிரியரிடம் இல்லையாயினும் கண்ணனது வீட்டுச்சூழலிருந்து விடுதலை வாங்கி கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றை பெற்று கொடுப்பதற்கு அதிபருடன், சமூக நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் முயற்சியில் இறங்குவதற்கு எண்ணுகின்றாள்.

அது வெற்றியளிக் குமா என்பது அவளுக்குத் தெரியாது. இருப்பினும் இன்றே கண்ணனின் வாழ் வில் ஒளியேற்றும் முயற்சியை சிரம் மேற்கொள்ள உறுதி பூண்டாள், தேஜா.

இதோ கண்ணன் பாடசாலை சீருடைகளை களைந்து "டீச்சர் நேரோ ஆகுது வாங்க ஒங்கள கொண்டுபோயி ஊருக்கு வெளியில விடுறே.. நா குளத்துல போயி உடுப்பெல்லாம் கழுவிகிட்டு பக்கத்துல இருக்குற மெனிக்கே நோனா வீட்டுல தேங்கா ஆஞ்சி குடுக்கனு... காசு தருவாங்க.." என்று கூறி தேஜாவை அழைத்தான். கண்ணன் மலர துடிக்கின்ற அரும்பு. போராட்டங்களின் மத்தியில் நாளைய விடியலை போராடுவதற்காக புறப்படுகின்றான். செய்வதறியாது அவன் பின்னால் மனச்சுமைகளை சுமந்து செல்கின்றாள் தேஜா.




# பத்து ஆண்டு இடைவெளியின் பின் தமிழ்நாடு உள்ளாட்சி தேர்தல்:

# பெசன்ட் நகரில் போட்டியிடும் 94 வயது இளம் வேட்பாளர்!



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

எப்போதும் பரபரப்பாகக் காணப்படும் சமூக வலைத்தளமான 'ட்விட்டரில்' அடிக்கடி கோபம், ஏமாற்றம், கருத்து வேறுபாடு, நம்பிக்கையற்ற தன்மை, மன உளைச்சல், விரக்தி ஆகியவற்றை வெளிப்படுத்தும் பதிவுகள் வெள்ளம்போல வரும். இந்த சுழலும் நீருக்கு நடுவில் எப்போதாவது ஒரு அழகான தாமரைப்பூ எட்டிப்பார்க்கும், அதிகரித்துக்கொண்டிருக்கும் எதிர்மறை சிந்தனைகளுக்கு நடுவில், எல்லாவற்றையும் நாம் இழந்துவிடவில்லை, கொண்டாடுவதற்கும் நமக்குக் காரணங்கள் இருக்கின்றன என்று நம்மை உற்சாகப்படுத்தும்.

பெப்ரவரி 19ஆம் திகதி நடக்கப்போகிற தமிழக உள்ளாட்சித் தேர்தலுக்கான வெறுப்பும் இரைச்சலும் நிறைந்த பிரச்சாரங்களுக்கு மத்தியில், சென்னை மாநகராட்சியில் 174ஆவது வார்டில் கவுன்சிலர் பதவிக்காகப் போட்டியிடும் ஒரு பெண்மணியின் பேட்டி, சோர்ந்து போயிருந்த என் மனதுக்கு ஊக்கமளித்தது. 94 வயதான இந்த இளம் வேட்பாளர், ஆளும் கட்சியான தி.மு.க, எதிர்கட்சியான அ.இ.அ.தி.மு.க. போன்ற பிரம்மாண்ட கட்சிகளின் வேட்பாளர்களுக்கு மத்தியில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். மீனவர்கள் ஒருபுறமும் மேட்டுக்குடி மக்கள் மறுபுறமும் வாழ்கிற, கடற்கரையை ஒட்டிய பெசன்ட் நகர் பகுதியில் பல சமூக சேவைகளை செய்து, மக்கள் நலனுக்காக உழைத்

## 'அடுத்த தலைமுறை புதிய வெளிச்சத்தை தராவிட்டால் அரசியல் சூழல் இருட்டானதாகவே இருக்கும்'

திருப்பதால் நிச்சயம் தன்னால் ஜெயிக்க முடியும் என்று காமாட்சி சுப்ரமணியன் நம்புகிறார். அடிப் படைத் தேவைகளுக்காகப் போரா டுவது, ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுப்பது என, மக்களால் 'காமாட்சி பாட்டி' என்று அன்போடு அழைக்கப்படும் இந்த வேட்பாளர் தொடர்ந்து களத்தில் இயங்குகிறார்.

"எனக்கு 94 வயது என்று சொல்லாதீர்கள். என் வயது 94 ஆண்டுகள், ஆறு மாதங்கள்" என்று அந்தப் பேட்டியில் கூறும் காமாட்சிப் பாட்டி, சமூக சேவையில் தனக்கு இருக்கும் ஆர்வத்தைப் பற்றிப் பேசுகிறார். பெசன்ட் நகரின் சாலைகள், கடற்கரை, வரலாற்று சிறப்புமிக்க கார்ல் ஷ்மிட் நினைவிடம் (கார்ல் ஷ்மிட், 1930ஆம் ஆண்டு கடலில் மூழ்கிக்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரிழந்த ஐரோப்பிய மாலுமி) ஆகியவற்றை மேம்படுத்தப் போராடியதையும் விளக்குகிறார். "நான் எப்போதும் போராடிக் கொண்டிருக்கிறேன். எனக்கு 94 வயதாகிவிட்டது என்று தோன்றியதேயில்லை. இன்னும் செய்யவேண்டியது நிறைய இருக்கிறது. இந்த உலகத்தை விட்டு அவசரமாக செல்ல விரும்பவில்லை" என்கிறார்.

பாட்டியின் இந்தப் பேட்டியில் ஒரு சோகமான விஷயத்தையும் அவர் பகிர்ந்துகொண்டார். அரசியல் மற்றும் பொது சேவையிலிருந்து படித்த இளைஞர்கள் விலகி இருப்பதைப் பற்றி வருத்தப்பட்டு, "இளைஞர்களை நினைத்தால் ஏமாற்றமாக இருக்கிறது. இளைய தலைமுறை தனது நலனை மட்டுமே கவனிக்கிறது. படிப்பு முடிந்த உடனே வெளிநாட்டு வேலைக்கு செல்லவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்..." என்கிறார்.

உங்களிடம் நேரமும் நல்ல இணைய இணைப்பும் இருந்தால் காமாட்சி சுப்ரமணியனின் பேட்டியைப் பாருங்கள். உங்களுக்கு எத்தனை தடைகள் இருந்தாலும் சமூகத்திற்கு உங்களால் சேவை செய்ய முடியும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம். ஏனென்றால், நீங்கள் செய்யும் சேவைகள் எல்லாம் உங்களது சந்ததியினருக்கும் தாய்நாட்டுக்கும் நன்மை சேர்க்கும். இங்கு அந்த பேட்டிக்கான இணைப்பையும் வழங்கியிருக்கிறேன். பாட்டிக்கு விளம்பரம் தேடித்தரும் நோக்கம் எனக்கு இல்லை என்று இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன், எப்படியானாலும் உங்களது வாக்குகள் பெசன்ட் நகரில் பாட்டி ஜெயிக்க உதவாது!

அந்த இணைப்பு:
https://indiaaheadnews.com/tamil-nadu/kamakshi-subramanian-94-years-young-contests-tn-urban-polls-102579/

பாட்டியின் பயணத்தில் நமக்கு இரண்டு முக்கியமான பாடங்கள் உள்ளன. அவை இரண்டுமே, போரால் காயப்பட்டு, போருக்குப் பிந்தைய நீதியைக் கேட்டுப் பெறுவதற்குத் தவறிய அரசியல் வாதிகளால் ஏமாற்றமடைந்திருக்கும் ஈழமக்களுக்கு அவசியமான பாடங்கள். கொழும்பில் உள்ள அதிகார மையத்துக்கு எதிராகப் போராடுவது தமிழ்த் தலைவர்களுக்குக் கடினமானதாக இருக்கும் என்பது உண் மைதான். ஒரு போராட்டத் தில் பங்கெடுத்துக்கொண்டார் என்பதற்காகவே வட இலங்கையில் உள்ள தன்னு டைய நண்பரை 'தேசத்துரோக' வழக் கில் குற்றம் சாட்டியிருக்கிறார்கள் என்ற கசப்பான தகவலைப் பகிர்ந்துகொண் டார் வெள்ளிக்கிழமை என்னிடம் பேசிய லண்டனைச் சேர்ந்த ஒரு நண்பர். "தனக்காக ஒரு வழக்கறிஞரை நியமிக்கக்கூட


காமாட்சி சுப்ரமணியன்

அவரால் முடியவில்லை, ஏனென்றால், எல்லாரும் பயப்படுகிறார்கள்" என்றார். இது உண்மையிலேயே சோகமானது.

பாட்டி கற்றுத்தரும் இரு பாடங்கள் இவை: வயது என்பது வெறும் எண் மட்டுமே. பொது சேவைக்கான உற்சாகமும், மனதில் உறுதியும், பொது நலனுக்காக உழைப்பதில் கவனமும் இருந்துவிட்டால் அதே உத்வேகம் மற்றும் ஆற்றலுடன் தொடர்ந்து பணியாற்றலாம்.

இரண்டாவது பாடம்: நல்ல நிர்வாகமும், சமூக மற்றும் தேச முன்னேற்றமும் வேண்டும் என்று இளைஞர்கள் செயல்படவேண்டும். அதாவது, அரசியலில் இளைஞர்கள் பங்கேற்று, தன்னலமின்றி உழைக்க வேண்டும். அடுத்த தலைமுறை அரசியலுக்குள் வந்து புதிய வெளிச்சத்தைத் தராவிட்டால் அரசியல் சூழல் என்பது இருட்டானதாகவே இருக்கும், நிர்வாகம் என்பது பழமையான, ஊழல் மற்றும் தன்னலத்தில் ஊறிப்போனவர்கள் கையிலேயே தேங்கிவிடும்.

சென்னை மாநகராட்சியில் கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிடும் இன்னொரு பாட்டியும் உண்டு. அறுபதுகளில் இருக்கும் உமா ஆனந்தன், பல சர்ச்சைக்குரிய கருத்துக்களைப் பேசியிருக்கிறார். திராவிடத் தந்தையான பெரியாரைப் பற்றிப் பேசும்போது, "என்ன பண்ணி கிழிச்சிட்டார் பெரியார்?" என்று கேட்டார். மகாத்மா காந்தியைப் படுகொலை செய்த நாதுராம் கோட்சேயைப் பாராட்டி, "ஆமாம், நான் கோட்சே ஆதரவாளர்" என்றார். சாதிக்கு ஆதரவாகப் பேசி, "ஜாதிகள் இருக்கிறது, அது நம் கலாச்சாரத்தின் ஒரு அங்கம். ஜாதிகள் இல்லை என்றால் நம்முடைய கலாச் சாரம் கிடையாது, பிராமண குலத்தைச் சேர்ந்தவள் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப் படுகிறேன்" என்றார். 134 ஆவது வார்டான, பிராமணர்கள் பெரும்பான்மையாக இருக்கிற மேற்கு மாம்பலம் பகுதியில், பா.ஜ.க. சார்பில் இவர் போட்டியிடுகிறார்.

தன்னுடைய நீண்டகாலக் கூட்டணிக் கட்சியான அ.இ.அ.தி.மு.கவை விட்டு, இந்த உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க. தனியாகப் போட்டியிடுகிறது. முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியான அண்ணாமலை, தேர்தல் வெற்றியைப்பற்றி மிகவும் தெம்புடன் இருக்கிறார். உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால்தான் 2026இல் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சிக்கு வரமுடியும் என்று பேசுகிறார். கடந்த ஐம்பது ஆண்டுகளாக திமுக மற்றும் அ.இ.அ.தி.மு.கவால் ஆதிக்கம் செலுத்தப்பட்டுவருகிற தமிழ்நாட்டில் பா.ஜ.கவுக்கு போதிய ஆதரவு இல்லை என்பதால் இது ஒரு நீண்ட கனவுதான். ஆனால், கடந்த 4, 5 ஆண்டுகளாக தன்னுடைய தேசியவாதக் கருத்துக்களையும் தன்னுடைய எண்ணங்களையும் பேச்சுகள், தலைவர்களின் பேட்டிகள், சமூக வலைத்தளப் பிரச்சாரங்கள் மூலமாக சரியாக திட்டமிட்டு, திராவிட மண் ணில் வேர் விட்டுக் கொண்டி ருக்கிறது பா.ஜ.க. தங்களுக்கு வாக்கு அளித்தால் டில்லியில் உள்ள மோடி அரசின் ஆதரவு கிடைக்கும் என்பதாலும், உள்கட்டமைப்பு மற்றும் தொழிற்சாலைகளில் முதலீடு மூலமாகவும் தமிழ்நாடு முன்னேறும் என்றும் மக்களிடம் பா.ஜ.கவினர் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

அ.இ.அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து பாமகவும் விலகிவிட்டது. முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் கட்சி அமைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம் ஆகிய இருவருக்கும் இடையில் மோதல் பெரிதாகிக்கொண்டே போகிறது. அ.இ.அ.தி.மு.கவுக்கு 1.5 கோடி தொண்டர்கள் உண்டு என்று அம்மா ஜெயலலிதா பெருமிதத்துடன் கூறியிருந்தார். டிசம்பர் 2016இல் அவர் மறைந்த பிறகு, தொண்டர்களின் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே வருகிறது. எம்.ஜி.ஆரின் கட்சி இருட்டை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

ஒரு பெரிய ஆச்சரியம் என்னவென்றால், உள்ளாட்சித் தேர்தலில் ஆளுங்கட்சியான தி.மு.கவுக்கு பெரிய சவாலாக இருக்கப்போவது பிற அரசியல் கட்சிகளின் போட்டி அல்ல, நடிகர் விஜயின் ரசிகர் மன்றங்களின் வேட்பாளர்கள்தான். தேர்தலில் போட்டியிடுவதுபற்றி 'தளபதி' என்று அழைக்கப்படும் விஜய் எதுவும் சொல்லவில்லை என்றாலும், அவரது ரசிகர் மன்றம் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது. இயக்கத்தின் பொதுச் செயலாளர் பஸ்ஸி ஆனந்த், "சென்ற ஆண்டு ஊராட்சித் தேர்தல்களில் பெற்ற வெற்றியைவிட கூடுதலாக மக்களின் வரவேற்பைப் பெறுவோம் என்று நம்பிக்கையுடன் இருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார். சென்ற ஆண்டு தளபதி விஜய் மக்கள் இயக்கத்தின் சார்பாகப் போட்டியிட்ட 169 வேட்பாளர்களில் 129 பேர் வெற்றிபெற்றனர். நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சிகள் ஓர் இடத்தில்கூட வெற்றி பெறாத தேர்தலில், விஜயின் வெற்றி அரசியல் தலைவர்களை அதிர்ச் சியில் தள்ளியது.

"சென்ற தேர்தலைப்போலவே இப்போதும் எங்கள் வேட்பாளர்கள் சொந்த உற்சாகத்தால் போட்டியிடுகிறார்கள். எங்கள் பக்கத்திலிருந்து எந்தவிதமான விஷயங்களும் சொல்லப்படவில்லை. ஆனால், இயக்க செயலாளர்களை முடிந்தவரையில் உதவி செய்யுமாறு சொல்லியிருக்கிறோம். அவர்கள் சுயேச்சையாகப் போட்டியிடுவார்கள், இயக்கத்தின் பெயர் மற்றும் பனர்களை அவர்கள் பயன்படுத்துவதற்கும் தளபதி அனுமதி அளித்திருக்கிறார். உறுப்பினர்களின் நலனில் அவர் அக்கறையுடன் இருக்கிறார். தேர்தலில் போட்டியிடுவதால் யாரும் கடனாளியாகிவிடக்கூடாது என்று அவர் ஏற்கனவே கூறியிருக்கிறார்" என்று பஸி ஆனந்த் கூறினார்.

அரசியல் வல்லுநர்களும் சமூக அறிஞர்களும், சினிமாக்காரர்களின் மவுசுக்குத் தமிழக மக்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைக் குறித்து கவலை தெரிவிக்கிறார்கள். செின். ஜோர்ஜ் கோட்டையில் அடுத்தடுத்து கோலிவுட் ஹீரோக்களையே பதவியில் அமர்த்துவதற்கு மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர் தவிர இந்த சினிமா நடிகர்கள் யாருக்கும் சாதாரண மனிதர்களின் பிரச்னைகளைப் பற்றித் தெரியாது. வளர்ந்த நாடுகளில், கல்வியறிவு பெற்ற வாக்காளர்கள், தகுதியும் பொது சேவையில் அக்கறை உள்ளவர்களையும் மட்டுமே தேர்ந்தெடுக்கிறார்கள். அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பா, சிங்கப்பூர், அவுஸ்தி ரேலியா போன்ற நாடுகளில் சில மக்கள் பிரதிதிகள் மிகவும் இளையவர்களாக இருக்கிறார் கள். ஆனால், இந்தியாவில் இதைப் பார்க்க இயலவில்லை. அரசியல் கட்சியின் ஆள்பலமும் பண பலமும் இருந்தால், வயது மற்றும் கல்வித் தகுதி இல்லாதவர்களும்கூட சட்டமன்றத்துக்கோ பாராளுமன்றத்துக்கோ போக முடியும். நிறைய பணம் இருப்ப வர்கள், பணத்தைக் கொடுத்தாவது கூட்டத்தைக் கூட்டக்கூடியவர்கள் ஆகிய வர்களையே அரசியல் கட்சிகள் முன் வைக்கிறார்கள். சிலருக்கு குற்றப் பின்னணியும் உண்டு.

உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரை திமுக ஒரு நல்ல நிலையில் இருக்கிறது. திமுகவுக்கு பெரும்பான்மையான இடங்கள் கிடைக்கலாம். சென்னை மாநகராட்சியின் மேயராக ஒடுக்கப்பட்ட தலித் பெண்மணி ஒருவர் இருப்பார் என்று அறிவித்ததன் மூலம் ஸ்டாலின் பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறார். மே மாதம் நடந்த சட்டமன்றத் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை ஸ்டாலின் நிறைவேற்றவில்லை என்றும், எட்டு மாத தி.மு.க. ஆட்சியால் மக்கள் ஏற்கனவே ஏமாற்றத்திலும் கோபத்திலும் இருக்கிறார்கள் என்றும் பிரதான எதிர்க்கட்சிகளான அ.இ.அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் பிரச்சாரம் செய்துவருகின்றன.

பத்து ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்கின்றன. நீதிமன்ற வழக்குகளாலும், பிற கட்சிகளோடு உள்ளாட்சி அமைப்புகளில் அதிகாரப் பங்கீடு செய்துகொள்ள விரும்பாத ஜெயலலிதாவின் தயக்கத்தாலும் இந்தத் தாமதம் ஏற்பட்டது.

மீண்டும் சந்திப்போம், சிந்திப்போம்,
வணக்கம்.








# “கனிய மணல் அகழ்வு என்னும் போர்வையில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்காதே”

## கொக்கிளாய் நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 13

கனிய மணல் கூட்டுதாபனத்தால் இல்மனையிட் அகழ்வுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களான கொக்கிளாய் தொடக்கம் செம்மலை கிழக்கு வரையான தமிழ் மக்களுக்கு சொந்தமான பூர்வீக நிலங்களை அளவீடு செய்து ஆக்கிரமிக்கும் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொக்கிளாய் கிராம மக்களால் நேற்று கொக்கிளாய் இல்மனைட் கூட்டுத்தாபனப் பொறித்தொகுதிக்கு முன்னால் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு கொக்கிளாய் கிராம மக்கள் 16 பேருக்கு சொந்தமான 44 ஏக்கர் உறுதி காணிகள் மற்றும் அனுமதிப்பத்திரக் காணிகளை மக்களின் அனுமதியின்றி அபகரித்து வேலி அமைத்து கொக்கிளாய் இல்மனையிட் பொறித் தொகுதி அமைத்துள்ள கைத்தொழில் அமைச்சின் கீழான இலங்கை கனிப் பொருள் மணல் லிமிட்டெட், அந்த செயற் திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கோடு கொக்கிளாயிலிருந்து செம்மலை கிழக்கு வரையான தமிழ் மக்களுக்கு சொந்தமான பூர்வீக நிலங்களை அளவீடு செய்து கையகப்படுத்தும் நடவடிக்கையை கடந்த சில வாரங்களாக இரகசியமாக முன்னறிவித்தல் எதுவுமின்றி முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்டமாக கொக்கிளாய் கிராமத்தில் கடந்த காலபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்கள் மேட்டு காணிகள், குடியிருப்பு நிலங்கள் சேமக்காலை, குளம் போன்றவற்றை உள்ளடக்கி அளவீடுகளை மேற்கொண்டு எல்லைப்படுத்தும் நடவடிக்கையை நில அளவை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நில அளவை நடவடிக்கை தற்போது கரையோரமாக கொக்குத்தொடுவாய் கிராமமாம் வரை இடம்பெற்றுள்ளதோடு எதிர்காலத்தில் கடற் கரையோரத்திலிருந்து சுமார் 600 மீற்றர் அகலமும் 12 கிலோ மீற்றர் நீளமும் கொண்ட தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை உள்ளடக்கி விஸ்தரிக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த காணி கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அளவீடு செய்யப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை கையகப்படுத்துவதை நிறுத்துமாறுகோரியும் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் வண்ணம் மேற்கொள்ளப்படவிருக்கும் இல்மனைட் அகழ்வு திட்டத்தை நிறுத்துமாறு கோரியும் கொக்கிளாய் எல்லை கிராம மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கொக்கிளாய் பாடசாலை முன்பாக ஆரம்பித்த இந்த எதிர்ப்புப் போராட்டம், அபகரிக்கப்பட்டுள்ள நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இல்மனைட் பொறித்தொகுதிவரை சென்று அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், எமது நிலமே எமது உரிமை , கொக்கிளாய் எமது பூர்வீகம் , கனிய மணல் அகழ்வு எனும் போர்வையில் காணி பறிக்கவா இந்த திட்டம், நிலமிழந்து போனால் பலமிழந்து போவோம் , வளங்களை சுரண்டிவிட்டு எங்கள் நிலங்களை பறிக்கவா இந்த நாடகம் போன்ற கோசங்களை தாங்கிய பதாதைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் , கொக்கிளாய் பங்குத்தந்தையர்கள் , பொத்துவில் தொடக்கி பொலிகண்டி பேரெழுச்சி இயக்கத்தை சேர்ந்த வேலன் சுவாமி, பொது மக்கள், ஆர்வலர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (அ)

# வடிவேல் சுரேஷ் தலைமையில் ஹப்புத்தளையில் போராட்டம்

கொழும்பு, பெப். 13

ஹப்புத்தளை நகரில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷின் தலைமையில் மாபெரும் புரட்சி போராட் டம் ஒன்று நேற்று நடைபெற் றது.

அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தவும் மலையக மக்களின் இருப்பை உறுதி செய்யவும் அவர்களுடைய தொழில் பிணக்குகள் தொடர்பாகவும் இந்த போராட்டத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பெருந்தோட்ட கம்பெனிகளின் அடாவடி நிர்வாகத்துக்கு பதிலடி கொடுக்கும் நோக்குடனும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் உரத் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதோடு, விவசாயிகளை பாதுகாக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வடிவேல் சுரேஷ்,

அனைத்து வளங்களும் நிறைந்த நம் இலங்கைத் திருநாடு இன்று வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றது.

குழந்தைகள் குடிப்பதற்கு பால் மா இல்லை அரிசி தட்டுப்பாடு உரத்தட்டுப்பாடு பெருந்தோட்ட மக்கள் தேயிலை கொழுந்தை உண்ணவேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

மேலும் 1000 ரூபாய் சம்பளம் என்ற கபட நாடகத்தில் சிக்கித் தவிக்கின்ற பெருந் தோட்ட மலையக மக்களை தொடர்ந்து வஞ்சித்து கொண்டிருக்கின்ற பெருந் தோட்ட நிர்வாகங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு.

மலையக மக்களின் உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் இருப்பையும் தக்க வைத்துக் கொள்ள இன்று வீதிக்கு இறங்கி இருக்கின்றோம் இது முடிவல்ல ஆரம்பம்-என்றார்.

# சில்லறை வர்த்தகரை கடத்தி கப்பம் கோரிய இருவர் கைது

கொழும்பு, பெப். 13

கண்டி - தெல்தோட்டை யில் சில்லறை கடை உரிமையாளரை கடத்தி கப்பம் கோர முயன்ற 33 மற்றும் 26 வயதான இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெல்தோட்டையிலுள்ள வீடொன்றில் தலைமறைவாகியிருந்த நிலையில், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

தெல்தோட்டை - வி - சந்திரமலை பகுதியில் உள்ள சில்லறை கடை ஒன்றின் உரிமையாளர் நேற்று முந்தினம் இரவு லொறி ஒன்றில் சென்றவர்களால் கடத்தப்பட்டார்.

54 வயதான குறித்த வர்த்தகரை 3 இலட்சம் ரூபா கப்பம் கோரி சந்தேகநபர்கள் கடத்தியுள்ளனர்.

லொறியை கலஹா பகுதியில் இரவு நேர சோதனைச் சாவடி யில் நிறுத்தாமல் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், பெல்வுட் பகுதியில் இயந்திரக் கோளாறு காரணமாக லொறி நிறுத்தப்பட்டபோது, அதிலிருந்து தப்பிய வர்த்தகர் பொலிஸ் நிலையத்துக்கு சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கமைய, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறியை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

குறித்த வர்த்தகர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)


# தேவை

தென்னை தோட்ட பராமரிப்புக்கு
தனிநபர் அல்லது குடும்பத்தினர் தேவை.
தங்குமிட வசதி உண்டு.

**கண்ணகி அம்மன் தேவஸ்தானம்**
**புங்குடுதீவு 10ஆம் வட்டாரம்**
**தொ.பெ இல. 077 788 7824**


# மரண அறிவித்தல்



**மலர்வு** 05 - 05 - 1943

**உதிர்வு** 11 - 02 - 2022

## தாமோதரம்பிள்ளை தம்பித்துரை

காளி கோவிலடி பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை நேற்றுமுன்தினம் (11.2.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரதீபன், பிரசாத், நிருபா, வினோஜிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாத்கோகுலன்,லக்சன் ஆகியோரின் மாமனாரும் திஸா, ஆதிஷ், பவிஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில இடம் பெற்று பூதவுடல் தீர்த்தாங்குள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு :
077 036 6445, 075 042 2250

## சுகாதாரத்துறை...

நோக்கியுள்ளனர்.

ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத்தின் கையொப்பத்துடன், நேற்று முன் தினம் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில், வைத்தியசாலை சேவைகள் மற்றும் மின் விநியோகம் என்பன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, மின்சார விநியோகம், வைத்தியசாலைகள், சிகிச்சையகங்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, உபசரிப்பு, சிகிச்சை ஆகியவை தொடர்பில் ஆற்றப்படவேண்டிய அனைத்து அவசியமான அல்லது தேவைப்படும் தேவைகள் மற்றும் பணிகள் என்பன அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும், தங்களின் கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கும் வரையில், பணிப்புறக்கணிப்பு தொடரும் என சுகாதார தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த போராட்டத்தை உடனடியாக கைவிடுமாறு, அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்துக்கும், அதன் தலைவர் சமன் ரத்னப்பிரியவுக்கும் நீதிமன்றம் கடந்த தினம் தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

வைத்தியசாலை சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் நீதிமன்ற தடை உத்தரவு என்பன தொடர்பில், நீதி அமைச்சின் ஆலோசகர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி. சில்வா விளக்கமளித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குறித்து, அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்த முடியும். அந்தக் குற்றசாட்டு அவர்களுக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர், அவர்கள் அது தொடர்பில் விளக்கமளிக்க முடியும்.

அந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், அவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கக்கூடிய அல்லது சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய இயலுமை நீதிமன்றத்திற்கு உள்ளதாக நீதி அமைச்சின் ஆலோசகர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி. சில்வா தெரிவித் தார்.

இதேவேளை, நீதிமன்ற தடை உத்தரவை பின்பற்றாத தொழிற்சங்கங்களின் தலைவர்களைக் கைதுசெய்ய வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ)

## சுகாதார...

பயன்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் கட்சிகள் குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள, அந்த அரசியல் கட்சிகளின் அனுசரணையில் நடக்கும் தொழிற்சங்க போராட்டங்கள் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் விஜித ஹேரத் மீது நடத்தப்பட்ட முட்டை தாக்குதல் மற்றும் கல்வீச்சு தாக்குதலுக்கு இணையான தாக்குதலை போன்று போராட்டக்காரர்களுக்கு எதிராக பெட்டன் பொல்லு தாக்குதல் நடத்தவேண்டும்.

மக்கள் தமது அதிருப்தியை வெளிக்காட்ட இருக்கும் ஒரே வழி பெட்டன் பொல்லு தாக்குதல். அரசியல் கட்சிகளின் உதவியை பெறும் தொழிற்சங்கங்களுக்கு அரசாங்கத்துடன் பிரச்னைகள் இருந்தால், மக்களை சிரமத்திற்கு உள்ளாக்காது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# மேலும் 23 பேர் மரணம்

கொழும்பு, பெப். 13

நாட்டில் நேற்றைய தினம் 23 கொவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,777 ஆக அதிகரித்துள்ளது.

# சில இடங்களில் மின் தடை

கொழும்பு, பெப். 13

நேற்று பிற்பகல் முதல் பல பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மின் கட்டமைப்பில் சுமார் 400 மெகாவோட் மின்சாரம் இழப்பு ஏற்பட்டமையே மின் தடைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

களனிதிஸ்ஸ மற்றும் கெரவலப்பிட்டிய அனல் மின் நிலையங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார...

பிரகாரம், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நாடு எதிர்கொள்ளும் நான்கு முக்கிய சவால்களை அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

01. 2020 ஏப்ரலில் இருந்து சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் சர்வதேச நிதிச் சந்தைகளில் இருந்து இலங்கை கடன் பெறுவதற்கான வாய்ப்புகளை இழந்தமையே இதன் மையக்கருமாகும்.

02. இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு மாதாந்தம் தேவையான இறக்குமதிக்குக் கூட போதுமானதாக இல்லாத காரணத்தினால், சுதந்திரத்திற்குப் பின்னர் மிகக் குறைந்த அந்நியச் செலாவணியை நாடு கொண்டுள்ளது.

03. 2020 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட அரசாங்க வருவாயில் 70 வீத கடன் வட்டி செலவினம் இதுவரை பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த கடன் வட்டி விகிதமாகும்.

04. கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த பொதுக் கடனை 95 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை உயர்த்திய நான்கு காரணிகள் இவை.

மேற்கூறியவை மிகப்பெரிய பொருளாதார சவாலை பிரதிபலிக்கிறது என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பஸில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர முன் நின்று செயற்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருக்கு எதிராக அரசாங்கத்திற்குள் நடக்கும் செயற்பாடுகள் நன்றி கெட்ட செயல்.

இவர்களை அரசாங்கத்தில் இருந்து நீக்கினால். அரசாங்கத்தின் பயணமும் முடிவுக்கு வந்து விடும்.

அதேபோல தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சமன் ரத்னப்பிரிய,தான் தலைவராக பதவி வகிக்கும் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தில் இருந்து நீக்கிய நபர். சமன் ரத்னப்பிரிய பாம்பை போன்றவர் -என்றார். (அ)

## தமிழ்...

பாதுகாப்பதற்கும் எந்த ஆட்சியாளர்களும் ஆயத்தமில்லை என்பதையே பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தமென முன்வைக் கப்பட்டுள்ள முன் மொழிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்னையை சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் தலைவர்கள் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு தவறியது மட்டுமல்ல அரசியல் போராட்ட எழுச்சியை அடக்குவதற்கு பயங்கரவாத சட்டம் உருவாக்கப்பட்டதோடு அச்சட்டம் நான்கு தசாப்தங்கள் கடந்தும் இன்றும் பாதுகாக்கப் படுகின்றது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இக்கொடிய சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கூறினாலும் உள்நாட்டு மனித உரிமை ஆணைக்குழு இச்சட்டம் அகற்றப்படுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இவர்களும் ஆட்சியாளர்களின் கருவியாக செயல்படுவதே இதற்கான காரணமாகும்.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான மக்கள் சக்தியை வடகிழக்கிலும், வட கிழக்கிற்கு வெளியிலும் கட்டியெழுப்புவதற்கான தேவை எழுந்துள்ளது. -என்றுள்ளது. (அ)

## ஜெனிவாவில்...

நடைமுறையை பின்பற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

ஏற்கனவே பிரிட்டன் இலங்கைக்கு எதிராக இம்முறை மனித உரிமைகள் பேரவையில் யோசனை ஒன்றை முன் வைத்துள்ளது. அந்த யோசனையின் வரைவு அரசாங்கத்தின் கைகளுக்கு கிடைத்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதனடிப்படையில் இம்முறை யோசனை முன்வைக்கப்படும்போது வாக்கெடுப்பை கோராது யோசனையுடன் முன்நோக்கி செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## அரச தாதிய...

மானித்துள்ளது.

அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய இதனை தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய போராட்டத்தை தற்காலிகமாக கைவிடத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும், ஏனைய தொழிற்சங்க ஊழியர்களின் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார். (அ)

## எரிபொருள்களின்...

எரிபொருட்களின் விலைகளையும் அதிக ரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக கனிய வள கூட்டுத்தாபனத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம், தற் போது டீசல் ஒரு லீற்ற ருக்காக சுமார் 50 ரூபா நட்டத்தையும், பெற்றோல் ஒரு லீற்றருக்காக சுமார் 15 ரூபா நட்டத்தையும் எதிர்நோக்கியுள்ளதாக அவர் குறிப்பிட் டார்.

எவ்வாறிருப்பினும், முன்னதாக கருத்து தெரிவித்திருந்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, டீசல் ஒரு லீற்றருக்காக 35 ரூபாவும், பெற்றோல் ஒரு லீற்றருக்காக 5 ரூபாவும் நட்டம் ஏற்படுகின்றதென கனியவள கூட்டுத்தாபனம் அறியப்படுத்தி இருந்ததாக குறிப்பிட்டிருந்தார்.

இதேநேரம், லங்கா ஐ.ஓ.சி நிறுவனம், கடந்த ஆறாம் திகதி நள்ளிரவு முதல், எரிபொருட்களின் விலைகளை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எரிபொருள்...

காட்டினார்.

ஆனால், மேல் தட்டு வர்க்கத்தின் செல்வாக்குக் காரணமாக தனது கோரிக்கை நிறைவேற்றப் படவில்லை என்றும், மேல்தட்டு மக்கள் இத் தகையமுறையை விரும்ப வில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## பயங்கரவாத...

படவுள்ளது.

இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் மனித உரிமை செயல்பாட்டாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமை கள் சபையின் 49 ஆவது கூட்டத்தொடர் பெப்ர வரி இறுதியில் ஆரம்ப மாகின்றது.

இந்நிலையில், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற் பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட மூலத்தை வெளிவிவகார அமைச் சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத் தார்.

எனினும், நடைமுறையில் உள்ள சட்டத்துக்கும், புதிதாக முன்வைக்கப்பட்ட சட்ட திருத்தத்துக்கும் இடையில் பாரிய வித்தியாசம் எதுவும் இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சட்டமூலம் முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும் அல்லது தற்போது அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியே இந்தக் கையெழுத்து வேட்டை இடம்பெறுகின்றது. (அ)

## பொதுமக்களுக்கு...

கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கோவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் அதே சமயம், நாட்டின் அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, சுமார் இரண்டு வருடக் காலமாக நாட்டை மூடி வைத்ததால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, தற்போது படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில் வல்லுநர்களுடனான முதலாவது மாநாடு, ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி எதிர்பார்க்கும் இலக்கை அடைவதற்குத் தேவையான பலத்தைப் பெற்றுக்கொடுத்து, தேசிய வேலைத்திட்டத்தை வெற்றிகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக, இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த தொழில் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி வேலைத்திட்டங்கள் தொடர்பில், பெரும்பாலான மக்கள் நேர்மறைச் சிந்தனையுடனேயே காணப்படுகின்றனர். அதனால், குறுகிய அரசியல் நோக்கத்தில் முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களைப் புறக்கணிப்பதாக, அங்கு கூடியிருந்தவர்கள் குறிப்பிட்டனர்.

முழு உலகமும் பெரும் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ள இத்தருணத்தில், இலங்கையானது படிப்படியாக முன்னோக்கி நகர்ந்து வருகின்றது என்றும் எடுத்துரைத்தனர்.

ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட புதிய விவசாயப் புரட்சிக்கு, அந்தத் துறைகளில் முழுநேரம் வேலை செய்யும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் முனைவோரின் ஆதரவு, தேவைப்படும் எந்நேரத்திலும் வழங்கத் தயாராக இருப்பதாகத் துறைசார் நிபுணர்கள் தெரிவித்தனர்.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களை நோக்கி நகர்வதற்கான தேவையை எடுத்துரைத்த நிபுணர்கள், அதற்காகப் பிரவேசிக்கும் போது எதிர்கொள்ளும் தடைகளைத் தகர்த்தெறிய, அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறினர். (அ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 - 11 - 1951 | 11 - 02 - 2022 |



## நாகேசு தியாகராசா

யாழ். தச்சந்தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Villejuif ஐ வதிவிடமாகவும் கொண்ட நாகேசு தியாகராசா அவர்கள் 11.02.2022 வெள்ளிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேசு – தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரி(தேவி) அவர்களின் அன்புக் கணவரும்,அற்புதமலர் (ஜேர் மனி), ஆனந்தகுமாரி(பிரான்ஸ்), காந்தரூபி (பிரான்ஸ்), சிவகுமார்(பிரான்ஸ்), சிவானந்தம்(பிரான்ஸ்), செல்வ மதி(பிரான்ஸ்), சிவலோகன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பாலச்சந்திரன்(ஜேர்மனி), சிறி (பிரான்ஸ்), ரத்னலிங்கம்(பிரான்ஸ்), சோபா (பிரான்ஸ்), சர்மிளா(பிரான்ஸ்), சுரேஸ்(பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், துரை சிங்கம்(இலங்கை), காலஞ்சென்ற கனகரத்தினம், திலகவதி(இலங்கை), தியாகபதி (பூசா– சுவீடன்), காலஞ் சென்றவர்களான திருஞானசம்பந்தம், தில்லைநடராசா மற்றும் திருலோகசிங்கம்(லெப்பை– பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சரஸ்வதி (இலங்கை), கைலாசபதி(இலங்கை), சிவபாலன்(இலங்கை), ராதா கிருஷ்ணன்(நோர்வே), செல்வி(இந்தியா), லஷ்சுமி (பிரான்ஸ்), தங்கராசா(இலங்கை), பரமேஸ்வரி (மணி – இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றஜித்தனா, ஜெய்சாந், கஜித்தனா, சஞ்சிதா (ஜேர்மனி), சிறித்னா, சஜிதா, நிருஜன்(பிரான்ஸ்), கிஷாந்தன், கீர்த்திகா(பிரான்ஸ்), சினோஜா, சிவாஜன், சினோஜினி (பிரான்ஸ்), சினேகன், சினேதா, சினேஸ், சினேதாஸ், சினேசா(பிரான்ஸ்), லஷ்சிதா, சந்தோஸ் (பிரான்ஸ்), சிவானி, சினோஜன், சிவேதா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 13 Feb 2022 10:00 AM - 12:00 PM
Monday, 14 Feb 2022 3:00 PM - 5:00 PM
Tuesday, 15 Feb 2022 3:00 PM - 5:00 PM
FUNESPACE 49-51 Quai Jules Guesde, 94400 Vitry-sur-Seine,

கிரியை :
Wednesday, 16 Feb 2022 9:30 AM - 11:15 AM
FUNESPACE 49-51 Quai Jules Guesde, 94400 Vitry-sur-Seine,

தகனம் :
Wednesday, 16 Feb 2022 12:15 PM - 1:15 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

தொடர்புகளுக்கு :
**குமார் - மகன்**
**Mobile : +33612657353**
**சிறி - மருமகன்**
**Mobile : +33664850770**
**லோகன் - மகன்**
**Mobile : +33695613943**
**சின்னகிளி - உறவினர்**
**Mobile : +33698217475**
**லெப்பை - சகோதரன்**
**Mobile : +33624185124**
**சுரேஸ் - மருமகன்**
**Mobile : +33651963261**
**தம்பி - சகோதரன்**
**Mobile : +33651184479**

தகவல்:
**குடும்பத்தினர்**

# கடன் செலுத்துகையை பிற்போட்டாலேயே நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைக்கும்!

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

*வவுனியா, பெப். 13*

நாட்டின் கடனை திரும்பச் செலுத்த வேண்டியவர்க ளோடு உடனடியாக ஒரு பேச்சுவார்த்தையை ஆரம் பிக்கவேண்டும். அப்படி செய்தாலே அந்நிய செலா வணி கிடைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ. சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் ஏற்ப்பட்டுள்ள பொருளாதார நிலைமை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கட்சித் தலைவர்கள் சிலரை அழைத்திருந்தேன். ஜனவரி27 ஆம் திகதி மூடிய அறைக்குள்ளே அந்த கலந்துரையாடலை நடத்தியிருந்தோம். இது தொடர்பாக எங்களுக்கு தெளி வூட்டுவதற்காக சில பொருளாதார நிபுணர்களையும் நாங்கள் அழைத்திருந்தோம். அவர்களுடனான கலந்துரையாடலின்போது சரித்திரத்திலே என்றுமே இல்லாத அளவுக்கு எமது பொருளாதார நிலமை வீழ்ச்சி யடைந்திருப்பதை உணரமுடிகின்றது.

எனவே இதிலிருந்து மீள்வதற்காக நாம் தொடர்ச்சி யான பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்தோம். அத்துடன் அரசாங்க தரப்பில் நாம் கோரவேண்டிய மூன்று விடயங்கள் குறித்தும் ஒருமித்திருந்தோம்.

அது தொடர்பாக 12 பேர் எழுத்துமூலம் கைச்சாத்திட்டு அதனை வெளிப்படுத்தியிருக்கிறோம், அதில் முதலாவதாக கடன் திரும்பச் செலுத்த வேண்டியவர்களோடு உடனடியாக ஒரு பேச்சுவார்த்தை யினை ஆரம்பிக்கவேண்டும். அப்படியாக ஆரம்பித்து கடன் செலுத்துகின்ற திகதிகளை பிற்போட்டு செலுத் தும் தொகை தொடர்பாகவும் அவர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தினால் தான் அந்நிய செலாவணி உடனடியாக கையிலே கிடைக்கும்.

கிடைக்கும் அந்த அந்நியசெலாவணியை அத்திய வசியமாக உணவு, மருந்து, எரிபொருள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக நாங்கள் விநியோகிக்க வேண்டும். இந்தப்பேச்சுவார்த்தைகளின்போது நிபந்தனைகள் சிலவற்றுக்கு நாம் இணங்கவேண்டி வரும். அந்த நிபந்தனைகள் எதுவுமே எமது நாட்டில் இருக்கின்ற ஏழை மக்களை தாக்காதவாறு நாம் பார்த் துக் கொள்ளவேண்டும். அவர்களது பாதுகாப்புக்காக நாட்டிலே இருக்கும் அரண்களை நாம் தகர்க்கவிடக் கூடாது. அதுகுறித்து நாம் கவனெமெடுத்து இந்த பேச்சுவார்த்தையிலே ஈடுபடவேண்டும். ஆகிய முன்மொழிவுகளை நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம்- என்றார். (அ)

# சிறுபோக நெற் பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பணியில் இராணுவம்

*கொழும்பு, பெப். 13*

சிறுபோகத்தில், நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில், அனைத்து மாவட்டக் குழுக்களையும் பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில், இராணுவ அதிகாரி ஒருவரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணு வத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையான சிறுபோக காலப்பகுதியில், நெற் பயிர்ச்செய் கையில் ஈடுபடும் விவசாயிகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் உரிய விளைச்சலைப் பெற்றுக்கொள்ளல் என்பன இதன் நோக்கமாகும் என அவர் கூறினார்.

இதன்படி, கமநல சேவை மத்திய நிலையம் மற்றும் மாவட்ட குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகை யில், அதன் ஒருங்கிணைப்பு பணிகளுக்காக, அனைத்து மாவட்டங்களுக்கும் இராணுவ அதிகாரிகள் ஈடுபடுத் தப்படவுள்ளனர். (அ)

# மத்தள விமான நிலையத்திலிருந்து நேரடி விமான சேவை ஆரம்பம்

*கொழும்பு, பெப். 13*

மத்தள விமான நிலையத்துக்கும் உஸ்பெகிஸ்தானுக் கும் இடையில் நேரடி விமான சேவை ஆரம்பமாகி யுள்ளது.

உஸ்பெகிஸ்தான் விமான சேவைக்கு சொந்தமான யுஇசற்.பி 3525 என்ற விமானம் 135 சுற்றுலா பயணிக ளுடன் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தது.

குளிர்பருவ காலத்தில் இலங்கையை இலக்காகக் கொண்டு இந்த விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இந்த விமானத்தின் மூலம் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள், வரவேற்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (அ)







# ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் 13ஆம் ஆண்டு நினைவுதினம் யாழில்







*யாழ்ப்பாணம், பெப். 13*

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் பு.சத்தியமூர்த்தி யின் 13 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்றது.

யாழ். ஊடக அமையத்தின் இணைப்பாளர் கு.செல் வக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவுதின நிகழ்வில் அவரின் திருவுருவப் படத்துக்கு சத்திய மூர்த்தியுடன் பணியாற்றிய ஊடகவியலாளர் இளங் கீரன் தீபமேற்றி மாலை அணிவித்தார். தொடர்ந்து சக ஊடகவியலாளர்கள் மலரஞ்சலி செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன் நினைவுப் பேருரையாற்ற நன்றி உரையை இளங்கீரன் ஆற்றினார்.

ஊடகத்துறையில் 1990களில் இருந்து ஈடுபடத் தொடங்கிய இவர், 2009 பெப்ரவரி 12ஆம் திகதி இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலில் சிக்கி படுகாயமுற்று உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-திருப்பாச்சி
4.30 மணி : உதவும் கரங்கள்



5.00 மணி : COFFE WITH பிரமுகர்-ஈழத்து நடிகர் மிருணன்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
7.00 மணி : SPOTLIGHT- யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்-காதலர் தின சிறப்பு



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவா ஒளி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு